பக்கங்கள்: முப்பத்து இரண்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 16 வெள்ளிக்கிழமை (29.04.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 154



02 மண்டியிட்டார் சேவாக்



07 மாநகர முதல்வரின் அடாவடித்தனம்



16 பெரிய இடத்து சம்பந்தம்



25 ராஜபக்ஷவை விசாரணை செய்



31 மிருசுவில் எண்மர் படுகொலை

# நிபுணர்குழு அறிக்கையினை புனைகதை என்கிறது அரசு

## அறிக்கைக்கு எதிராகக் கே.பியின் உதவி அரசுக்கு

கொழும்பு, ஏப். 29

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிரான ராஜதந்திர நகர்வுகளில் தேவைப்பட்டால் கே.பி எனப்படும் குமரன் பத்மநாதனையும் அரசு பயன்படுத்திக் கொள்ளும் என்று தெரிவித்தார் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் கூட்டத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதே அவர் இப்படிக் கூறினார்.(உ)

## எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கும் ஏற்பாடில்லை என்கிறார் பீரிஸ்

கொழும்பு, ஏப்ரல் 29

**ஐக்கிய நாடுகள் சபைப் பொதுச் செயலாளரின் நிபுணர் குழுவின் அறிக்கை ஒரு புனைகதை என்று வர்ணித்துள்ளது இலங்கை அரசு.அத்துடன் ஐ.நாவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்தும் எந்த உள்நோக்கமும் அரசுக்குக் கிடையாது என்றும் அரசு தெரிவித்துள்ளது.**

ஐ.நா. பொதுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையை இலங்கை அரசு அடியோடு நிராகரித்தாலும் அதனால் ஏற்படப் போகும் விளைவுகளை எதிர்கொள்வதற்கான ராஜதந்திரப் போரை அது ஆரம்பித்துள்ளது.

அதன் முதற்கட்டமாக (29ஆம் பக்கம் பார்க்க)

## நிலையான சமாதானம் வேண்டுமானால் முறையான விசாரணை நடத்தவேண்டும்

### நிபுணர் குழு அறிக்கை குறித்து பிரிட்டன்

லண்டன், ஏப்.29

இலங்கையில் நிலையான சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாக முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது அவசியம் எனப் பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது.

இந்த நிலையில் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளுக்குப் பிரிட்டன் பூரண ஆதரவு வழங்குவதாகவும், அதனை வரவேற்பதாகவும் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

குற்றச் செயல்கள் தொடர்பாகப் பக்கச்சார்பற்ற சுயாதீன விசாரணைகள் நடத்தப்படுவதுடன், நிபுணர் குழுவால் சுமத்தப்பட்டுள்ள பெரும் மனித உரிமை (29ஆம் பக்கம் பார்க்க)

## விந்தனின் சவாலை ஏற்றார் முதல்வர்

யாழ்ப்பாணம், ஏப்.29

சரியான தளமிட்டு விவாத மேடையை அமையுங்கள் நாங்கள் விவாதத்தில் கலந்து கொண்டு உரிய விளக்கங்களை அளிக்கத் தயாராக உள்ளோம் என யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா கூறினார்.

யாழ். மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று (29ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை சுதந்திரப் போராளிகள் எனக்கூறும் நிபுணர் குழு அறிக்கையை நம்புவது எப்படி?

கொழும்பு, ஏப்ரல் 29

புலிகளைச் சுதந்திரப் போராளிகள் என்றும் உலகத்திலேயே ஒழுக்கமானவர்கள் என்றும் தெரிவித்துள்ள ஐ.நா. நிபுணர் குழுவின் தருஸ்மன் அறிக்கையை நாம் எப்படி ஏற்றுக்கொள்வது?

- இப்படி அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று கேள்வி எழுப்பினார்.

ஹெகலிய கேள்வி




அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்றுக் காலை தகவல் திணைக்களக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை தொடர்பான அரசின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என (29ஆம் பக்கம் பார்க்க)

## டில்லியிலிருந்து சாதகமான பதிலை எதிர்பார்க்கும் அரசு

கொழும்பு, ஏப். 29

ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழு அறிக்கை தொடர்பாக இந்தியாவிடம் இருந்து சாதகமான பதிலை அரசு எதிர்பார்க்கின்றது என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், அமைச்சருமான விமல் வீரவன்ஸ நேற்றுத் தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராகவும், இலங்கைக்குச் சாதகமாகவும் இந்தியா செயற்பட வேண்டும் என்று அரசு எதிர்பார்க்கின்றது. வீட்டோ அதிகாரமுடைய ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளின் தூதர்கள் இலங்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்கள்.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூனைச் சந்தோஷப்படுத்த விரும்பும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு விளக்கமளிப்பதில் அர்த்தமில்லை. நடுநிலையான நட்பு நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்காகவே அந்த நாடுகளுக்கு ஜனாதிபதியும், வெளிவிவகார அமைச்சரும் பயணம் செய்வார்கள்.''-என்றார் அமைச்சர் விமல் வீரவன்ஸ.

(உ-சி)

## யாழ். நகரில் 5 மாடி வர்த்தகத் தொகுதி அமைப்பதைத் தடுக்க நீதிமன்றில் மனு

### தமிழ்க் கூட்டமைப்பு சார்பில் தாக்கல்

யாழ்ப்பாணம், ஏப்.29

யாழ். நகரின் மத்தியில் மாநகர சபையின் ஏற்பாட்டில் ஐந்துமாடிக் கடைத் தொகுதி ஒன்றை அமைக்கும் திட்டத்தில் பல முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதால், கட்டடம் அமைக்கும் பணியை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு கோரி யாழ். மேல் நீதிமன்றில் நேற்று மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் உதவிச் செயலாளர் சி.வி.கே.சிவஞானம் இந்த மனுவைத் தாக்கல் செய்தார்.

சட்டத்தரணி (29ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பியுடனும் பேசுமாம் அரசு

கொழும்பு, ஏப். 29

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் அரசு - தமிழ்க் கூட்டமைப்பு இடையிலான அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் இன்று நடைபெற உள்ளன.

இந்த நிலையில், தீர்வு தொடர்பில் அரசு தனது(29ஆம் பக்கம் பார்க்க)

சாவகச்சேரியில் செலான் வங்கி

செலான் வங்கி

சாவகச்சேரி நகரில் செலான் வங்கியின் கிளை இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.15 மணிக்கு
கோலாகலமாகத் திறந்து வைக்கப்படுகின்றது. செலான் வங்கியின் தலைவர்
திரு.ஈஸ்ட்மன் நாரங்கொட வங்கிக் கிளையை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கிறார்.

இல. 179, 180, 181, 185
கண்டி வீதி, சாவகச்சேரி.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

# கம்பீரிடம் மண்டியிட்டார் சேவாக்



-திவாரி

-டிலீப்-

திவாரியின் அரைச்சதம். அப்துல்லாவின் பந்து வீச்சு. இதனால் வெற்றியைத் தன்வசமாக்கியது கொல்கத்தா. ஐ.பி.எல் 33 ஆவது ஆட்டம். நடந்தது டெல்லியில். மோதின சேவாக் தலைமையில் டெல்லி டெயாடெவில்ஸ் - கம்பீர் தலைமையில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ். கொல்கத்தா வென்றது நாணயச்சுழற்சியில். முடிவு செய்தது களத்தடுப்புச் செய்ய. வந்தனர் கலிஸ் - கோசுவாமி. இப்ரான் பதான் வீசினார் முதலாவது ஓவர். ஐந்தாவது பந்தில் கலிஸின் பி தவறியது. தவறவிட்டவர் வோர்னர். மோர்னி மோர்கல் வீசினார் இரண்டாவது ஓவர். சென்றது இரண்டு பவுண்டரிகள். அடித்தவர் கோசுவாமி.

நான்காவது ஓவர் மோர்னி மோர்கல் வீசினார் பந்து. பவுண்டரிகள் மூன்று சென்றது. அதிகரித்தது கொல்கத்தாவின் ஓட்ட வேகம். பதானின் ஓவரில் வெளியேற்றப்பட்டார் கலிஸ். 11 பந்துகளில் 11 ஓட்டங்கள். அணிக்கு கலிஸ்ஸின் பங்களிப்பு. வந்தார் அணித்தலைவர் கம்பீர். அணிக்குத் திரும்பிய அகாகர் சரித்தார் கோசுவாமியை. 42 ஓட்டங்களில் சரிக்கப்பட்டது இரண்டாவது விக்கெட். வீசப்பட்டிருந்தது 6.1 பந்து வீச்சுக்கள். 20 பந்துகளில் கோசுவாமி 4 பவுண்டரிகளுடன் பெற்றுக்கொடுத்தார் 22 ஓட்டங்கள். கம்பீர் - திவாரி இணைவு. அணிக்கு இடப்பட்டது பலமான அத்திவாரம். சரிவை மீட்க சந்தர்பங்களை சரிவரப் பயன்படுத்தியது. திவாரியின் ஆட்டம் அதிரடியில் நகர்வு. கம்பீர் சேர்த்தார் ஓட்டங்களை. 18 ஓட்டங்களில் ஹோப்ஸால் வெளியேற்றப்பட்டார் கம்பீர். 40 ஓட்டங்களை பகிர்ந்தனர் மூன்றாவது இணைப்புக்காய். யூசுப் வந்தார் களத்துக்கு. இணைந்தார் திவாரியுடன். தொடர்ந்தது திவாரியின் அதிரடிகள். அடுத்த இணைப்பில் யூசுப்பின் பங்களிப்புப் போதவில்லை. அதிரடி யூசுப் தொடங்கும் முன்னர் அடக்கப்பட்டார் ஜாதவ்வால். 05 ஓட்டங்களுடன் வெளியேற்றினார் யூசுப். வந்தார் மோர்கன். ஜாதவ்வின் அடுத்த பந்து பதம் பார்த்து பவிலியனுக்குத் திருப்பியது மோர்கனை.

தொடர்ந்தது திவாரியின் அதிரடியாட்டம். 37 பந்துகளில் கடந்தார் அரைச்சதம். மறுமுனையில் ரென் டொஸ்சேர் களத்தில். அதிரடியில் திவாரிக்கு அளப்பரிய உதவி. சிக்ஸர்கள், பவுண்டரிகள் இறுதி ஓவரில் பறந்தன. அதில் பங்கெடுத்தார் டொஸ்சேர். 12 பந்துகளில் பெற்றார் 19 ஓட்டங்கள். மோர்னி மோர்கல் முடித்து வைத்தார் அவர் ஆட்டத்தை. திவாரி இறுதி வரை போராட்டம். டெல்லியால் முடியவில்லை திவாரியைச் சரிக்க. 47 பந்துகளில் பெற்றார் 61 ஓட்டங்கள். 3 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகள் அதனுள் விளாசல்.

இறுதியில் இருபது ஓவர்களில் பெறப்பட்டது 148 ஓட்டங்கள். இழக்கப்பட்டது 7 விக்கெட்டுக்கள். உதிரிகளாக தாரை வார்க்கப்பட்டது 8 ஓட்டங்கள்.

வோர்னர் - சேவாக் விரட்டத் தொடங்கினர் இலக்கை. ஆரம்பித்தார் பந்து வீச்சை லீ. அகலப் பந்தாய் சென்றது முதலாவது பந்து. சேவாக் கணக்கு பவுண்டரியுடன் தொடக்கம். இரண்டாவது ஓவரிலேயே வீழ்தப்பட்டது விக்கெட். இரண்டு ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டார் வோர்னர். பாலாஜி வீசினார் நான்காவது ஓவரை. சிக்ஸர், பவுண்டரிகளாய் சேவாக் வெளுத்தார். சரிவுகள் சரிக்கட்ட எடுத்தார் முயற்சி. ஹோப்ஸ் நம்பிக்கையான விதத்தில் ஆட்டம் தொடர்ந்தார். இருவரது இணைப்பும் பலமாகியது அணிக்கு. நீடித்து ஆட விடவில்லை கொல்கத்தா. 43 ஓட்டங்களில் வீழ்ந்தது இரண்டாவது விக்கெட். 23 பந்துகளில் 34 ஓட்டங்கள் விளாசிய சேவாக் உனட்கட் பந்தில் வெளியேற்றம். இப்ரான் பதான் நுழைந்தார் களத்தில். வெளுத்தார் சிக்ஸர். வெளியேற்றப்பட்டார் இக்பால் அப்துல்லாவின் பந்து வீச்சில்.

விக்கெட்டுக்கள் சீட்டுக்கட்டுப் போல சரிந்தன. ஹோப்ஸின் ஆட்டம் நம்பிக்கை கொடுத்தது டெல்லிக்கு. 25 ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டார் ஹோப்ஸ். 30 பந்துகள் எடுத்தார் அவர். இக்பால் அப்துல்லா அவரை வெளியேற்றியவர். மத்தியவரிசை பின்வரிசை யாரும் உறுதியான ஆட்டமில்லை. வேணுகோபால் ராவ் - யோகேஸ் நாகர் கலக்கினர் இறுதியில். வெற்றியை கொல்கத்தாவிடமிருந்து பறிக்கும் வகையில் ஆட்டம். இருந்தும் அவசரத்தால் ரன் அவுட் டானார் ராவ். 18 பந்துகளில் பெற்றுக் கொடுத்தார் 19 ஓட்டங்கள். நாகர் 12 பந்துகளில் பெற்றார் 19 ஓட்டங்கள். இருபது ஓவர்களில் 131 ஓட்டங்கள் பெறுகை. பறிகொடுத்தது 9 விக்கெட்டுக்கள். 17 ஓட்டங்களால் தோல்வி.

பந்து வீச்சில் அப்துல்லாவுக்கு வீழ்ந்தன மூன்று விக்கெட்டுக்கள். பலாஜி ஓட்டங்களை அள்ளிக் கொடுத்து எடுத்தார் இரண்டு விக்கெட்டுக்கள். திவாரி தெரிவானார் ஆட்ட நாயகனாய். (15)

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 06 | 05 | 01 | 0 | 0 | + 0.707 | 10 |
| கொல்கத்தா நைட்ரைடர்ஸ் | 07 | 04 | 03 | 0 | 0 | + 0.458 | 08 |
| சென்னை சூப்ப கிங்ஸ் | 07 | 04 | 03 | 0 | 0 | + 0.143 | 08 |
| பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 07 | 03 | 03 | 0 | 1 | - 0.282 | 07 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 07 | 03 | 03 | 0 | 1 | - 0.357 | 07 |
| டெக்கான் சார்ஜஸ் | 07 | 03 | 04 | 0 | 0 | + 0.194 | 06 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 05 | 03 | 02 | 0 | 0 | - 0.095 | 06 |
| கொச்சி டஸ்கேர்ஸ் | 07 | 03 | 04 | 0 | 0 | - 0.696 | 06 |
| புனே வாரியர்ஸ் | 06 | 02 | 04 | 0 | 0 | + 0.138 | 04 |
| டெல்லி டெயாடெவில்ஸ் | 07 | 02 | 05 | 0 | 0 | - 0.318 | 04 |

## இன்றைய ஆட்டம்

- ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர் மும்பை இந்தியன்ஸ் (மாலை 4 மணி)
- பெங்களூர் றோயல்ஸ் எதிர் புனே வாரியர்ஸ் (இரவு 8 மணி)

## அதிகூடிய ஓட்டம்

- சச்சின் – மும்பை இந்தியன்ஸ் (6 ஆட்டங்கள் 269 ஓட்டங்கள்)
- வல்த்தாட்டி – கிங்ஸ்லெவன் (5 ஆட்டங்கள் 261 ஓட்டங்கள்)
- கலிஸ் – கொல்கத்தா நைட் ரைடர்ஸ் (7 ஆட்டங்கள் 244 ஓட்டங்கள்)

## அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை இந்தியன்ஸ் (6 ஆட்டங்கள் 16 விக்கெட்டுக்கள்)
- வோர்ன் – ராஜஸ்தான் றோயல்ஸ் (6 ஆட்டங்கள் 9 விக்கெட்டுக்கள்)
- மிஷ்ரா – டெக்கான் சார்ஜஸ் (7 ஆட்டங்கள் 9 விக்கெட்டுக்கள்)

DLF INDIAN PREMIER LEAGUE

# தொடரைக் கைப்பற்றுமா பாக்.?

பாகிஸ்தான் அணிக்கும் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும் இடையிலான மூன்றாவது ஒரு நாள் ஆட்டத்தில் தற்போது துடுப்பெடுத்தாடிவரும் பாகிஸ்தான் அணி முப்பது ஓவர்கள் நிறைவில் 124 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்துள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி மேற் கிந்தியத் தீவுகள் அணியைத் துடுப்பெடுத்துமாறு பணித்தது. மழை காரணமாக ஆட்டம் தாமதமாக ஆரம்பமாகியதால் 45 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 43.4 ஓவர்களில் 171 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அந்த அணி சார்பில் சிமொன்ஸ் 51 ஓட்டங்களையும் டரன் பிராவோ 47 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி மேற்கிந்தியத் தீவு வீரர் ராம் புல்லின் பந்துவீச்சில் ஆரம்ப விக்கெட்டுக்களை விரைவாக இழந்தது. தற்போது களத்தில் மிஷ்பா உல் ஹக், அஸாம் ஆகியோர் துடுப்பெடுத்தாடி வருகின்றனர். (15)



-ராம் புல்

உங்களையும் IPL கிரிக்கெட் உடன் இணைக்கின்றோம்
SPORTS WORLD ஸ்போட்ஸ் வேல்ட்
(தரமான விளையாட்டு உபகரணங்கள், Jerseys)
கிரிக்கெட் வீரர்கள் மற்றும் ரசிகர்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்தியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட உயர் தரத்திலான IPL 2011, WORLD CUP 2011 Jersey க்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
Mumbai Indians, Chennai Supper Kings, Delhi, Kochi, Pune Warriors, Panchap Royal Challeger, Decan
India, Sri Lanka, South Africa, England,
(600/= இருந்து 900/= வரை)
213, கஸ்தூரியார் வீதி, ராஜா தியட்டர் அருகாமை, லலிதா கட்டடம், 1ஆம் மாடி யாழ்ப்பாணம்.
T.P.: 0773604830, 0212220750


பிளெட்சர்

# பிளெட்சருக்கு கபில் எதிர்ப்பு

இந்திய கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளராக 1983 உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடிய சிம்பாப்பே அணித்தலைவர் டங்கன் பிளெட்சர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் 2 ஆண்டுகள் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இதற்கு 1983 இல் உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய அணியின் தலைவர் கபில்தேவ் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் கூறும்போது, யார் இந்த பிளெட்சர்?, இந்தியர்கள் யாரும் இல்லையா?, இதற்கு முன் வெங்கடேஷ்பிரசாத், ரொபின் சிங் ஆகியோர் பந்துவீச்சு மற்றும் களத்தடுப்புப் பயிற்சியாளராக திறம்பட பணியாற்றவில்லையா? அவர்கள் தலைமையில் நாம் 2012 உலகக் கிண்ணத்தை வெற்றிபெறவில்லையா என்று ஆக்ரோஷமாக கேட்டுள்ளார்.

# துடுப்பாட்ட வீரர்கள் மீது பாய்ச்சல்


யுவராஜ்
டோனி

ஐ.பி.எல். போட்டியில் சென்னை சூப்ப கிங்ஸ் புனே அணியை மீண்டும் தோற்கடித்தது. 8 விக்கெட்டுக்கள் வித்தி யாசத்தில் புனே வாரியர்ஸ் அணியை வென்றது.

வெற்றி குறித்து சென்னை அணித்தலைவர் டோனி கூறியதாவது:

வெளி ஆடுகளங்களில் முதல் வெற்றியை பெற்றுள்ளது மகிழ்ச்சியாக உள்ளது. பந்து வீச்சு, களத்தடுப்பு அருமையாக இருந்தது. பொலஞ்சர் அசத்திவிட்டார். மற்ற பந்துவீச்சாளர்களும் அவருக்கு உறு துணையாக செயற்பட்டனர். கூட்டு முயற்சியாக 100 சதவீத ஆட்டத்தை வெளிப்படுத்த முடிவு செய்திருந்தோம். பத்ரி நாத் மத்திய வரிசையில் பிரபலம் இல்லாத நாயகனாக வலம் வருகிறார். ரெய்னாவும் அதிரடிக்கு திரும்பியுள்ளது சிறப்பான விடயம் என்றார்.


தோல்வி குறித்து புனே அணித்தலைவர் யுவராஜ்சிங் கூறியதாவது:

நாங்கள் துடுப்பாட்டத்தில் ஒழுங்காகச் செயற்படவில்லை. செய்த தவறுகளையே மீண்டும் மீண்டும் செய்துள்ளோம். ஆரம்ப கட்டத்திலேயே அதிக விக்கெட்டுக்களை இழந்து விட்டதால் வலுவான ஓட்டங்களை குவிக்க முடியவில்லை. இதிலிருந்து நிச்சயம் மீண்டு வருவோம்-என்றார்.

இந்த தோல்வியால் புனே வாரியர்ஸ் அணி பயிற்சியாளர் ஜெப் மார்ஷ் மிகுந்த ஏமாற்றம் அடைந்துள்ளார். அவர் துடுப்பாட்ட வீரர்கள் மீது குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

ஆடுகளம் துடுப்பாட்ட வீரர்களுக்கு ஏற்ற வகையில் இருந் தது. எங்களது துடுப்பாட்ட வீரர்கள் சரியாக விளையாட வில்லை. 142 ஓட்டங்கள் இலக்கு என்பது போதுமானது இல்லை. இதை வைத்துப் பந்து வீச்சாளர்கள் சிறப்பாக வீசுவது என்பது இயலாத ஒன்றாகும். இன்னும் கூடுதலாக 20 முதல் 30 ஓட்டங்கள் எடுத்து இருக்க வேண்டும். இந்த ஆடு களத்தில் 160-170 ஓட்டங்கள் வரை இலக்கு என்பதே கடினமானது. துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக விளையாடாததால் தோல்வி ஏற்பட்டது. கடந்த 3 ஆட்டத்தில் முதல் 6 ஓவரில் 4 விக் கெட்டுக்கள் சரிந்துவிட்டன. தொடக்கத்திலேயே விக்கெட்டுக்கள் சரிந்து விடுவதால் பின்னால் வரும் துடுப்பாட்ட வீரர்களுக்கு நெருக்கடி ஏற்படுகின்றது. இதில் மிகுந்த முன்னேற்றம் தேவை. இவ்வாறு அவர் கூறினார். (15)

# நாடு திரும்பும் இலங்கை வீரர்கள்



இங்கிலாந்துக்கு எதிரான தொடருக்குத் தயாராவதற்காக குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன உள்ளிட்ட சிரேஷ்ட வீரர்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னதாகவே இலங்கை திரும்ப முடிவு செய்துள்ளனர்.

இலங்கை இங்கிலாந்து அணிகள் பங்கேற்கும் டெஸ்ட் தொடர் மே 26 ஆம் திகதி தொடங்குகின்றது. இதனால் இந்தியாவில் ஐ.பி.எல். தொடரில் பங்கேற்றுள்ள வீரர்கள் மே 5 இற்குள் இலங்கை திரும்ப வேண்டுமென இலங்கைக் கிரிக்கெட் சபை முதலில் தெரிவித்தது. இந்திய கிரிக்கெட் சபையின் (பி.சி.சி.ஐ.) தலையீட்டுக்குப் பின்னர் மே 18 வரை பங்கேற்க அனுமதியளித்தது.

இதன் காரணமாக இங்கிலாந்துத் தொடரில் பங்கேற்கும் 16 பேர் கொண்ட அணியிலுள்ள 7 வீரர்கள் மே 19 இற்குள் இந்தியாவிலிருந்தே இங்கிலாந்து செல்லவுள்ளனர். இருப்பினும் இலங்கை அணியின் புதிய அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ள பெங்களூர் அணியில் விளையாடும் டில்ஷான் மே 10 இல் அணியினருடன் சேர்ந்து கொள்வார் என்று தெரிகின்றது.

தவிர, டெக்கான், கொச்சி அணிகளின் தலைவர்களாகவுள்ள சங்கக்கார, ஜெயவர்த்தன இருவரும் மே 19 ஆம் திகதி தொடங்கும் பயிற்சிப் போட்டியில் பங்கேற்கும் வகையில் 16 ஆம் திகதியே இலங்கை திரும்பவுள்ளனராம். இதற்கான அனுமதியை அந்தந்த அணி உரிமையாளர்களிடம் ஏற்கனவே பெற்றுள்ளதாகத் தெரிகின்றது. (15)

# வல்த்தடி ராயுடு இந்திய அணியில்


ராயுடு


வல்த்தடி

மேற்கிந்தியத்தீவுகளுடனான தொடருக்கான இந்திய வீரர்கள் தேர்வு இடம்பெறவுள்ளது. இதில் சேவாக் தோள்பட்டை அறுவைச் சிகிச்சை செய்ய இருப்பதால் அவரால் ஜூலை மாதம் வரை விளையாட இயலாது. எனவே அவருக்கு பதில் மும்பை ஐ.பி.எல் அணி வீரர் அம்பாதி ராயுடுவை தேர்வு செய்ய தேர்வுக் குழுவினர் முடிவு செய்துள்ளனர். அதே போல் பஞ்சாப் அணி வீரர் வல்த்தடி தேர்வும் உறுதியாகி உள்ளது.

அவர் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான ரி-20 போட்டியில் ஆடுவது நிச்சயம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் டெஸ்ட் அணியில் இருந்து நீக்கப்பட்ட யுவராஜ் சிங்கிற்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. (15)

## ஐ.பி.எல்லுக்கு 'அட்வைஸ்'



சர்வதேச போட்டிகளுக்கு இடையில் ஐ.பி.எல் போட்டி நடப்பதால் வீரர்களால் முழுமையாக தொடரில் பங்கேற்க முடியவில்லை. இதனால் வீரர்களுக்கும், வாரியத்திற்கும் இடையே மோதல் ஏற்படுகின்றது. இந்தப் பிரச்னையை தவிர்க்க எதிர்கால அட்டவணை குறித்து ஐ.சி.சியுடன் ஆலோசித்து விட்டு ஐ.பி.எல் போட்டி அட்டவணையைத் தயாரிக்கலாம் என்று வெற்றோரி மற்றும் சங்ககரா தெரிவித்துள்ளனர். (15)

# எகிறியது பரிசுத் தொகை

உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய வீரர்களுக்கான பரிசுத் தொகை ரூ.2 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை பி.சி.சி.ஐ வெளியிட்டது. முன்னதாகக் கிண்ணத்தை வென்றவுடனேயே ஒவ்வொரு வீரருக்கும் தலா ரூ.1 கோடி வழங்கப்படும் என்று பி.சி.சி.ஐ அறிவித்தது. இப்போது அந்தத் தொகையை தற்போது ரூ.2 கோடியாக உயர்த்தி அறிவித்துள்ளது.

மும்பையில் நடைபெற்ற பி.சி.சி.ஐ கூட்டத்தின் போது வீரர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ.2 கோடி வழங்க முடிவு செய்யப்பட்டதாக பி.சி.சி.ஐ செயலாளர் சீனிவாசன் தெரிவித்தார்.

உலகக் கிண்ணத்தை வென்ற அணியில் இடம்பெற்றிருந்த வீரர்களுக்கு ரூ.2 கோடி வழங்க வேண்டும். உலகக் கிண்ணத்தை வென்றதன் மூலம் பி.சி.சி.ஐக்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது. அவ்வாறு இருக்கும் போது வெற்றிக்காக பாடுபட்ட வீரர்களுக்கு ஏன் ரூ.5 கோடியைப் பரிசுத் தொகையாக வழங்கக்கூடாது என்று அணியில் இடம்பெற்றிருந்த சில வீரர்கள் மறைமுக கருத்துத் தெரிவித்திருந்தனர்.

இதுகுறித்து சீனிவாசனிடம் செய்தியாளர்கள் கேள்வி கேட்ட போது அதை அவர் மறுத்தார். ஆனால் இப்போது பரிசுத் தொகை உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளது. வீரர்கள் மறைமுகமாக கோரிக்கை விடுத்ததன் எதிரொலியாகவே இப்போது பரிசுத் தொகை உயர்த்தப்பட்டுள்ளதாக பி.சி.சி.ஐ வட்டாரங்கள் கருத்து தெரிவித்தன. (15)


சாய்னா

# சாய்னா தோல்வி

டெல்லியில் நடைபெற்று வரும் இந்திய திறந்த தொடர் பட்மின்ரன் போட்டியில் இந்தியாவின் சௌரப் வர்மா வெற்றிபெற்றுள்ளார்.

புதன்கிழமை நடைபெற்ற ஆடவர் முதல் சுற்றில் வர்மா, 21-18, 21-19 என்ற நேர் செட்களில் இந்தோனேசியாவின் முன்னணி வீரரும், சர்வதேச தரவரிசையில் மூன்றாவது இடத்தில் உள்ளவருமான சோனி டிவி குன்கோராவைத் தோற்கடித்தார்.

மகளிர் முதல் சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் முன்னணி வீராங்கனையான சாய்னா நெவால் தோல்வியடைந்து போட்டியிலிருந்து வெளியேறினார். ஜப்பானின் கோட்டோ 21-17, 21-19 என்ற நேர் செட்களில் சாய்னாவை வீழ்த்தினார். (15)

## Diploma in Mobile Phone Repairing

(சகலவகையான கைத்தொலைபேசிகளையும் மிகக்குறுகியகாலத்தில் நீங்களே திருத்துவதற்கான சுயதொழில் வாய்ப்பு கற்கைநெறி)

## Mobile phone repairing Service Course

Learn from Professional Industry Experts

- How to Repair ?
- How to survive in Repair Business ?
- How to get jobs within 3 months ?
- How to Earn Money ?
- How To Create your own Service centre ?

100% JOB

Brands We Serve(repair & unlocking)

NOKIA BlackBerry SAMSUNG MOTOROLA LG



**Mobile Repair Syllabus** (பாடப்பரப்பு) :-

குறிப்பு :- நெல்லியடியில் மட்டும் இவ் வகுப்புகள் மாலை 5 மணிக்கு நடைபெறும். வகுப்புகள் பற்றிய மேலதிக விபரங்கள் பெற்றுக் கொள்ள 0777 110 862 எனும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும். அரச அங்கீகாரம் உள்ள சான்றிதழ் வழங்கப்படும்.

கீழ்வரும் இடங்களில் ஆரம்பம் :- (ஒவ்வொரு மாதமும் பல பிரிவுகள் ஆரம்பம்)

| நெல்லியடியில் - (வதிரி சந்தி) | யாழ்ப்பாணத்தில் | மானிப்பாயில் |
|---|---|---|
| உல்லியனொல்லை அம்மன் கோவில் முன்பாக (இல - 208/23) T.P No :- 0777 110 862 | UNI - ICT Campus (PVT) Ltd No:-83, Palaly, Road Kantharmadam,Jaffna | UNI - ICT Education (PVT) Ltd Jaffna Road, Manipay. T.P :- 021 7429325 / 0777110862 |

## கண்ணீர் அஞ்சலி

### செல்வன் ரவீந்திரன் பவீசன்



நேற்று வரை எங்களுடன் இருந்தாய்
பள்ளி வாழ்க்கையில் வானம்பாடிகளாக சுற்றி வந்தோம்
இன்று நீ இல்லை என்பதை
நினைத்தால் ஜீரணிக்க முடியாதுள்ளது
பள்ளி வாழ்க்கையில் நாம்
பழகிய நாள்களில் எண்ணிப் பார்க்கின்றோம்
உனது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இவருடைய இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இ.கௌசன், U.K. (நண்பன்).

(3626) (34)

## இன்னும் 2நாட்கள் மட்டுமே சிறப்புச்சலுகை

எமது நிறுவனத்தில்...

எந்தவொரு கணனி கற்கை நெறிகளையும் கற்க விரும்பும் கணனி ஆர்வலர்களுக்கு பதிவுக்கட்டணமின்றி கற்பதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம்!!!

பாடநெறிக்கட்டணம் 1000/= மட்டுமே!!!

**Computer Express**
**Institute of Information Technology**

Batch I - 29.04.2011 9am or 3pm Batch II - 30.04.2011 11am or 2pm
Batch III - 01.05.2011 11am or 2pm Batch IV - 04.05.2011 9am or 3pm

இச்சலுகை 30-04.2011வரை மட்டுமே பதிவுகளுக்கு முந்துங்கள்

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
0774907444, 021 222 8250, 0777222422

## பஸ்ஸுக்காக காத்திருந்த பயணிகளை வெறிநாய் கடித்தது

தென்மராட்சி, ஏப்.29

பஸ்ஸுக்காக காத்திருந்த பயணிகள் இருவரை வெறிநாய் கடித்துக் காயப் படுத்திய சம்பவம் பூநகரியில் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை பூநகரி, வாடியடிச் சந்தியில் இடம்பெற்றது.

பூநகரி, மட்டுவில் நாடு வைச் சேர்ந்த இராமலிங்கம் இராமநாதன் (வயது 58), அரசரத்தினம் தணோசா (வயது 20) ஆகியோர் வெறிநாயினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களுக்கு வைத்தியசாலையில் உடனடியாக நாய்கடிக்கான ஏ.ஆர்.வி. தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(த-207)

## மனை விற்பனைக்குண்டு

மாலிசந்தி, அல்வாய் வீதி ''யாதவன் SERVICE STATION''க்கு முன்னால் மேல்மாடி வீடு 3 பரப்பு 2 குளி காணியுடன் உடனடி விற்பனைக்கு உண்டு. மாலிசந்தியிலிருந்து 1 கி.மீ. தூரம் இருக்கும். 01.05.2011 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 - பிப.4.30 வரையும் முன்னறிவித்தல் இன்றியும், கிழமை நாள்களில் முன்னறிவித்தலுடனும் பார்வையிடலாம்.

தொடர்பு: பாஸ்கரன்
தொலைபேசி இல.021 2262119

## வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் கட்டட வேலைகளுக்கு மேசன், உதவி ஆள்கள் உடன் தேவை.

தொடர்புகளுக்கு:- M.I. Group
0779110666.

## தவறிவிட்டது

காளிகோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கோண்டாவில், ம.தவராசா என்னும் பெயர் முகவரியுடைய தேசிய அடையாள அட்டையும் (இல.512112625V) ஒரு தொகைப் பணமும் திருநெல்வேலிச் சந்தைப்பகுதியில் 28.04.2011 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு ஒப்படைத்தவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே. 0775881496, 0772852639

## காணி விற்பனைக்குண்டு

மானிப்பாய் வீதி, பள்ளிவாசலுக்கு அருகில் B.S. லேனில் அமைந்துள்ள இரண்டு பரப்புக் காணி மலிவு விலையில் விற்பனைக்குண்டு. நேரடியாக தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:-0212223803

## வலயக் கல்வி அலுவலகம், வலிகாமம்
## பாடசாலை வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2011

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வலயம் கல்விப்பணிப்பாளரினால் இக்ராட் (ICTAD) இல் பதிவுசெய்து பதிவுச் சான்றிதழ் வைத்திருப்பவர்களிடம் இருந்தும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. கீழே தரப்பட்ட அட்டவணைப்படி வேலைகளுக்கான கேள்வி வைப்புப் பணத்தை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் கணக்கில் வைப்புச் செய்து அல்லது வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் நேரடியாகச் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

1) கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி 29.04.2011 முதல் 11.05.2011 நண்பகல் 12.00 மணிவரை
2) கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 13.05.2011 மு.ப. 10.00 மணிவரை
3) கேள்வி திறக்கூப்படும் திகதி 13.05.2011 மு.ப. 10.30 மணி (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமூகமளிக்கலாம்)
4) கீழ்க் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் விண்ணப்பிக்கலாம்.
5) கேள்வியினை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு. சரியாக நிரப்பப்படாத தெளிவற்ற கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
6) கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் தமது இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தை, பாடசாலைகள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணம், கல்விப் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் அவர்களிடம் சமர்ப்பித்து சிபார்சுக் கடிதத்தினை பெறுதல்வேண்டும்.
7) விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப்பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும், கையொப்பமும், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளிலிட்டு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு மருதனார்மடத்திலுள்ள வலிகாமம் வலயக் கல்வி அலுவலத்திலுள்ள கேள்விப்பெட்டியில்இடல்வேண்டும்.
8) கேள்விப் பத்திரங்களில் பெறுமதி சேர்வரி (Vat) 12% சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை, பெறுமதி சேர்வரி (Vat) 12% சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடல் வேண்டும். எனினும் இந்த நிபந்தனையும் மீளளிக்கப்படும் வைப்புப்பணம், மீளளிக்கப்படாத வைப்புப் பணம் என்பனவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துக்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.
9) தெரிவுசெய்யப்படும் கேள்விதாரர் தெரிவு செய்யப்படும் திகதியிலிருந்து 03 மாத காலத்துக்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்திசெய்து கையளிக்க வேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களை பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| இல. | விவரம் | மீளளிக்கப் படாத வைப்புப் பணம் | திட்டம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | இக்ராட் இல. |
|---|---|---|---|---|---|
| 01 | யா/அராலி இந்துக்கல்லூரி இருமாடிக் கட்டட க.பொ.த (சா/த) விஞ்ஞான ஆய்வுகூட நிர்மாணம் 40'X25'-(கீழ்த்தளம்) | 750.00 | PSDG | 25,000.00 | M7/C8 |
| 02 | யா/புன்னாலைக்கட்டுவன் அ.த.க.பா. இருமாடி வகுப்பறைக் கட்டட நிர்மாணம் 110'X25' தொடர் வேலை | 750.00 | PSDG | 20,000.00 | M7/C8 |
| 03 | யா/இளவாலை மெய்கண்டான் வித்தி. இருமாடி வகுப்பறைக் கட்டட நிர்மாணம் 90'X25' தொடர் வேலை (மேல்த்தளம்) | 500.00 | PSDG | 10,000.00 | M8/C9 |
| 04 | யா/சங்கரத்தை சின்னம்மா வித்தி. வகுப்பறைக் கட்டடத் திருத்தம் 60'X30' | 250.00 | PSDG | 1,000.00 | M9/C10 |
| 05 | யா/புன்னாலைக்கட்டுவன் ம.வித்தி. வகுப்பறைக் கட்டடத் திருத்தம் 60'X20', 50'-0X20'-0 | 250.00 | PSDG | 1,500.00 | M9/C10 |


பாடசாலை வேலைப்பகுதி,
வலிகாமம் வலயம்.

(சி/577980)

ஆ. ராஜேந்திரன்,
வலயக்கல்விப் பணிப்பாளர்.

# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் முத்துவேலு



சாவகச்சேரி கிராம்புவிலைப் பிறப்பிடமாகவும் கல்வயல் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் முத்துவேலு நேற்று (28-04-2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், ரஞ்சினிதேவி, ராகினிதேவி, சுந்தரகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் முருகதாஸ், தர்சிகா ஆகியோரின் மாமனாரும் காண்டீபன் (நீகன்), காயத்திரி, பிரசன்னா, நிரேஸ், நஸ்மி, சுதிர், சௌமி, சமீர் ஆகியோரின் பாசமிகு பேரனும் அஸ்மிதாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் வீதி,
கல்வயல்,
சாவகச்சேரி.

தொலைபேசி:
0774080754,
0777222076.

தகவல்:
குடும்பத்தினர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இணைந்து செயற்பட வேண்டிய வேளை இது

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்துவதற்கு எம்மை உளப்பூர்வமாக அர்ப்பணித்துள்ளோம். ஆனால் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்திடமிருந்து இன்னமும் முழுமையான விருப்பம் வெளிப்படவில்லை.

இன்றைக்குள்ள மிக மோசமான சூழ்நிலையிலும் அரசுடன் பேசுவதற்கு நாங்கள் திடசங்கற்பம் கொண்டுள்ளோம்.

தங்கள் விடுதலைக்காக, தமிழ் மக்கள் தங்களைத் தியாகம் செய்வதற்கு உரித்துடையவர்களாகவும் அந்தத் தியாகத்தைச் செய்வதற்கு மனத்திடம் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். இதனை எமக்குக் கற்றுத் தந்தவர் தந்தை செல்வா.

கொழும்பில் நடைபெற்ற தந்தை செல்வநாயகத்தின் 34 ஆவது நினைவு தின விழாவில் பேசுகையில் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

இலங்கை வாழ் தமிழ் மக்களின் மிக மோசமான நிலை என்பதன் பரிமாணம் மிகப் பெரியது; பல வகைப்பட்டது; பல கோணங்களில் விரிந்துள்ளது. இலகுவில் வடித்தெடுத்துக் கூற முடியாதது. அவர்கள் அனுபவித்த கொடுமைகளும், அவர்களுக்கு மிகப் பரந்த அளவில் உண்டான உயிர், உடைமை இழப்புகளும் எண்ணில் அடங்காதவை, எழுத்தில் வடிக்க முடியாதவை. மிகக் குறிப்பாக வன்னியில் இடம்பெற்ற போரின் போது உண்டாக்கப்பட்ட, மனிதாபிமானமற்ற, மனித நேயமற்ற கொடுமைகளால் விளைந்த பேரனர்த்தங்களும், பேரவலங்களும் ஆயிரம் தர பல்லாயிரம்.

அவை போதாது என்று தமிழர்களின் பூர்வீக நிலங்கள் வெவ்வேறு காரணங்களைக் காட்டியும், வேண்டுமென்றே உருவாக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் என்ற போர்வைகளிலும் அபகரிக்கப்படுகின்றன. இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த ஒரு சில வருடங்களிலேயே கல்லோயா, பதவியா அபிவிருத்தித் திட்டங்கள் என்று ஆரம்பிக்கப்பட்ட நிலப்பறிப்பு, சிறிது காலம் மெல்லிதாக அடங்கிக் கிடந்தது. இப்போது அசுர வேகத்தில் மூச்சுடன் எழுந்து கூத்தாடுகிறது. தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்கள் என்ற வரைபடம் அழித்து மாற்றப்படவேண்டும் என்று திட்டமிட்ட நோக்குடன் காரியங்கள் பெரும்பான்மையோர் ஆட்சி என்ற திரைக்குள் ஒப்பேறி வருகின்றன.

தமிழ் மக்கள் விரும்பும் ஒரு தீர்வைக் கொண்டு வருவதற்குப் பதிலாக, தான் விரும்பும் அற்பசொற்ப சலுகைகளை வழங்குவதே இந்த நாட்டை ஆளும் வர்க்கத்தினரான பெரும்பான்மையினரின் உள்நோக்கமாக அமைந்திருக்கிறது. இது ஒன்றும் புதிய கண்டுபிடிப்பல்ல!

இத்தனைக்கும் மத்தியிலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை - அதாவது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் - தனக்கு விருப்பம் உண்டு என்று காட்டிக் கொண்டு, மஹிந்த அரசு காலத்தைத் தனக்கு வசதியாக, வாய்ப்பாக வாங்கிக் கொண்டிருக்கிறது.

எத்தனையோ ரகங்களில் 'பிகு' பண்ணிய அரசு, தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தையைத் தொடங்கி உள்ளது. ஆனால் அப்பேச்சில் எவ்விதமான முன்னேற்றமும் தென்படவில்லை. அரசியல் தீர்வு குறித்து இன்னமும் அகரம் தானும் எழுத ஆரம்பிக்கப்படவில்லை. அதில் அரசு கவனம் செலுத்துவதை பான் கீ - மூனின் நிபுணர்குழுவின் அறிக்கை தடுத்துள்ளது என்று ஒரு பேச்சுக்குச் சொல்லலாம்.

அரசு தனது முழு வலுவை, சக்தியை ஒன்று திரட்டி அமைச்சர்கள், ராஜதந்திரிகள், சர்வதேச அரசியல் விற்பன்னர்கள் என்று மிகப்பெரும் குழுமத்தை உருவாக்கி, இரவு பகலாகப் பணிக்கு அமர்த்தி, தனது புலன் முழுவதையும் அந்த விவகாரத்திலேயே செலுத்தி வருகிறது.

இது தொடர்பில் தம்மால் இனிமேல் செய்வதற்கு எதுவுமில்லை என்று பான் கீ - மூன் ஒதுங்கி நிற்பதால், போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் தேவையை எவ்வாறேனும் தட்டிக் கழித்துவிடும் விறுவிறுப்புடன் பம்பரமாகச் செயற்பட வேண்டிய அவசியம் அரசுக்கு.

இந்தச் சந்தர்ப்பத்தில், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயம் குறித்து சர்வதேசத்துக்கும் பின்னூட்டல்கள் வழங்கப்பட்டிருப்பதாக தந்தை செல்வா நினைவு தினக் கூட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆனால் -

இலங்கை சுயாதிபத்தியமும் இறைமையும் உள்ள நாடு. அதன் விவகாரங்களில் வெளிநாடுகள் எவையும் - அவை வல்லரசுகளானாலும் சரி, இந்தியா போன்ற அயல்நாடுகளானாலும் சரி - மூக்கை நுழைக்க, தலையிட அனுமதியோம் என்று உரத்துக் குரல் கொடுக்கும் ஜாதிக ஹெல உறுமய, தேசிய பிக்குமார் முன்னணி, விமல் வீரவன்ஸவின் தேசிய விடுதலை முன்னணி மற்றும் அரசு சார்பு புத்திஜீவிகள் குழுமங்கள் அரசாங்கத்தின் செல்லப்பிள்ளைகளாக இருந்து குரல் கொடுக்கும் வரை...

இலங்கை வாழ் தமிழர் விவகாரத்தில், எப்போதுமே இரட்டை வேடம் போடும் இந்தியாவினாலும் சரி, மற்றும் சர்வதேசங்களாலும் சரி, இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண்பதற்கு இலங்கை அரசு மீது அழுத்தம் மேற்கொள்ள இயலுமா என்பதனைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

தமிழர்களுக்கு நியாயம் வழங்கும் அரசியல் தீர்வு ஒன்றை இலங்கை அரசிடம் இருந்து பெறுவது கல்லில் நார் உரிப்பதற்கு உவமானப்படுத்தக் கூடியது. சகல தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் தமக்குள்ளே உட்புகுந்திருக்கும் தற்பெருமையைத் தூக்கி வீசிவிட்டு, இதுவரை தமிழ் மக்கள் பட்டது போதும் மக்களின் உரிமைகளுக்காக ஒரே குரலில் பேசுவோம் என்ற இதயபூர்வமான, மனச்சுத்தமான உணர்வுடன் இணைந்து உழைப்பது இவ்வேளையில் மிக மிக அவசியம். இத்தனை வருட இன்னல்கள், நினைத்தால் மதி கலங்கும் பேரிழப்புக்களின் பின்னராவது அத்தகைய உணர்வே இன்றைய உடனடியான கட்டாய தேவை. அதனை எம்மிடையே உள்ள அரசியல் தரப்புகள், தலைமைகள் ஜீரணித்துச் செயற்படுமா?

# பட்டதாரிகள் ஆள்சேர்ப்பு பரீட்சைக்கு 5 ஆயிரத்து 50 பேர் தோற்றவுள்ளனர்

## 36 நிலையங்களில் நாளை பரீட்சை

அச்சுவேலி,ஏப்.29

வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழு நடத்தும் 'பட்டதாரிகளை ஆள்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு 5ஆயிரத்து 50 பட்டதாரிகள் தோற்றுகின்றனர். 36 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண சபையின் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆள்சேர்ப்புச் செய்வதற்கு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பட்டதாரிகள் மட்டத்தில் போட்டிப் பரீட்சையை வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக் குழு நடத்துகின்றது.

நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள போட்டிப் பரீட்சைக்கு வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 5 ஆயிரத்து 50 பட்டதாரிகள் தோற்றுகின்றனர்.

பரீட்சைக்குத் தோற்றுவோரின் வசதிகளைக் கருத்திற்கொண்டு வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் முல்லைத்தீவு தவிர்ந்த நான்கு மாவட்டங்களிலும் 36 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து குறைவான எண்ணிக்கையினரே தோற்றுவதால் அவர்கள் வவுனியா மாவட்டப் பரீட்சை நிலையங்களுக்கு இணைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 5 பரீட்சை நிலையங்களும் மன்னார் மாவட்டத்தில் 3 பரீட்சை நிலையங்களும், கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு நிலையமும் யாழ்.மாவட்டத்தில் 27 பரீட்சை நிலையங்களும் செயற்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் தென்மராட்சி, வடமராட்சி பகுதியிலும் பரீட்சை நிலையங்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களின் வசதியைக் கருத்திற்கொண்டு அமைக்கப்பட்டுள்ளன. போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் திறமை அடிப்படையிலும் பதவி நிலைக்கான பாடத் தகைமையிலும் பட்டதாரிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

குறிப்பிட்ட பரீட்சையின் பெறுபேற்றின் உயர்புள்ளி அடிப்படையில் வடக்கு மாகாணத்தின் பதவி வெற்றிடங்கள் குறிப்பிட்ட காலத்துக்கு இந்தப் பரீட்சையை அடிப்படையாக வைத்து பூர்த்தி செய்யப்படுமென்று வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.திவாகரன் தெரிவித்தார். (ம-11)

# மருத்துவ விழிப்புணர்வுக் கண்காட்சி வடமராட்சியில் இன்று தொடக்கம்

## உதயன் ஊடக அனுசரணை

யாழ்ப்பாணம்,ஏப்.29

யாழ். மருத்துவ பீட மாணவர்களின் ஏற்பாட்டில் உதயன் ஊடக அனுசரணையுடன் மாபெரும் மருத்துவ விழிப்புணர்வுக் கண்காட்சி இன்று தொடக்கம் முதலாம் திகதி வரை ஹாட்லிக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

கண்காட்சி காலை 9 மணிமுதல் பி.ப. 4 மணிவரையும் இடம்பெறவுள்ளது. பாடசாலை மாணவர்கள் வெள்ளிக்கிழமை காலை 9 மணியிலிருந்து பார்வையிட முடியும். ஏனையவர்கள் பி.ப 2.30 மணியிலிருந்து பார்வையிட முடியும்.

நீரிழிவு, மாரடைப்பு, மார்பு முடக்கு வலி, உயர் குருதியமுக்கம், பார்வை தொடர்பான பிரச்சினைகள், புற்றுநோய், ஆஸ்துமா, வீதி விபத்துக்கள், முதலுதவி ஆகிய தலைப்புக்களில் விழிப்புணர்வுக் கண்காட்சியும் விளக்கமும் இடம்பெறவுள்ளன.

நீரிழிவு, குருதியமுக்கம் ஆகியநோய்களுக்கான இலவச மருத்துவப் பரிசோதனையும், கண் பரிசோதனையும், இலவச வாசிப்பு கண்ணாடி வழங்கலும், ஆஸ்துமா பரிசோதனையும் இலவச உறிஞ்சிகளும் இதில் வழங்கப்படவுள்ளன.

இந்தக் கண்காட்சி நிகழ்வுக்கு 'உதயன்' ஊடக அனுசரணை வழங்குவதுடன், யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையம், இதய நோய் சிகிச்சைப் பிரிவு, பண்ணை மார்பு சிகிச்சை நிலையம், 'விஸன் கெயார்' நிறுவனம் ஆகியன அனுசரணை வழங்குகின்றன. (ம-15)

# உயர்தர மாணவருக்குச் செயலமர்வு

யாழ்பாணம், ஏப். 29

கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஜி.சீ.ஈ. உயர்தரம் 2013 இற்கு அனுமதி பெறும் மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் செயலமர்வின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக் கிழமை பாடசாலையின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளன.

இந்தச் செயலமர்வில் காலை 8 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியின் பிரதி அதிபர் கே. வேலாயுதம் "கணிதத்துறையும் உயர் கல்வி வாய்ப்புக்களும்'' எனும் தலைப்பிலும் காலை 9 மணிக்கு யாழ்.கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் எ.சி. ஜோர்ஜ் ''தனியாள் செயற்றிட்டத் துறை தெரிவு செய்தல்'' எனும் தலைப்பிலும் முற்பகல் 10.30 மணிக்கு ஆசிரியர் வள நிலையத்தின் தலைவர் ஜி. இரட்ணசிங்கம் "குழுச் செயற்றிட்டத்தை தெரிவு செய்தலும், நடைமுறைப் படுத்தலும்'' எனும் தலைப்பிலும் பிற்பகல் 12.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி செயற்றிட்டப் பொறுப்பாசிரியை பி.அமல்ராஜ் ''செயற்றிட்டங்களை நிறைவேற்றுதல்'' எனும் தலைப்பிலும் உரை நிகழ்த்தவுள்ளனர். அதனைத் தொடர்ந்து மாணவர்களின் கருத்துரைகளும் இடம்பெறும்.

(ம-313-9)

## மனித வாழ்க்கையின் குறிக்கோள்

ஞானக்கதிர்

மனித வாழ்க்கை என்பது என்ன? அதன் இலக்கு இலட்சியம் என்ன? என்பவற்றை எந்த மனிதனும் புரிந்துகொள்ள முயற்சிப்பதில்லை. உணவும், உடையும், வசதியும் தான் மிக முக்கியம் என எண்ணும் மனிதன், நித்ய சத்யமான உண்மையைப்பற்றி, தெய்வீகத்தைப் பற்றி நினைத்துக்கூடப் பார்ப்பதில்லை. இது தவறு. மனித வாழ்க்கையின் முக்கியநோக்கம் உள்ளுறையும் தெய்வீகத்தைத் தானும் உணர்ந்து சமுதாயத்திடம் அதைப் பகிர்ந்து கொண்டு, தானும் அனுபவித்து ஆனந்திப்பதுதான். அதுதான் மனித வாழ்க்கையின் குறிக்கோள். அனைத்துக்கும் மனித உள்ளுணர்வுகள் அவசியமானவை. உணர்வுகள் தான் எல்லாவற்றுக்கும் ஆதாரமானவை. ஒரு சிறிய கடிதம் எழுதவேண்டுமானாலும் யாருக்கு எழுதவேண்டும்? எப்படி எழுத வேண்டும் என்று சிந்தித்து அதன்பிறகே எழுதத்தொடங்குவர். ஆக முதலில் எழுதுவது உள்ளுணர்வுதான். பிறகே நடைமுறைச் சாத்தியமாகிறது. ஆகவே மனித வாழ்க்கை என்ன என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அதற்குமுன் முதலில் தெய்வீகத்தை உள்ளுணர்வுகளால் சிந்தித்து அறிந்து கொள்ளுதல் அவசியம். இதைத்தான் வேதாந்தம் 'பிரம்மவித் பிரம்னவம பவதி' என்று உரைக்கிறது. எந்த உருவத்தைப்பற்றி தீவிரமாகச் சிந்திக்கிறோமோ அந்த வடிவம் நமக்கு அமைந்துவிடுகிறது. கொடிய கொள்ளைக்காரனாக இருந்த ரத்னாகரன் தெய்வீகத்தைப் பற்றி மகரிஷிகள் கூறியவற்றையெல்லாம் கேட்டு, சிறிது சிறிதாக மாறி நிரந்தரமாக ராம நாமம் ஸ்மரிக்க ஆரம்பித்தான். அவ்வாறு ராம நாமம் ஸ்மரிப்பதோடு நிற்காமல் ராமரூபத்தையும் நினைத்துப் பார்க்கத் தொடங்கினான், அதனால் ரத்னாகரனுடைய வடிவத்திலும் ஸ்ரீராமனுடைய திருச்சாயலும், தேஜஸும் தோன்ற ஆரம்பித்தன. அவன் வால்மீகியானான். அதனால் தான் நல்லதையே செய்து, நல்லதையே எண்ணி, நல்ல முறையில் நடந்துகொள்ளும் போதுதான் உண்மையான மனிதன் என அழைக்கத் தகுதியாகின்றான். *நன்றி: ஞானச் சுடர்*

# அரசு வன்னியில் மேற்கொண்ட யுத்தம் மக்களை மீட்கவா? நிலத்தை மீட்கவா?

## கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரன்

கொழும்பு, ஏப். 29

தமிழ் மக்களை விடுவிப்பது என்ற பெயரில் இரண்டு வருடங்களுக்கு முன்பு எம் மண்ணில் நடத்தப்பட்ட கொடூர யுத்தத்திலிருந்து நாம் இன்னும் மீள வேண்டியிருக்கிறது. மக்களை விடுவிக்க நடத்தப்பட்ட யுத்தமா? அல்லது நிலத்தைக் கைப்பற்ற நடத்தப்பட்ட யுத்தமா? என்பதற்கு அரசு நேர்மையாகப் பதிலளிக்க வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

தந்தை செல்வாவின் 34ஆவது நினைவுதின கூட்டம் செவ்வாய்க்கிழமை கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றபோது அங்கு அதிகாரப்பகிர்வு மூலம் நிலையான அரசியல் தீர்வு என்ற தலைப்பில் நினைவுப்பேருரை நிகழ்த்துகையிலேயே சுமந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இந்நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தொடர்ந்து உரையாற்றுகையில்: மக்களை விடுவிப்பதற்காக நடத்தப்பட்ட யுத்தம் என்றால் நிலத்தின் மீதான அதீத அக்கறையிலும் பார்க்க மக்களின் உரிமைகள் குறித்து அக்கறை காட்டியாக வேண்டும். இது ஒரு புதுமையான கவர்ச்சியல்ல. ஆனால் அரசு மக்கள் மீது அக்கறை காட்டாது நிலத்தைக் கைப்பற்றுவதிலேயே அக்கறை காட்டி வந்திருக்கிறது.

யுத்த காலத்திலும் சரி அல்லது அதற்கு முன்னைய காலத்திலும் அரசு நிலத்தைக் கைப்பற்றுவதிலேயே அதீத அக்கறை காட்டிவந்திருக்கிறது.

வடக்கு, கிழக்கின் இன விகிதாசாரத்தை மாற்றி அமைக்கும் விதத்தில் நாடு சுதந்திரம் பெற்ற 1948 இல் இருந்து திட்டமிடப்பட்ட குடியேற்றங்களை அரசு மேற்கொண்டு வந்துள்ளது.

1827 இல் நடத்தப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பின்படி கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களின் எண்ணிக்கை அரைச்சதவீதமாகும். 1881 - 1921 இல் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி கிழக்கு மாகாணத்தில் சிங்களவரின் எண்ணிக்கை 4 சதவீதமாகும். 1947 இல் நாடு சுதந்திரம் அடைந்த போது கிழக்கு மாகாணத்தில் சிங்களவர்களின் எண்ணிக்கை 9 சதவீதமாகும்.

பண்டா-செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டபோது சிங்களவர்களின் எண்ணிக்கை கிழக்கு மாகாணத்தில் 13 சதவீதமாகவும் டட்லி-செல்வா ஒப்பந்தத்தின்போது 19 சதவீதமாகவும் இருந்தது. 1981 ஆண்டுநடத்தப்பட்டகணக்கெடுப்பின்போது கிழக்கு மாகாணத்தில் சிங்களவரின் எண்ணிக்கை 25 வீதமாக இருந்தது.

கடைசியாக 1981இல் நடத்தப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பின்போது நாட்டின் சனத்தொகையில் சிங்களவரின் எண்ணிக்கை 1947-1981 காலத்தில் 238 வீதம் அதிகரிப்பு காணப்பட்டது. ஆனால் கிழக்கு மாகாணத்தில் மாத்திரம் சிங்களவரின் எண்ணிக்கையில் 1947-1981 காலத்தில் 888 சதவீத அதிகரிப்பு காணப்பட்டது. இந்த உண்மைகள் உயர்நீதிமன்றம் வடக்கு-கிழக்கு இணைப்பை அங்கீகரிக்கும் தீர்ப்பில் இவ்விவரங்கள் ஏற்றுக் கொள்ளபட்டுள்ளன.

தந்தை செல்வாவின் சிந்தனையை ஏற்காததால்தான் நாடு இன்று இந்த நிலையில் உள்ளது.

1956 இல் ஒரு மொழி இரு நாடு என்று தீரக்கதரிசனமாகக் கூறிய கொல்வின் ஆர் டி சில்வா 1970 இல் அரசமைப்பு சபையில் தந்தை செல்வா கூறியதைக் கவனத்திற்கு எடுக்கவில்லை. நாட்டின் 1972 இல் கொண்டு வரப்பட்ட முதலாவது குடியரசு அரசமைப்பு இன உறவுக்குச் சாவு மணி அடித்தது.

சிறுபான்மையினரைக் காப்பாற்றும் பாதுகாப்பு அரணாகக் கருதப்பட்ட அரசமைப்பின் 29 ஆவது சரத்து நீக்கப்பட்டது.

அதிகாரப்பகிர்வு ஒழுங்கு வெற்றியளிக்க வேண்டும் என்றால் பிராந்தியங்கள் மற்றும் மாகாணங்களில் வாழுகின்ற மக்கள் தங்களின் அரசியல் ஆளுகையை தீர்மானிக்கும் உரிமையைப் பெற்றிருக்க வேண்டும். ஆளுகையில் அவர்களுக்குள்ள அதிகாரங்கள் மற்றும் பங்களிப்பு ஆகிய யதார்த்தமானவைய்ாக இருக்க வேண்டும், கனவாக இருக்கக் கூடாது.

இதுகாலவரை தமிழ் மக்களுக்கு உண்மையாகக் கிடைக்கக் கூடியதாக ஆட்சியின் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் நேர்மையான முயற்சி மேற்கொள்ளப்படவில்லை. தற்போதைய அரசமைப்பில் காணப்படும் கற்பனையான அதிகாரப் பகிர்வு யதார்த்தமானவை அல்ல.

தமிழ் மக்களுக்குச் சமத்துவமானதும் அவர்களின் வாழும் உரிமைக்கு உறுதியாக இருக்கக் கூடியதுமான விதத்தில் தற்போதைய அரசமைப்பில் தீவிர மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். தற்போதைய அரசமைப்பில் காணப்படும் போலி அதிகாரப்பகிர்வு உண்மையானதல்ல மற்றும் நிலைத்து நிற்கக்கூடியதுமல்ல ஒவ்வொரு குடிமகனும் சமத்துவமுள்ள பிரஜையாக வாழ வேண்டும் என்று தந்தை செல்வாவின் எண்ணத்தை மீட்டுப் பார்ப்போம்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள், பத்திரிகை நிறுவனங்களின் ஆசிரியர்கள், பிரமுகர்கள் என்று பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர். (ர)

# இறைமை என்பது கண்ணாடிப் பெட்டிக்குள் அடைத்து வைத்திருக்கக் கூடிய ஒன்றல்ல

## இப்படிக் கூறுகிறார் சம்பந்தன்

இறைமை என்பது கண்ணாடிப் பெட்டிக்குள் அடைத்து வைத்திருக்கக் கூடிய ஒன்றல்ல. அதனை பயன்பாடுக்கு விடவேண்டும். தமிழ் மக்களின் இறைமை, அரசியல் அபிவிருத்தியானது நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் வழங்கப்பட்டிருக்கவேண்டும். தவிர்க்க முடியாத காரணத்தினால் சமாதானத்துடன் அதனைப் பெற முடியாமல் போனது. அதனால் 34 வருடங்களாக நாடு தீர்வைத் தேடிக்கொண்டிருந்தது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எம். பியுமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் 34 ஆவது சிரார்த்த தினத்தை ஒட்டி இலங்கைத் தமிழரசுக்கட்சி ஏற்பாடு செய்திருந்த தந்தை செல்வா நினைவுப் பேருரை நிகழ்வில் தலைமையுரை ஆற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வு பம்புலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது முன்னதாக தந்தை செல்வாவுக்கும் மற்றும் யுத்தத்தில் உயிர் நீத்த சகலருக்கும் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடப்பட்டதுடன் அன்னாரின் உருவப்படத்துக்கு சம்பந்தன் எம்.பி மலர் மாலை சூட்டியதுடன் மாவை சேனாதிராசா எம்.பி மலர் தூவினார். இந்த நிகழ்வில் தூதுவராலயங்களின் முக்கியஸ்தர்கள், ஆளும், எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டதுடன் நினைவுப் பேருரையை நாடாளுமன்ற உறுப்பினர் எம். சுமந்திரன் ஆற்றினார்.

இந்த நிகழ்வில் சம்பந்தன் எம்.பி. தொடர்ந்து உரையாற்றுகையில்,

தேசிய பிரச்சினைக்கு சமாதானமாக வன்முறைகள் அற்ற ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றை தந்தை செல்வா வலியுறுத்தினார். அவ்வாறான தீர்வொன்றுக்காக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை 1957 ஆம் ஆண்டு அவர் வலியுறுத்தினார். அது முடியாமல் போய்விட்டது.

அதற்குப் பின்னர் ஆயிரக்கணக்கான சிவிலியன்களை திரட்டி வடக்கு - கிழக்கில் அரச அதிபர் காரியாலயங்களுக்கு முன்பாக சாத்வீக போராட்டங்களை முன்னெடுத்தார். அத்துடன் டட்லி சேனநாயக்க மதிக்கப்பட்ட தலைவர்களில் ஒருவர் என்ற கட்டமைப்பை உருவாக்கியிருந்தமையினால் அவரது ஆட்சியினை அவதானித்த செல்வா, அவரினால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்றிருந்த காலத்தில் இந்த நாடு இன்னும் பல பிரச்சினைகளை ஏற்றுக் கொண்டிருந்தது. அரசியலும் துன்பியலாகவே இருந்தது.

ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணவேண்டும் என் பதனையே வலியுறுத்தினார். இவ்வாறான காலகட்டத்திலேயே சிங்கள மொழி மட்டுமே அரச கரும மொழி என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது. அது நாட்டின் சுதந்திரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தியது.

ஜனாதிபதி பிரேமதாஸ இந்திய முறைமையின் பிரகாரம் அதிகார பகிர்வை அர்த்தமுள்ளதாக்குவதற்கு முயன்றார். ஐக்கியம், இறைமை மற்றும் இலங்கையில் தமிழ் மொழி பேசும் மக்களின் ஆள்புல ஒருமைப்பாட்டுடன் பல்லின மக்கள் மத்தியில் அதனை ஏற்படுத்துவதற்கு முயன்ற போதிலும் அந்த முயற்சியும் கைகூடவில்லை.

தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க ஏற்றுக் கொள்ளக்கூடிய பல திருத்தங்களை முன்வைத்தார். ரணில் விக்ரமசிங்க 2002 மற்றும் 2003 ஆம் ஆண்டுகளில் சர்வதேச ஆதரவுடன் ஒஸ்லோ, டோக்கியோ பிரகடனங்கள் மூலமாக நாட்டிற்குள் சமஷ்டி முறையில் தீர்வு காண்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசில் சர்வ கட்சி பிரதிநிதிகள் குழுவின் அறிக்கையில் தேசிய பிரச்சினைக்கு இறைமை மற்றும் ஆள்புல ஒருமைப்பாட்டுடன் தீர்வை முன்வைப்பது தொடர்பில் பரிந்துரைகளை முன்வைத் திருந்தது. இந்தியா மற்றும் இணைத் தலைமை நாடுகள் பிரிக்கப்படாத நாட்டிற்குள் தீர்வைக் காணவேண்டும் என்ற கருத்தியலின் அடிப்படையிலேயே இருந்தன.

எந்தத் தீர்வாக இருந்தாலும் ஆகக்கூடிய அதிகாரப் பகிர்வின் ஊடான தீர்வாகவே அமைய வேண்டும் என்பதுடன் பெரும்பான்மையானோர் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வாக அமையவேண்டும் என்பதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் வார்த்தையிலும் இருக்கின்றது.

அந்த வார்த்தைகளின் பிரகாரம் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளுக்கு அமைவாக ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வை முன்வைக்கவேண்டும் என்பதுடன் பிரிக்கப்படாத நாட்டிற்குள் முழுமையான ஆதரவுடன் அதிகாரப் பகிர்வை பெற்றுக்கொடுப்பது உங்களுடைய கைகளிலேயே இருக்கிறது. அதுவே நிலையான சமாதானத்தை நாட்டில் நிலை நிறுத்தும் என்றார்.

## சமய சந்நிதிகளில்

இளவாலை புனித யூதாதேயு ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நவநாள் திருப்பலியும், வழிபாடுகளும் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் மே மாதம் 7ஆம் திகதி சனிக்கிழமை நற்கருணை வழிபாடும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு திருச்சொரூப ஆசியும் இடம்பெறும். (ற-313)

* * *

தர்மபுரம், பிரமந்தனாறு இறை இரக்க ஆண்டவர் ஆலயத்தின் திருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு செபஸ்ரியன் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

நாளை சனிக்கிழமை நற்கருணை ஆசீரும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை திருவிழாத் திருப்பலியும் இடம்பெறவுள்ளதால் பக்தர்களின் நலன்கருதி ஆலயத்துக்கு வருகை தரும் பக்தர்களுக்காக கிளிநொச்சி பஸ் நிலையத்தில் இருந்து ஆலயத்துக்கு விசேட பஸ் சேவை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கும் இடம்பெறவுள்ளது. (ற-11)

***

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறவிருக்கின்றன.

எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.

## சம்பத் வங்கியின் 186 ஆவது கிளை திறப்பு

யாழ்ப்பாணம், ஏப்.29

சம்பத் வங்கியின் 186 ஆவது திருநெல்வேலி கிளை இன்று வெள்ளிக்கிழமை காலை 9.40 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

திருநெல்வேலி பிரதேச வாடிக்கையாளர்களின் நன்மை கருதி ஆரம்பித்து வைக்கப்படவுள்ள இந்தக் கிளை நிறுவனத்தின் திறப்பு விழா நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வங்கி முகாமையாளர் அறிவித்துள்ளார். (ம-313)

## திருத்தி வாசிக்கவும்

27 ஏப்ரல் 2011 புதன்கிழமை வெளியான உதயன் நாளிதழின் நான்காம் பகத்தில் வெளியான ''மகாசமாதியும் பரிநிர்வாணமும்'' எனும் கட்டுரையின் இரண்டாம் பந்தியின் இறுதியில் இடம்பெற்ற 'இறை ராச்சி த்தை அடைதல் ஜீவன் முக்தனாதல் ( கிறிஸ்தவத்தின் படி)'' எனும் வாக்கியத்தை ''இறை ராச்சியத்தை அடைதல் நித்திய ஜீவனாதல் (கிறிஸ்தவத்தின்படி)'' எனத் திருத்திவாசிக்க வேண்டும் என்று கட்டுரையாளர் - சங்கரன் அறியத்தருகிறார்.

### சிறுவர் துஷ்பிரயோகம், தற்கொலைகள் அதிகரிப்பு

# சமயத் தலைவர்கள் ஒன்று சேர்ந்து இளம் சமூகத்தைக் காக்கவேண்டும்

### சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம் கோருகிறது

யாழ்ப்பாணம், ஏப். 29

அதிகமான வசதி வாய்ப்புக்களும், பெற்றோரின் கண்டிப்பும் அரவணைப்பும் இல்லாமையே குடாநாட்டில் இளையவர், மாணவர்களின் தற்கொலைகளும், சிறுவர் துஷ்பிரயோகங்களும் அதிகரித்து வருவதற்குக் காரணங்களாக இருக்கின்றன.

எனவே இந்துமதக் குருமார்கள், சமயத்தலைவர்கள், ஆலயத் தொண்டர்கள், ஆலய பரிபாலகர்கள் தமது சமயப் பணிகளுடன் இளம் சமூகத்தைப் பாதுகாப்பதில் முயற்சிகள் மேற்கொள்ள முன்வரவேண்டும். இவ்வாறு சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கடந்த 4 மாதங்களில் 45 தற்கொலைகளும் கடந்த மாதத்தில் மட்டும் 15 சிறுவர் துஷ்பிரயோகமும் இடம்பெற்றிருப்பதைப் பத்திரிகை மூலமாக அறியமுடிகின்றது. இது மிகவும் கவலைதரும் விடயமாகும். அத்துடன் இந்த விடயம் பற்றி நாம் அனைவரும் அதிகமான கவனம் எடுக்கவேண்டியுள்ளது. கல்வி, ஒழுக்கம், தமிழ்க் கலாசார சிறப்புக்களால் புகழ்பூத்த யாழ்ப்பாணத்தை நாம் தலைகுனிய விடமுடியாது.

மனோதத்துவ நிபுணர்களின் கருத்துப்படி சிறுவர்களிடம் காணப்படும் மனவலிமையின்மை, நம்பிக்கையின்மை போன்றவற்றைத் தற்கொலைக்குக் காரணம் எனச் சுட்டிக் காட்டுகின்றார்கள். பாலியல் துஷ்பிரயோகங்களுக்குப் பெற்றோரின் அவதானிப்பின்மையும் சூழலும் காரணங்களாக அமைகின்றன. தற்கொலைகளையும் துஷ்பிரயோகங்களையும் உடனடியாகத் தடுக்க மக்கள் மத்தியில் குறிப்பாக இளையவர்கள், மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும். இவர்களுக்கு ஆன்மீகக் கருத்துக்களையும் ஒழுக்க நெறிகளையும் அன்புடன் புகட்டி நல்வழிப்பாதையைக் காட்டுதல் வேண்டும்.

ஆலயங்களில் விழாக்களை நடத்துவது போன்று ஆலய சமூகத்தினர் சமூக மேம்பாட்டுக்குக் கணிசமான பணத்தை ஒதுக்கித் துண்டுப் பிரசுரங்கள், போதனைகள், தெருக்கூத்துக்கள், நாடகங்கள் என்பவற்றை நடத்தவேண்டும்.

குறிப்பாக மாணவர்களின் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படும் வகையில் பாடசாலைகள் மற்றும் தனியார் கல்வி நிலையங்களில் ஒவ்வொரு பாடவகுப்புக்கும் முன்னர் ஐந்து நிடங்களாவது போதனைகள் நிகழ்த்தப்பட வேண்டும்.

இவ்வாறான பல வழிகளையும் கையாள்வதன் மூலம் உடனடியாகத் தற்கொலைகளையும் துஷ்பிரயோகங்களையும் தடுக்க முன்வரவேண்டும். இது ஒவ்வோர் இந்து ஆலய சமூகத்தினருடைய கடமையாகும்- என்றுள்ளது.

(ஐ-எ)

## கைப்பை திருட்டு

யாழ்ப்பாணம், ஏப். 29

யாழ். போதனா வைத்தியசாலையில் பணம், கைத்தொலைபேசி உள்ளிட்ட சிறு கைப்பை ஒன்று நேற்றுமுன்தினம் முற்பகல் திருடப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் என்பு முறிவு சிகிச்சைப் பிரிவிலுள்ள சிகிச்சைக்காகச் சென்ற பெண் ஒருவரின் கைப்பையே இவ்வாறு திருடப்பட்டுள்ளது. அந்தப் பையினுள் 2 ஆயிரம் ரூபா பணம், கைத்தொலைபேசி, மோட்டார் சைக்கிள் திறப்பு மற்றும் ஆவணங்கள் உள்ளன என்று கூறப்பட்டுள்ளது.

குறித்த பிரிவினுள் தான் இருந்த கதிரையில் கைப்பையை வைத்து விட்டு வைத்தியரிடம் சென்று திரும்பி வந்தபோதே கைப்பை காணாமல் போயிருந்ததாக அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாகக் குறித்த பெண் வைத்தியசாலைப் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார். சந்தேகத்தின் பேரில் பொலிஸார் ஒருவரைக் கைதுசெய்து விசாரித்துள்ளனர். எனினும் திருட்டப்பட்ட பொருள்கள் மீட்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ம-4)

# மாநகர முதல்வரின் அடாவடித்தனங்களுக்கு கட்சி பேதமின்றி உறுப்பினர்கள் கண்டனம்


யாழ்ப்பாணம், ஏப்.29

யாழ். மாநகர சபை முதல்வரின் தன்னிச்சையான செயற்பாடுகளை, அடாவடித்தனங்களை ஆளும்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒன்றாக இணைந்து கண்டித்தனர். நேற்றுமுன்தினம் புதன் கிழமை மாலை அம்மன் வீதியிலுள்ள யாழ்பாடி விருந்தினர் விடுதியில் மாநகரசபை உறுப்பினர்கள் இணைந்து நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போது மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவின் தன்னிச்சையான செயற்பாடுகளை பட்டியல் போட்டுக் காட்டினார்கள்.

முதல்வர் எதிர்க்கட்சி உறுப்பினர்களை மட்டுமன்றி ஆளும் கட்சி உறுப்பினர்களையும் உதாசீனப்படுத்தி வருவதாகவும் அவர்கள் வன்மையாகக் கண்டித்தனர். நகர முதல்வர் பதவி ஏற்று இரண்டு வருடங்கள் பூர்த்தியாகும் நிலையில் அவர் கட்சித் தலைமைக்கு விசுவாசமாக நடந்து கொள்கின்றாரே அன்றித் தம்மைத் தெரிவுசெய்த மக்களுக்கு விசுவாசமாகவும் அவர்களுக்கு நன்மையளிக் கவும் கூடிய எந்த ஒரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி. அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் மற்றும் தனது உறவினர்களுக்குப் பயன் தரும் திட்டங்களையே அவர் நடைமுறைப்படுத்தி வருகிறார். முதல்வரின் போக்கு ஜனநாயக நடைமுறைக்கு வேட்டு வைத்து சர்வாதிகாரத்தை நிலை நாட்டுவதாக இருக்கிறது.

நாடாளுமன்றமோ அல்லது மாகாண சபைகளோ நகர சபைகளோ பிரதேச சபைகளோ எதுவாக இருந்தாலும் அவற்றுக்கான விதிமுறைகளும் கோட்பாடுகளும் தனித்தனியே இருக்கின்றன. அவற்றுக்குக் கௌரவமளிக்க வேண்டியது தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொருவரதும் கடமையாகும். ஆனால் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா மாநகர சபையின் விதிமுறைகளையும் கோட்பாடுகளையும் தூக்கி எறிந்துவிட்டு சர்வாதிகார - அதிரடி நடவடிக்கைகளையே மேற்கொள்கிறார் எனக் கூறிய மாநகர சபை உறுப்பினர்கள் முதல்வரின் அராஜக நடவடிக்கைகள் சிலவற்றையும் சுட்டிக் காட்டினார்கள்.



✱ மாநகர சபையின் ஏகோபித்த அங்கீகாரம் பெறாமல் நகர மத்தியில் நவீன சந்தைக் கட்டடம் ஒன்றை அமைக்க தனியார் ஒருவருக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

✱ கட்டட ஒப்பந்தத்தைக் கொடுப்பதற்கு முறையான கேள்விப்பத்திரமும் கோரப்படவில்லை. கேள்விச் சபைப் பத்திரமும் கோரப்படவில்லை. கேள்விச் சபையும் தனியாக அமைக்கப்படவில்லை.

வெளிநாட்டில் வாழும் புலம்பெயர் தமிழர் ஒருவர் கட்டிக் கொடுக்க முன்வந்துள்ளதாக சபையில் உறுப்பினர்களிடம் தெரிவித்த முதல்வர் உள்ளூரிலுள்ள தனக்கும் தனது கட்சித் தலைமைக்கும் உபகாரங்களைச் செய்துவரும் தனியார் ஒருவருக்கு ஒப்படைத்துள்ளார்.

✱ கட்டடத்தின் மொத்த செலவினம், அங்கீகரிக்கப்பட்ட வரைபடம் எதுவுமே உறுப்பினர்களுக்கு வழங்கப்படவில்லை.

✱ ஐந்து மாடிக் கட்டடம் கட்டுவதற்கான சாத்திய வள அறிக்கையும் பெறப்படவில்லை.

முன்னாள் மேயர் ரவிராஜ் காலத்தில் அந்த இடத்தில் இரண்டு மாடிக் கட்டடத் தொகுதி ஒன்று அமைக்கும் பிரேரணை கொண்டு வரப்பட்டபோது மேற்கொள்ளப்பட்ட மண்வள ஆய்வின் போது அந்த இடம் கட்டடம் கட்டுவதற்குப் பொருத்தமான நிலம் அல்ல என உறுதிப்படுத்தப்பட்டது.

✱ இரண்டு மாடிக் கட்டடம் அமைக்கவே தகுதி இல்லை எனப் புறக்கணிக்கப்பட்ட இடத்தில் முதல்வர் ஐந்து மாடிக் கட்டடம் அமைக்க அனுமதி வழங்கியுள்ளார். எதிர்காலத்தில் இதனால் ஏற்படும் விபரீதங்களுக்கும் பின் விளைவுகளுக்கும் யார் பொறுப்பு?

✱ இந்தக் கட்டடத் தொகுதியில் எத்தனை கடைகள் அமையப் போகின்றன; அவை எத்தனை மாடிகள், என்பது கூட சபை உறுப்பினர்களுக்குத் தெரியாது. ஆனால் யாழ்.நகரில் தரகர்களாகச் செயற்படும் சிலர் ஒரு கோடி 90 லட்சம் தொடக்கம் இரண்டரைக்கோடி வரை பேரம் பேசி விற்பனை செய்து வருகின்றனர்.

✱ இந்தளவு பெரிய தொகை கைமாறும் போது ஒரு கோடி 10 லட்சம், ரூபாவுக்கு மட்டுமே பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது. எஞ்சிய தொகை கறுப்புப் பணமாக யார் கைக்குப் போகிறது? என்றும் கேள்வி எழுப்பினார்கள்.

அதேவேளை மாநகர சபை முதல்வரின் செயலாளரின் நேரடிக் கண்காணிப்புடன் பல ஊழல்கள் இடம்பெற்றுள்ளன. மாநகர சபைக்குச் சொந்தமான கடைகள் எந்தவிதமான கேள்வியுமின்றி தனிப்பட்ட முறையில் ஈ.பி.டி.பி. ஆதரவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. கடைகளின் உண்மையான உரிமையாளர்கள் உயிரோடு இருக்கும் போது அவர்கள் மிரட்டப்பட்டு வேறு நபர்களுக்கு அந்தக் கடைகள் பறித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. யாழ். நகரில் இடித்துத் தள்ளப்பட்ட மாநகர்சபையின் மலசலகூடத்தின் மேல் பலாத்காரமாகக் கடைகள் அமைக்கப்பட்டு ஆதரவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அருகில் சட்ட விரோதமான சைக்கிள் பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டு மாநகர சபையின் உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்படாத பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன. இந்தப் பணம் யார் கைகளுக்குச் செல்கிறது ?.

மாநகரசபை எல்லைக்குள் பொருத்தப்பட்டுள்ள விளம்பரப் பதாகைகளிலும் பல கோடி ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாகக் கணக்காய்வாளர் திணைக்களம் கண்டு பிடித்துள்ளது.

சபையில் காணப்பட்ட 52 வெற்றிடங்களுக்கு 7,500 விண்ணப்பங்கள் கிடைத்தன. எனினும் முதல்வர் ஆளும் கட்சி உறுப்பினர்களின் உறவினர்களான 25 பேருக்கு நியமனம் வழங்கியுள்ளார். அதேவேளை நகர சபை மைதான சுத்திகரிப்பு நடவடிக்கைகளுக்காக ஆளுநர் நிதியிலிருந்து தற்காலிக நியமனம் பெற்ற 460 ஈ.பி.டி.பி. ஆதரவாளர்கள் நகர சபைக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மாதாந்தம் 60 லட்சம் ரூபா சம்பளமாக வழங்கப்படுகிறது. இவர்கள் எந்த வேலையையும் செய்வதில்லை. ஆளும் கட்சிக் கூட்டங்களுக்கும் அமைச்சர்களின் வருகைகளுக்கும் தேர்தலின் போதும் நோட்டீஸ் ஒட்டுவதற்கும் கூட்டங்களுக்கு ஆள்களைத் திரட்டுவதற்குமே இவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

முதல்வரின் இந்த அராஜக நடவடிக்கைகள் தொடர்பாக வடமாகாண அளுநருக்கும் ஜனாதிபதிக்கும் அறிவித்துள்ளோம். இந்தக் குற்றச்சாட் [illegible] கள் தொடர்பாக சட்ட நடவ [illegible] கைகள் மேற்கொள்ளவும் [illegible] டுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதாலும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாலுமே நாங்கள் ஆளும் கட்சி, எதிர் அணி எனப் பேதம் பாராமல் மக்கள் நலன் கருதி இவற்றை வெளிப்படுத்துகிறோம் என்றும் கூறினார்கள்.

இந்தப் பத்திரிகையாளர் சந்திப்பின் போது ஆளும் கட்சி உறுப்பினரான சு.நிஷ [illegible] தன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களான அ [illegible] சோதி, கே.என். விந்தன் [illegible] ரத்தினம் ஆகியோர் விள [illegible] த்தனர். இவர்களுடன் உறு [illegible] னர்களான ந.ராஜதேவன், து.[illegible]லியஸ், பெ.ஜேக்கப், அமேரியம்மா அ.மரியகொற்றரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(த-14)

# நிறுத்தப்பட்ட ஜி.சீ.ஈ.பெறுபேறுகள் 15 ஆம் திகதி வெளியாக உள்ளன

## இன்று யாழ்ப்பாணத்தில் விசாரணை

யாழ்ப்பாணம்,ஏப்.29

அஞ்சல் அடையாள அட்டையுடன் சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றி பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகளுக்கான பெறுபேறுகள் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் அனுப்பி வைக்கப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

யாழ்.மாவட்டப் பரீட்சார்த்திகளுக்கான விசாரணைகளை மேற்கொள்ளப் பரீட்சைத் திணைக்களக் குழு இன்று யாழ்ப்பாணம் வருகின்றது.

இது தொடர்பாக் மேலும் தெரியவருவதாவது:

பரீட்சைப் பெறுபேறுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பரீட்சார்த்திகளிடம் மீளாய்வு விசாரணைகளை மேற்கொண்ட இந்தக் குழு இன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்றது.

யாழ்ப்பாணம் ஒன்று, இரண்டு என்று இரு பிரிவுகளாக நடத்தப்படவுள்ள இந்த விசாரணைகளுக்குப் பாதிக்கப்பட்ட மாணவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

விசாரணைகள் யாவும் பூர்த்தியடைந்ததும் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் பரீட்சார்த்திகளுக்குப் பெறுபேறுகள் அனுப்பி வைக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ம-9)

# ஆதன இலக்கங்களைச் சரிசெய்து, பார்வைக்கு வைக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஏப்.29

வலி.கிழக்கு பிரதேச எல்லைக்குள் இருக்கும் ஆதனங்களின் உரிமையாளர்கள் தங்களின் ஆதன இலக்கங்களைப் புத்தூர் உப அலுவலகம் தவிர்ந்த ஏணைய உப அலுவலகங்களில் தொடர்பு கொண்டு சரி பார்க்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஆதனங்களின் அந்த இலக்கங்களைப் பார்வைக்கு வைக்குமாறு புத்தூர் வலி.கிழக்கு பிரதேச சபை செயலர் திருமதி கோ. ஜெயந்தா கேட்டுள்ளார். (எ)

# வல்வை. குடிதண்ணீர் திட்டத்துக்கு ரூ.220 மில்லியன்நிதி

வல்வெட்டித்துறை பிரதேசத்துக்கு குழாய் மூலம் நீர் வழங்குவதற்காக 220 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்ட வேலை பூர்த்தியடையும் பட்சத்தில் அந்தப் பகுதி மக்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கிவந்த குடிதண்ணீர்ப் பிரச்சினை தீரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் இந்த வேலைத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. (ஐ-190)


# காரைநகர் தியாகராசா ம.வியில் டிஜிற்றல் நூலகத்துக்கு அடிக்கல்

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள டிஜிற்றல் நூலகக் கட்டடத்துக்கான அடிக்கல்லை வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்நேற்றுவியாழக்கிழமை நட்டு வைத்தார்.

வித்தியாலய அதிபர் பொ. சிவானந்தராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்,தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.இராதாகிருஷ்ணன், காரைநகர் கோட்டக்கல்விப் பணிப்பாளர் பு.ஸ்ரீவிக்னேஸ்வரன் மற்றும் காரைநகர் பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்டனர்.

வடமாகாணத்தில் முதலாவது டிஜிற்றல் நூலகமாக அமையும் இந்த நூலகம், நூல்கள் இல்லாது இணையத்தள, கணினி வசதிகளுடன் நவீன முறையில் அமைக்கப்படவுள்ளது. சுமார் பத்து மில்லியன் அரச நிதி இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-250)

## ஆரம்பித்து வைப்பு...



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா ம.ம. வித்தியாலயத்தில் அமைக்கப்படவுள்ள டிஜிற்றல் நூலகத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அடிக்கல்லை நட்டு வைக்கிறார். (250)

### யுனிசெவ் நிறுவன நிதி உதவியுடன்

# பிரதேச செயலகங்கள் ஊடாக மக்களுக்குப் பல்வேறு உதவிகள்

நாவற்குழி,ஏப்.29

யாழ்.மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச செயலகப் பிரிவுகளிலும் யுனிசெவ் நிறுவன நிதி உதவியுடன் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் உதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

யாழ்ப்பாணத்தின் ஏனைய 12 பிரதேச செயலகப் பிரிவுகளையும் சேர்த்து இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்கீழ் தெரிவு செய்யப்படவுள்ள வகையினர் விவரம்: மிக வறிய நிலையிலுள்ள மாற்றுஆற்றலுடைய பிள்ளைகள், அத்தகைய குடும்பத் தலைவரின் பிள்ளைகள், பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் பிள்ளைகள், அதிக பிள்ளைகளைக் கொண்ட மிக வறிய குடும்பத்தின் பிள்ளைகள். இவர்களில் தகுதியான ஒரு குடும்பத்துக்கு சுய தொழில் உதவித் தொகையாக ரூபா 25 ஆயிரம் வழங்கப்படவுள்ளது.

மாற்றுவலுள்ளோருக்குத் தேவைப்படும் வசதிகளை விரிவுபடுத்துவதற்கு உதவியாக ஒரு குடும்பத்துக்கு ரூபா 15 ஆயிரம் வ்ழங்கப்படும். அவசர சிகிச்சை நிமித்தம் மாற்றுவலுவுள்ளோர் சென்றுவரப் போக்குவரத்துச் செலவாக ஒரு தடவைக்கு ரூபா ஆயிரத்து 500 வீதம் 3 தடவைகள் ரூபா 4 ஆயிரத்து 500 வரை வழங்கப்படும்.

யாழ்.மாவட்டத்தில் அனைத்துச் செயலகப் பிரிவுகளிலும் சுயதொழில் உதவிக்கும் வசதிகளை மேம்படுத்துவதற்கும் தலா 50 பயனாளிகள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதுவரை பருத்தித்துறை, சங்கானை, சாவகச்சேரி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளிலும் வன்னிப் பிரதேச அனைத்துப் பிரிவுகளிலும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (எ-121)

# தபாலக ஊழியர் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத்தரக் கோரிக்கை

யாழ்ப்பாண்ம்,ஏப்.29

வடமாகாணத்தில் சேவையிலுள்ள உபதபாலதிபர்கள் மற்றும் உதவியாளர்களின் நியமனம் மற்றும் சம்பளம், விடுமுறை தொடர்பான பிரச்சினைகள் குறித்துத் தீர்வைப் பெற்றுத் தருமாறு தபால் அமைச்சிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

உபதபாலதிபர்களின் தொழிற்சங்கம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இது தொடர்பாக மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

தற்போது சேவையிலுள்ள உபதபாலதிபர்கள், உதவியாளர்களின் நியமனங்கள் பெறுவதில் சட்டரீதியாகப் பல்வேறுபட்ட பிரச்சினைகளைச் சந்திக்க நேரிட்டுள்ளனர்.

இதனால் 887 உப தபாலதிபர்கள் சேவையைவிட்டு விலகும் நிலைமை உருவாகியுள்ளது.

இவற்றைக் கருத்தில் கொண்டு சகல மதத் தலைவர்களிடம் மட்டுமல்லாது ஜனாதிபதி மட்டத்தில் உபதபாலதிபர்கள், உதவியாளர்களின் நியமனங்கள், சம்பளம், விடுமுறை தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்துள்ளதாக தாய்ச் சங்கத்தின் தலைவர் விமலரத்ன தகநாயக்கவால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-313)

# 89 ஆவது கூட்டுறவு தினத்தையொட்டி மாணவர்களிடையே பல்வேறு போட்டிகள்

89 ஆவது கூட்டுறவு தின விழாவை முன்னிட்டு யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபை பாடசாலை மாணவர்களிடையே போட்டிகளை நடத்தவுள்ளது.

மாவட்ட, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள், சங்கத் தலைவர்கள், பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள் ஆகியோர் பங்குகொள்ளும் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இதில் பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் எதிர்வரும் 14 ஆம், 15ஆம் திகதிகளில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

கூட்டுறவு உத்தியோகத்தர்களுக்கான போட்டித் திகதி,, இடம் ஆகியன பின்னர் அறிவிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

பாடசாலைமாணவர்களுக்கான போட்டிகள் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பொது அறிவும் (கூட்டுறவு சார்ந்த வினாக்கள்),முற்பகல் 11 மணிக்கு கவிதையும் பிற்பகல் ஒரு மணிக்கு விவாதமும் (விடயம் - கூட்டுறவுச் சட்டம் கூட்டுறவு அபிவிருத்திக்கு உதவி செய்கிறது) இடம் பெறவுள்ளது.

மறுநாள் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கலாசார குழு நடனமும் பிற்பகல் ஒரு மணிக்கு நாடகமும் இடம்பெறும்.

போட்டிகளுக்குத் தகுதியான மாணவர்கள் அனைத்து விடயங்களையும் யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையிலும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களிலும் பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து பாடசாலை அதிபரின் சிபாரிசுடன் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் 'செயலாளர், யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் கட்டடத் தொகுதி, இரண்டாம்மாடி, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். பெறுமதிவாய்ந்த பணப் பரிசில்களும், கேடயங்களும், சான்றிதழ்களும் வெற்றியாளர்களுக்குவழங்கப்படவுள்ளன. போட்டியாளர்களுக்குத் தனித்தனி அழைப்புக்கள் அனுப்பப்படமாட்டா. உரிய அட்டவணைப்படி மாணவர்கள் மண்டபத்துக்கு சமுகமளிக்குமாறு மேலும் கேட்கப்பட்டுள்ளது. (ம-311)

# சிங்கள பாட ஆசிரியர்களுக்கு செவ்வாய் கருத்தரங்கு

பருத்தித்துறை,ஏப்.29

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இரண்டாம் மொழி சிங்களத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு புலோலி மெதடிஸ்த தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பாடசாலையிலிருந்து ஓர் ஆசிரியரை அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். (ஐ-190)

# கடற்றொழில் நீரியல் திணைக்களம் ஊடாக மீனவர்களுக்கு கடன் அடிப்படையில் உதவிகள்

## இலங்கை வங்கி வழங்கவுள்ளது

யாழ்ப்பாணம்,ஏப்.29

இலங்கையில் கடற்றொழிலாளர்களுக்குத் தேவையான புதிய தொழிநுட்பத்துடன் கூடிய மீன்பிடிப் படகுகள் மற்றும் கடற்றொழில் உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டு இலங்கை வங்கி கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினூடாக மீனவர்களுக்குக் கடன் உதவிகளை வழங்கவுள்ளது.

இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களும் இந்த நிதியைக் கடனடிப்படையில் பெற்றுக்கொள்ள முடியும்.

யாழ்.கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் நேற்று முன்தினம் இந்தத் தகவலைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:

கடற்றொழிலாளர்களைத் தொழில் ரீதியாக அபிவிருத்தி செய்வது குறித்துக் கடந்த மாதம் கொழும்பில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதனடிப்படையில் 20 லட்சம் ரூபாவுக்கு உட்பட்ட கடன் தொகைக்கு 5.5 வீத வட்டியையும் 20 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட கடன் தொகைக்கு 8 வீத வட்டியையும் மீனவர்கள் செலுத்துதல் வேண்டும். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் இந்த இரண்டு கடன்களுக்கும் 4 வீத வட்டியை வழங்கவுள்ளது.

புதிய கடற்றொழில் கலம் உற்பத்தி மற்றும் புதிய இயந்திரம் கொள்முதல் செய்தல், கலங்களுக்குத் தேவையான உதிரிப்பாகங்களைக் கொள்முதல் செய்தல், கலம் மற்றும் கடற்றொழில் உபகரணங்களை நவீனமயப்படுத்தல், நவீன தொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்முதல் செய்தல், மீன் தயாரிக்கும் அலகு, அலங்கார மீன், நன்னீர் இறால், மோதா மீன், நீர்த்தாவரங்கள் மற்றும் ஏனைய நீர்வாழ் உயிரினச் செய்கைக்கு, மீன் குஞ்சுகள் கொள்முதல் செய்தல், மீன் விற்பனை செய்வதற்கு மோட்டார் சைக்கிள் மற்றும் மீன்பெட்டிகள் கொள்முதல் செய்தல், நீர்வாழ் உயிரினச் செய்கையாளர்களுக்குத் தேவையான உபபொருள்கள் கொள்முதல் செய்தல் என்பவற்றுக்கு இலங்கை வங்கி கடன் வழங்குகிறது.

இந்தக் கடன் தொகையைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் எமது திணைக்களத்தில் அதற்கான படிவங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். ஒருவர் இரண்டு படிவங்களைப் பூர்த்தி செய்து ஒப்படைத்தல் வேண்டும்.

இவற்றில் ஒரு படிவம் எமது திணைக்களத்துக்கும் மற்றைய படிவம் கொழும்பிலுள்ள எமது தலைமைத் திணைக்களத்தினூடாகவும் இலங்கை வங்கிக்கும் அனுப்பப்படும் .

பின்னர் அந்தந்த மாவட்டங்களிலுள்ள இலங்கை வங்கியின் கிளைகளினூடாகத் தொழிலாளர்கள் தமக்கான கடன் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும்- என்றார். (எ-4)

# கட்டடங்களுக்கு காணிகள் கொள்வனவு

யாழ்ப்பாணம்,ஏப்.29

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவில் கமநல சேவைகள் நிலையத்துக்கு அண்மித்ததாகப் பிரதான கால்நடை வைத்திய நிலையம் அமைக்கப்படவுள்ளது.

பிராண்பற்றில் கால்நடைக்கான உப வைத்திய நிலையக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இவற்றுக்கான காணிகள் பெறப்பட்டுள்ளன என்று யாழ். கால்நடைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி வி.அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்தக் கட்டடங்களுக்குரிய காணி கிடைக்காமையால் இதற்கான வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது.

புதிய கட்டடத்துக்கான உதவிகளை யூ.என்.டி.பி நிறுவனம் வழங்கும் எனவும் கூறப்பட்டது. (ம-7)

# கெற்பேலி வாசியைத் தாக்கிய நால்வருக்கு தலா 1,500 ரூபா அபராதம் விதிப்பு

## எதிரிகளில் ஒருவர் லண்டன் வாசி

தென்மராட்சி, ஏப். 29

வீதியில் வைத்து ஒருவரைத் தாக்கிய லண்டன் வாசி உட்பட நால்வருக்குத் தலா ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து தாக்குதலுக்கு இலக்கான கெற்பேலி வாசிக்கு 12 ஆயிரம் ரூபா நட்டஈடும் வழங்கவேண்டும் எனச் சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது.

அத்துடன், எதிரிகளுக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழியச் சிறையும் விதிக்கப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் கெற்பேலிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாகக் கொடிகாமம் பொலிஸார் இந்த நால்வரையும் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்திருந்தனர்.


அதைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்த நால்வரும் ஜனவரி 26 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது பொலிஸாரால் நால்வருக்கு எதிராகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் மா.கணேசராசா நால்வரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்துத் தலா ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து முறைபாட்டாளருக்கு 82 ஆயிரம் ரூபா நட்டஈடு வழங்குமாறு உத்தரவிட்டு நால்வருக்கும் ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்தார்.

கெற்பேலியை முன்னர் வசிப்பிடமாகக் கொண்ட இந்த லண்டன் வாசியின் கடவுச்சீட்டு நேற்றுமுன்தினம் நீதிமன்றில் கையளிக்கப்பட்டது. லண்டனிலிருந்து வருகை தந்த தினமே இந்த நபர் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஏ-207)

## நினைவுகள்...



தந்தை செல்வநாயகத்தின் 34 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். நகரில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் இடம்பெற்றது. இதன்போது "இலங்கை நாடாளுமன்றத்தில் தந்தை செல்வாவின் எழுச்சி உரைகள்" என்ற நூல் வெளியிடப்பட்டது. நூலின் முதற் பிரதியை தந்தை செல்வா அறங்காவலர் குழுவின் தலைவர் இளைப்பாறிய பேராயர் எஸ்.ஜெபநேசன் அடிகளாரிடம் இருந்து இலங்கை தமிழரசுக் கட்சியின் துணைச்செயலாளர் சீ.வி.கே. சிவஞானம் பெற்றுக்கொள்கின்றார். (23)

# வடமராட்சி சேவையை விஸ்தரிக்க மேலும் 20 பஸ்கள் தேவை

பருத்தித்துறை, ஏப். 29

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ தனது சேவையை விஸ்தரிப்பதற்கு மேலும் 20 பஸ்களும், 20 காப்பாளர்களும் தேவையாக இருப்பதாக டிப்போ முகாமையாளர் தெரிவித்தார். தற்போது பருத்தித்துறை டிப்போவில் 44 பழைய தரத்தையுடைய பஸ்களும், 33 புதிய தரத்தையுடைய பஸ்களும் உள்ளன. இவற்றைக் கொண்டே தற்போது சேவை நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம்- பருத்தித்துறை 750 பாதையில் தேவைப்பாடு அதிகமாகவிருப்பதால் ஒரு மணித்தியாளத்துக்கு ஒரு சேவை நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-190)

# சுரேஷ் பிரேமச்சந்திரனின் செயலாளர் மீது தாக்குதல்

## அச்சுவேலிப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 29

அச்சுவேலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் காயமடைந்த நிலையில் ஒருவர் யாழ் . போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அன்னலிங்கம் உதயகுமார் (ரமேஸ்-வயது-39) என்பவரே இவ்வாறு காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிய வருவதாவது:

மாலை 4 மணியளவில் அச்சுவேலியிலிருந்து புறப்பட்டு யாழ்.நகர் நோக்கி உதயகுமார் வந்துகொண்டிருக்கும் போது அச்சுவேலியில் உள்ள ரூபன் ஹேரால்டுக்கு அண்மையாக இரண்டு மோட்டார் சைக்கிளில் நின்ற நான்கு இனந்தெரியாத நபர்கள் இவரது மோட்டார் சைக்கிளை வழிமறித்துள்ளனர்.

அவர்கள் தாம் மறைத்து வைத்திருந்த இரும்புக் கம்பியால் உதயகுமாரைத் தாக்கியுள்ளார்.

தாக்குதலுக்கு இலக்கான உதயகுமார் காயங்களுடன் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

பின்னர் அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவரது தலையிலும் முதுகுப் பகுதியிலும் கடுமையான அடிகாயங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தாக்கப்பட்ட குறித்த நபர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனின் செயலாளர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-15)

## யாழ். - வன்னி மாவட்டங்களில்

# ஆசிரியர்களின் இடமாற்றம் ரத்தானதால் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 29

வடமாகாணத்தில் ஆசிரியர்களின் இடமாற்றங்களில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளால் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிப்படைந்து வருகின்றன என்று பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது யாழ்.,வன்னி மாவட்டங்களில் சேவையில் உள்ள ஆசிரியர்களின் இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதில் அரசியல் ரீதியாக ஏற்பட்டுள்ள தடைகளால் தரம் -05 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஆகிய பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் பாடத்திட்டங்கள் முற்றுப் பெறாமல் உள்ளன.

இவற்றில் குறிப்பாக வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் பாடநேரத்தில் கற்றல் நடவடிக்கைக்காகக் காத்திருந்துவிட்டு வீட்டுக்குச் செல்லவேண்டியுள்ளது.

இதனால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் அக்கறை கொண்டு ஆசிரியர்களுக்கான உரிய இடமாற்ற நடவடிக்கைகளை விரைவில் அமுல்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-313)

# மருத்துவர் பற்றாக்குறையால் அல்லாடும் அக்கராயன் மருத்துவமனை

அக்கராயன் பிரதேச மருத்துவமனை கிளிநொச்சி நகரிலிருந்து கிளிநொச்சியின் மேற்குப் புறமாக 19 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. இந்தப் பிரதேசத்தின் உயிர்நாடி அக்கராயன் மருத்துவமனையாகும்.

இந்தப் பிரதேச மருத்துவமனையில் நான்கு மருத்துவர்கள் பணியாற்ற வேண்டும் என்பது மருந்துவமனையின் ஆளணி விவரமாக உள்ளது.

ஆனால், பணியில் ஒரு மருத்துவர் மட்டும் இருப்பதால் இவர் விடுப்பு எடுக்கவோ அல்லது சுயதேவைகளை மேற்கொள்ளவோ முடியாத நிலையிலுள்ளார்.

மருத்துவர் விடுப்பில் சென்றால் மருத்துவமனை செயலிழந்து விடுகிறது. நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருந்து வீடு திரும்ப வேண்டியநிலை.

அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் இதுவரை 648 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன.

இதேபோன்று வன்னேரிக்குளம், ஸ்கந்தபுரம், ஆனைவிழுந்தான் குளம், கண்ணகைபுரம், முக்கொம்பன், கோணாவில், யூனியன் குளம், ஆரோக்கியபுரம், அமைதிபுரம், அம்பலபெருமாள் குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களின் உயிர் நாடியாகவும் அக்கராயன் மருந்துவமனை விளங்கிவரும் நிலையில் மருந்துவமனையில் காணப்படும் மருத்துவர் மற்றும் ஆளணிப் பற்றாக்குறைகள் காரணமாக மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பணியில் உள்ள மருத்துவர் தமது உச்சத் திறன்களைப் பயன்படுத்தி மக்களுக்குச் சேவை வழங்கி வருகிறார். இவர் உரிய நேரத்தில் வெளிநோயாளர் மற்றும் உள நோயாளர்களைப் பார்வையிட முடியாத நிலையில் உள்ளார்.

அக்கராயன் மருத்துவமனை 1967 ஆம் ஆண்டு முதல் இயங்கத் தொடங்கியது. போர்க்காலத்தில் கூட இந்த மருத்துமனையில் இரு மருத்துவர்கள் பணியில் இருந்துள்ளனர்.

1996 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் இடப்பெயர்வுகள் இடம்பெற்று கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை அக்கராயனில் இயங்கிய நாள்களில் மாதத்தில் 33 ஆயிரம் வெளிநோயாளர்கள் சிகிச்சை பெற்றனர். மக்களை ஆயிரக்கணக்கில் காப்பாற்றிய மருத்துவமனை இன்று மருத்துவர் நெருக்கடியால் திணறி நிற்கிறது.

போர் நடைபெற்ற காலங்களில் பொருளாதார நெருக்கடிகளுடன் மக்கள் மருத்துவ நெருக்கடியை எதிர்கொண்ட காலங்களில் மக்களின் உயிர்களைக் காத்த மருத்துவமனை இன்று அரச வளங்கள் கிடைக்கக் கூடிய சூழலில் மருத்துவர்கள் பணியில் இல்லாமையால் நோயாளர்கள் உயிராபத்துக்களை எதிர்நோக்கியுள்ளனர்.

மக்கள் இடைத்தங்கல் முகாங்களில் வாழ்ந்த நாள்களில் கிடைத்த மருத்துவ உதவிகள் கூட மக்கள் மீளக் குடியமர்ந்துள்ள நிலையில் பெற முடியாத அவலம் காணப்படுகிறது.

அக்கராயன் மருத்துவமனைக்கு மருத்துவர்களை நியமியுங்கள் என்று ஸ்கந்தபுரத்தில் நடைபெற்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மக்கள் சந்திப்பிலும் மக்கள் மனுக் கொடுத்தும் புதிய மருத்துவர்கள் வரவில்லை.

உருத்திரபுரத்திலும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிடம் மனுக் கையளிக்கப்பட்டும் பயன் இல்லை. கிளிநொச்சி மாவட்டத்தின் வன்னேரிக்குளம், முழங்காவில், தர்மபுரம், பூநகரி, வட்டக்கச்சி போன்ற இடங்களில் இயங்கும் மருத்துவமனைகளில் மருத்துவர்கள் பற்றாக்குறை நிலவுகிறது.

அக்கராயன் மருத்துவமனையில் நிலவும் மருத்துவர் பற்றாக்குறையைத் தீர்க்கப் புதிய மருத்துவர்கள் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும். அத்துடன், நடமாடும் மருத்துவ சேவையை நடத்த வேண்டும். இதற்கான நடவடிக்கையை கிளிநொச்சிப் பிராந்திய சுகாதார பணிமனை, கிளிநொச்சி அரச செயலகம் என்பன இணைந்து எடுக்க வேண்டும் என்பதே அக்கராயன் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள மக்களின் வேண்டுகையாக உள்ளது.

**கி.பிருந்திவி**

## ஆங்கில பாடப் பயிற்சி தெரிவுப் பரீட்சை

ஆங்கிலபாட ஆசிரியர் அல்லாதவர்கள் ஆங்கிலப் பாடத்தைக் கற்பிக்கும் பொருட்டுப் பொருத்த மானவர்களைத் தெரிவுசெய்து பயிற்சி வழங்குவதற்கான தெரிவுப் பரீட்சை கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் வலயங்களைச் சேர்ந்தோருக்கு இடம் பெறவுள்ளது.

இந்தப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு பயிற்சி பெறும் ஆசிரியர்கள் கிளிநொச்சிக் கல்வி வலயத்தில் ஆங்கில பாடத்தைக் கற்பிப்பதற்குநியமிக்கப்படுவார்கள்.

நாளை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறும் இந்தப் பரீட்சைக்கு ஏற்கனவே விண்ணப்பிக்கத் தவறிய ஆசிரியர்களும் தோற்ற முடியுமெனக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சிகளை வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வழங்குகின்றது. (க-405)

## 30 ஆண்டுகளுக்குப் பின்னர் பூநகரிப் பிரதேசத்துக்கு மின்சார வசதி

சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு கிளிநொச்சி மாவட்டம் பூநகரி வாடியடிப் பிரதேசம் வரை மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மின்சார சபையினர் கிளிநொச்சியில் இருந்து பூநகரி- பரந்தன் வீதி வழியாக இந்த மின்னிணைப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு இந்த மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளமை சிறப்பு அம்சமாகும். தற்போது உள்ளக மின்னிணைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்த வணிக நிலையங்கள், வீடுகள் ஆகியனவற்றுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை மின்சார சபையினர் ஆரம்பித்துள்ளனர்.

சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு பூநகரி மக்கள் இப்போது தான் முதன் முறையாக மின்சார வெளிச்சத்தைக் காணப் போகின்றனர். இந்த மக்கள் எத்தகைய பின் தங்கிய நிலையிலுள்ளனர் என்பதைப் புரிந்து கொள்வதற்கு இதுவொன்றே போதிய ஆதாரமாக உள்ளது. இந்த மூன்று தசாப்த காலத்துக்குப் பிறகாவது தமக்கு மின்சாரம் வழங்கப்பட்டமை ஒரு வரப்பிரசாதம் என்றே பூநகரி மக்கள் கருதுகின்றனர். இது தமது வாழ்வில் ஒளியை மட்டுமல்ல முன்னேற்றத்தையும் வழங்குமென இவர்கள் நம்புகின்றார்கள்.

தமது பிரதேசத்துக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்னின்று உழைத்த அனைவருக்கும் பூநகரிப் பிரதேச மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

**வேலையாள் தேவை**

வீட்டில் தங்கியிருந்து வயோதிபப் பெண் ஒருவரைப் பராமரிப்பதுடன் வீட்டுவேலைகளையும்செய்யக்கூடிய வரான பெண் வேலையாள் தேவை.

தொடர்பு: 0778253317

**றோஸ் விற்பனைக்கு**

குளிர்ப்பிரதேச கன்றுகள் வாங்கித் திருப்தியடையாதவர்கள் திருநெல்வேலி மேற்கு தலங்காவல் பிள்ளையார் வீதி கிருஷ்ணா றோசாத் தோட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பழைய ஒட்டு முறைக் கன்றுகளை வாங்கலாம். வேப்பிலை மருந்தும் விளக்கங்களும் கொடுக்கப்படும்.

குறிப்பு: இந்த விளக்கங்கள் 22.04.2011 ஆம் திகதி உதயனின் 12 ஆம் பக்கத்தில் வெளியாகியிருந்தன.

(3612)

## சந்தை இயங்காமையால் மக்கள், விவசாயிகள் சிரமம்

மாங்குளம் பொதுச் சந்தை இதுவரை இயங்காமையால் பிரதேச மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். மாங்குளம் பொதுச்சந்தை கடந்த காலப் போர் காரணமாக அழிவடைந்தது.

தற்போது மக்கள் மீளக்குடியமர்வு செய்யப்பட்டு ஒரு வருடத்தைத் தாண்டியுள்ள நிலையிலும் இதனை இயங்கச் செய்வதற்கு எதுவித நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. கடந்த காலத்தில் 35 இற்கும் அதிகமான மரக்கறி வியாபாரிகளும் 30 இற்கும் மேற்பட்ட இதர வியாபாரிகளும் இந்தச் சந்தையில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர்.

தற்போது சந்தை இயங்க வைக்கப் படாமையால் மாங்குளம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற விவசாய விளைபொருள்களைச் சந்தைப் படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் சரியான விலைகள் இன்றிக் குறைந்த விலையில் உள்ளூர் வணிக நிலையங்களுக்கு இவற்றைக் கொடுக்க வேண்டிய நிலை காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம்
21 • 01 • 1921



மறைவு
11 • 05 • 2010

(திதி அபரபக்க திரயோதசி 30.04.2011)

**அமரர் மயில்வாகனம் வெங்கடாசலபிள்ளை**

(ஓய்வுபெற்ற ஆசிரியர், கண்டி கெங்கெல்லை அரசினர் பாடசாலை, யா/வல்லை சிவகுரு வித்தியாசாலை, அதிபர், யா/ கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, 5 ஆவது பரிபாலகர் - அடியார் மடம், செல்வச்சந்நிதி, தொண்டமானாறு)

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறாது எங்கள் துயர்
மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து எமக்குக்
காட்டிய வழியில் எங்கள் பணி தொடர்கிறது
அதில் காண்கின்றோம் என்றும் உங்களை....!

நாளை (30.04.2011) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந் திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவகுரு வித்தியாசாலை வீதி,
வல்வெட்டித்துறை.

(40-24-50)(3599)

குடும்பத்தினர்.

**வடமராட்சி மண்ணில்.....**

**இன்று முதல் மூன்று நாள்களுக்கு....!**

**31 ஆம் அணி யாழ். மருத்துவ பீட மாணவர்கள் ஏற்பாட்டில்**

**மாபெரும் மருத்துவ விழிப்புணர்வுக் கண்காட்சி - 2011**

அனுமதி இலவசம்

இடம்: யா/ஹாட்லிக் கல்லூரி
காலம்: 2011 ஏப்ரல் 29, 30 ஆம் திகதி, மே முதலாம் திகதி
நேரம்: மு.ப. 9 - பி.ப. 4 மணி வரை

(வெள்ளி மு.ப. 9 மணியிலிருந்து பாடசாலை மாணவர்கள் பார்வையிடலாம், வெள்ளி பி.ப. 2.30 இலிருந்து சனி, ஞாயிறு முழுவதும் பொதுமக்கள் பார்வையிடலாம்)

★ நீரிழிவு ★ புற்றுநோய்
★ மாரடைப்பு, மார்புமுடக்குவலி ★ ஆஸ்துமா
★ உயர்குருதியமுக்கம் ★ வீதி விபத்துக்கள்
★ பார்வை தொடர்பான பிரச்சினைகள் ★ முதலுதவி

ஆகிய தலைப்புக்களில் விழிப்புணர்வுக் கண்காட்சியும் விளக்கமும் இடம்பெறும்.

★ இலவச மருத்துவ பரிசோதனைகள் (நீரிழிவு, குருதியமுக்கம்)
★ இலவச மருத்துவ ஆலோசனைகள்
★ விவரண காட்சிகளும், விளக்கங்களும்
★ கண் பரிசோதனையும், இலவச வாசிப்பு கண்ணாடி வழங்கலும்
★ ஆஸ்துமா பரிசோதனையும் இலவச உறிஞ்சிகள் (inhalers) வழங்கலும்
★ விழிப்புணர்வு துண்டுபிரசுரங்கள்

இன்னும் பல......

வருமுன் காப்போம்
நோயற்ற சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்

*அனைவரும் அணிதிரண்டு வந்து, கண்காட்சியைக் கண்டு பயன்பெற அன்புடன் அழைக்கின்றோம்.*

- கண்காட்சி ஏற்பாட்டுக்குழு -

(பாடசாலை வளாகத்தினுள் தகுந்த சீருடையுடன் வருவது விரும்பத்தக்கது)

அனுசரணை: நீரிழிவு சிகிச்சை நிலையம், இதய நோய் சிகிச்சைப் பிரிவு (யாழ். போதனா வைத்தியசாலை), மார்பு சிகிச்சை நிலையம் - பண்ணை, புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு, Vision Care

ஊடக அனுசரணை: உதயன்

# பூநகரி வைத்தியசாலை இராணுவத்தினர் பாவனையில் பிரதேச மக்களின் மருத்துவ சேவை அவல நிலையில்

பூநகரி,ஏப்.29

பூநகரிப் பிரதேச வைத்தியசாலை தற்போது இலங்கை இராணுவத்தின் முழுக்கட்டுப்பாட்டில் இருப்பதால் பொது மக்கள் தமக்குரிய வைத்திய சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்று தெரிவிக்கின்றனர். போருக்கு முந்திய காலப் பகுதியில் இந்த வைத்திய சாலை சிறந்த சேவையை மக்களுக்கு வழங்கிவந்தது. பின்னர் அங்கு வந்த இராணுவத்தினர் வைத்தியசாலையைத் தமது முழுக் காட்டுப்பாட்டின் கீழ்கொண்டு வந்தனர். அத்துடன் அதனைத் தமது பாவனைக்காக உபயோகப் படுத்தி வருகின்றனர். இதனால் தனியாருக்குச் சொந்தமான வீடொன்றில் வைத்தியசாலை இயங்கிவருகின்றது. இங்கு எந்த வித வசதிகளும் இல்லாத நிலையே காணப்படுகின்றது. இதனால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். பாம்புக் கடி, பிரசவம், வலிப்பு போன்றவற்றுக்குச் சிகிச்சை பெறுவதற்கு அவசரமாக நோயாளிகள் இங்கு சென்றால் பெரும்பாலான நாள்களில் வைத்தியர் இருப்பதில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் நோயாளர்கள் உயிராபத்துக்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது. மேலும் இந்த வைத்திய சாலைக்கெனத் தாதியர் எவரும் இதுவரை நியமிக்கப்பட வில்லை. மருத்துவ மாது கூட இல்லை. வறுமையில் வாடும் இந்தப்பகுதி மக்கள் இதனால் பெரும் அவலங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த வைத்தியசாலையின் அவல நிலை தொடர்பாக அரச அதிபர், கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் ஆகியோருக்குப் பல முறை எடுத்துக் கூறிய போதும் பலனேதும் கிட்டவில்லை என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். மேலும் அரச அதிகாரிகள் தமது கதிரைகளைப் பாதுகாப்பதற்காக மக்களின் அவலங்களை மறைத்து வருகின்றனர் என்று இந்த மக்கள் மேலும் விசனத்துடன் கூறுகின்றனர்.

ஆகவே, இந்த வைத்திய சாலை தொடர்பாக மனித உரிமை அமைப்புக்கள் குரல் கொடுத்து வைத்தியசாலையை இராணுவத்திடமிருந்து மீட்டெடுக்க வேண்டுமெனவும் மக்கள் வேண்கோள் விடுக்கின்றனர். (க)

## கோட்டை கட்டிய குளம் வான்பாய்கிறது

கடந்த சில நாள்களாப் பெய்து வரும் மழை காரணமாக துணுக்காய் கோட்டை கட்டியகுளம் வான் பாய்கிறது. இதன் காரணமாக சிறுபோக நெற்செய்கை முயற்சிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

கோட்டைகட்டிய குளத்தின் கீழ் 405 ஏக்கரில் காலபோகம் நெற்செய்கை மேற்கொள்ள முடியும். இந்த ஆண்டு சிறுபோகம் 70 ஏக்கரில் மேற்கொள்ளப்படவுள்ளது. சிறுபோக நெற்செய்கை முயற்சிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில் குளம் வான்பாய்வதால் நெற்பயிர்ச்செய்கையில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (410)

## கோடை மழையால் அவதிப்படும் மீள்குடியமர்ந்த கிளிநொச்சி மக்கள்

கிளிநொச்சி, ஏப்.29

கிளிநொச்சியில் கோடை மழை தொடர்ந்து பெய்துவருவதால் தாழ்வான பிரதேசங்களில் மீளக்குடியமர்ந்த மக்கள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர் என்று தெரியவருகின்றது. கோடை மழை இந்தமுறை மாரிகாலத்தைப் போன்றே தொடர்ந்து பெய்து வருகின்றது. கிளிநொச்சியிலும் இந்த மழை தொடர்வதால் மீளக் குடியமர்ந்த மக்கள் சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியபரிதாப நிலையிலுள்ளனர். குறிப்பாகத் தற்காலிகக் குடிசைகளில் வாழும் மக்கள் பெரும் அவலங்களுக்கு ஆளாகி வருகின்றனர் என்று தெரிகின்றது.

மாரிகாலத்தில் மழையால் அல்லற்பட்ட தாம் கோடையிலும் அவதிப்பட வேண்டியுள்ளதேயெனக் கவலையுடன் இவர்கள் தெரிவிக்கின்றனர். (க)

### உயிர்காக்கும் சேவை ...



ஊக்கமான அதிகாரிகள்: மன்னாரில் அவசர அம்புலன்ஸ் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்ட திணைக்களங்களின் உயரதிகாரிகள் மற்றும் பாதுகாப்புப் படையின் அதிகாரிகள்.

## கிளிநொச்சி, முல்லைத்தீவில் விலங்கு வேளாண்மை பாதிப்பு

கிளிநொச்சி, ஏப்.29

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் விலங்கு வேளாண்மை பாதிக்கப்பட்டுள்ளது. போர் நடைபெற்ற காலங்களில் ஆயிரக்கணக்கில் கால்நடை கள் இறந்துள்ளமை காரணமாகவே விலங்கு வேளாண்மை பாதிக்கப்பட்டுள்ளது.

விலங்குவேளாண்மை முயற்சிகளை ஊக்குவிப்பதற்கு அரச உதவிகளை மீளக்குடியமர்ந்த மக்கள் வேண்டி நிற்கின்றனர். இதே வேளை விலங்கு வேளாண்மை முயற்சிகளை முன்னெடுப்பவர்களுக்கு மேய்ச்சல் தரவைகளை சென்றடைவதில் இடர்கள் ஏற்பட்டுள்ளன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் விலங்கு வேளாண்மையினை முன் னெடுப்பதற்கு அரச உதவிகள் கிடைக்க வேண்டும் என்பதே மக்களின் வேண்டுகையாக உள்ளது. (410)

# முழங்காவில் ஆஸ்பத்திரியில் வைத்திய அதிகாரிக்கு விடுதி

பூநகரி, ஏப்.29

முழங்காவில் பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி விடுதி 56 லட்சம் ரூபா செலவில் மீள்நிர்மாணம் செய்யப்படவுள்ளது.

வடக்கு மாகாணக் கட்டடங்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் எந்திரி செ. மோகனதேவன் இதற்கான கேள்வி கோரலைச் செய்துள்ளார்.

இந்த விடுதி நிர்மாணப் பணி முடிவுற்றதும் முழங்காவில் அயற்பிரதேச மக்கள் சிறந்த மருத்துவச் சேவையைப் பெற முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-121)

# நிரந்தரக் காணிகளில்லாத மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு இந்திய வீட்டுத்திட்ட வீடுகள்

### கிளிநொச்சி அரச அதிபர் கூறுகிறார்

கிளிநொச்சி, ஏப்.29

கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தரக் காணிகள் இல்லாத குடும்பங்களுக்கு எதிர்காலத்தில் இந்திய அரசின் நிதியுதவியுடன் அமைக்கப்படவுள்ள வீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபாவதி கேதீஸ்வரன் கடந்த செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கூடுதலான மக்கள் நிரந்தரக் காணிகளோ, வீடுகளோ அற்ற நிலையில் அரச காணிகளிலும் தனியாருக்குச் சொந்தமான காணிகளிலுமே வாழ்ந்து வருகின்றனர்.

இதனால் இவர்களுக்கு இந்திய அரசால் அமைக்கப்படவுள்ள வீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

யுத்த நடவடிக்கையின் போது மிகவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேர்ப் திட்டத்தின் கீழும் தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் மூலமும் வீட்டு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுவருகின்றன.

இதைவிடக் காணிகள் அற்ற குடும்பங்கள் அதிகமாக இருப்பதால் அவர்களுக்கு இந்திய வீட்டுத்திட்டத்தில் வீடுகள் கொடுக்கப்படவுள்ளன எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

# தொடரும் கோடை மழை காரணமாக பூநகரியில் மிளகாய்ச் செய்கை பாதிப்பு

கிளிநொச்சி,ஏப்.29

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராமங்களில் மிளகாய்ச் செய்கையில் ஈடுப்பட்ட விவசாயிகளின் மிளகாய்க் கன்றுகள் மழை காரணமாக அழிந்துள்ளதால் அவர்கள் பெரும் நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர்.

பூநகரியில் மிளகாய்ச் செய்கையில் ஈடுபடும் கிராமங்களில் சிறுகுளங்களைக் கொண்ட பிரதேசங்களான விடத்தல், எல்லைக்கால், சின்னத் தம்பிராய், மூலையடம்பன், காசி குடா, கல்யாண குன்று, பல்லாய், செம்பன் குன்று, முட் கொம்பன், பெரிய தம்பிராய் போன்ற இடங்களில் மிளகாய்ச் செய்கையில் ஈடுபட்டவர் களின் மிளகாய் கன்றுகள் பகுதியளவிலும் முழுமையாகவும் சேதமடைந்துள்ளன. போர் ஒன்றுக்கு முகம் கொடுத்து எல்லாவற்றையும் இழந்து மெல்ல மெல்லத் தமது வாழ்வாதாரத்தை உயர்த்த முயலும் மக்களுக்கு இது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. பெரும்போக நெற்செய்கையிலும் கடும் மழை, வெள்ளம் காரணமாக இந்தப் பகுதி விவ சாயிகள் பெரியளவில் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-406)

# மாங்குளம் நீதிபுரத்தில் மீளக்குடியமர்ந்தோர் அடிப்படை வசதிகள் எவையுமின்றித் தவிப்பு

கிளிநொச்சி, ஏப்.29-

முல்லைத்தீவு மாங்குளம் நீதிபுரம் கிராமத்தில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் எவையும் சரியான முறையில் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நீதிபுரம் கிரா மத்தில் இதுவரை சுமார் 60 இற்கும் அதிகமான குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன.

இவர்களுக்கான நிரந்தர வீடுகள் அல்லது வீட்டுக்கான அனுமதிகள் எவையும் வழங் கப்படவில்லை.

இதனால் கடந்த ஒரு வருடமாகத் தறப்பாள் கொட்டகைகளிலேயே அதிகமான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

அத்துடன் இப்பகுதியில் உள்ள குடும்பங்கள் யாவும் மிக வறிய நிலையில் உள்ளன.

இவற்றின் வாழ்வாதாரமும் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. போதிய அடிப்படை வசதிகள் எவையும் இன்றி இவர்கள் வாழ்ந்து வரு கின்றனர்.

ஆகவே. மேற்படி கிராமத் தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு அரச நிறுவனங்களோ, அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களோ முன்வந்து அடிப்படை வசதிகளையாவது மேற்கொண்டு உதவுமாறு அந்த மக்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (க)

# தந்தை செல்வாவின் பாசறையிலேயே முஸ்லிம் அரசியல் தலைமைகள் உருவாகின

## திருமலை மாவட்ட முன்னாள் எம். பி. துரைரெட்ணசிங்கம் தெரிவிப்பு

திருகோணமலை,ஏப்.29

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் தந்தை செல்வநாயகத்தின் பாசறையில் தான் முஸ்லிம் அரசியல் தலைமைகள் உருவாகி வந்துள்ளன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

தந்தை செல்வநாயகத்தின் 34 ஆவது சிரார்த்த நினைவு தினத்தையொட்டி கடந்த செவ்வாய்க்கிழமை திருகோணமலை திருஞானசம்பந்தர் வீதி, சிவபுரி சந்தியில் அமைந்துள்ள அன்னாரது உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செய்யும் நிகழ்வுக்குத் தலைமை வகித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ் மற்றும் முஸ்லிம் ஒற்றுமைக்கு அடித்தளமாக விளங்கியவர் தந்தை செல்வாவே. தந்தை செல்வாவின் காலத்திலேயே அரசியல் தீர்வு ஒன்று காணும் சந்தர்ப்பம் நாட்டின் சிங்களத் தலைமைகளுக்குக் கிடைத்தது.

அதனை சிங்கள அரசியல் தலைமைகள் பயன்படுத்தத் தவறிவிட்டன. இது சிங்கள அரசியல் தலைமைகள் சிங்கள மக்களுக்கு செய்த துரோகமாகும் - என்றார்.

இந்த நினைவு தின நிகழ்வில் திருமலை நகரசபையின் உறுப்பினர்களான கோ.சத்திய சீலராஜா, சி.நந்தகுமார், நா.சதீஸ் கண்ணா ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச)




மட்டக்களப்பில் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று வியாழக்கிழமை காலை நடைபெற்றது. இந்த ஊர்வலத்தில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தாதியர்கள் மற்றும் மட்டக்களப்பு நகரிலுள்ள பாடசாலையின் உயர் வகுப்பு மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச)

## யாழ்ப்பாணத்தில் திருடிய வான் பதுளையில் மீட்பு

யாழ்ப்பாணத்தில் திருடப்பட்ட வானொன்றை பதுளையில் விற்க முயன்ற மூவர் பதுளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த வானை 15 லட்ச ரூபாவுக்கு பதுளையில் உள்ள ஒருவர் விலை பேசி 5 லட்ச ரூபாவை முற்பணமாகக் கொடுத்துள்ளார். ஓரிரு நாள்களில் மிகுதிப் பணமான பத்து லட்சம் ரூபாவை எடுத்துச் சென்றபோது, தான் முற்பணம் கொடுத்தபோது வானில் இருந்த இலக்கத் தகடுகள் மாற்றப்பட்டு வேறு இலக்கத் தகடுகள் பொருத்தப்பட்டிருந்ததை அவதானித்த அவர் பதுளை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். அதனையடுத்து விற்பனைக்கு இடைத்தரகராகச் செயல்பட்டவருடன் மூவர் கைது செய்யப்பட்டனர். (ச-5)

# கோழித்தீன், பால் பக்கெட் தொழிற்சாலைகள் செங்கலடி ப.நோ.கூ. சங்கத்திடம் கையளிப்பு

மட்டக்களப்பு,ஏப்.29

நெக்டப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் அக்சஸ் நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட மட்டக்களப்பு சித்தாண்டி கோழித்தீன் உற்பத்தித் தொழிற்சாலையும் செங்கலடி பசுப்பால் பக்கெட் உற்பத்தித் தொழிற்சாலையும் உத்தியோகபூர்வமாக செங்கலடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் அக்சஸ் நிறுவனத்தினால் கையளிக்கப்பட்டன.

இந்தநிகழ்வில் கிழக்கு மாகாண விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ந.செந்தீபன் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணம் இன்று பொருளாதார வளர்ச்சியைக் கண்டுள்ளது. இந்த வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தவை விவசாயத்திற்கு அடுத்ததாக கோழி வளர்ப்பும் மாடு வளர்ப்பும் ஆகும்.

கிழக்கு மாகாண கோழிப் பண்ணையாளர்கள் கோழித்தீன்களைக் குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்வதில் சிக்கல்களை எதிர்நோக்கினர். உள்ளூர் கோழிவளர்ப்பு குறைவடைந்தது. இந்தப் பிரச்சினையை நீக்கும் பொருட்டு, இந்த உற்பத்திச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. புதிய தொழில்நுட்பத்திலான சத்துக்கள் நிறைந்த கோழித்தீன்கள் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்னால் கிழக்கு மாகாண உற்பத்தியாளர்கள் இலகுவாகக் கோழித்தீன்களைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இனிமேல் கோழி வளர்ப்பு கிழக்கு மாகாணத்தில் அதிகரிக்குமென நம்புகின்றேன்.

இதேபோன்றுதான் கால்நடை உற்பத்தியாளர்களும் பால் உற்பத்தியை விற்பனை செய்வதில் நெருக்கடிகளை எதிர்நோக்கினர். இவர்களிடமிருந்து பாலைக் கொள்வனவு செய்து, சுத்தப்படுத்தி, பக்கெட்டுக்களில் அடைத்து விற்பனை செய்வதற்கான தொழிற்சாலையும் செங்கலடியில் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் பாலையும் உரிய நேரத்திற்கு விற்பனை செய்யக்கூடியதாக இருக்கும். பால் பக்கெட்டுக்களைக் குறைந்த விலையில் பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கும் எமது அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்தத் தொழிற்சாலையில் பொருத்தப்பட்டுள்ள புதிய தொழில்நுட்பத்திலான இயந்திரங்களை இயக்குவதில் சிக்கல்கள் உள்ளன. இதனால் பணியாளர்களுக்கான பயிற்சி வகுப்புகளை அக்சஸ் நிறுவனத்தின் மூலம் நடத்த எமது அமைச்சு திட்டமிட்டுள்ளது. இதனால் கிழக்கு மாகாணத்தில் நூற்றுக்கணக்கான இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களும் கிடைக்கும்- என்றார்.


# இறை பணியில் வெள்ளி விழா - 29.04.2011

## அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ அ.கா.

## யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி



அருட்சகோதரி
மரிய றொசாறியோ அ.கா
B.A. Dip in Ed.
(1986.04.29 - 2011.04.29)
வெள்ளி விழாவை
நிறைவு செய்யும்
எம் அதிபர்

### வெள்ளி விழாக் கண்டு நிற்கும் அதிபருக்கு வாழ்த்து

துறவற வாழ்வில் இன்று வெள்ளி விழாக் கண்டு பூரித்து நிற்கும் யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ அ.கா அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். துறவு வாழ்வென்பது வாழ்வைத் துறப்பதல்ல; செய்யும் செயலின் பலனைத் துறப்பதாகும். தன்னை மறுத்து அதிகார தாகமோ தாக்கமோ இன்றி எல்லோருக்கும் சமமாகப் பணி செய்து துறவறத்தில் வெள்ளி விழா காண்பவர். காலத்தின் கண்ணாடியாக நின்று துறவற வாழ்விலும் கல்லூரிச் சமூக வாழ்விலும் இனிய சுவை தரும் கனியாகத் திகழ்ந்தவர். அவரது இறைபணியின் மேன்மையே சமூகப் பணியை மிளிரச் செய்கின்றது.

அவரது இறைபணி இனிதே தொடர எனது இதயம் கனிந்த வாழ்த்துக்களைக் கூறி நிற்கின்றேன்.

*திருமதி அ.வேதநாயகம்,*
*வலயக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்.*

### கோப்பாய் கோட்டத்தின் அருட் சகோதரி

துறவறம் என்பது மனித முயற்சியின் வெற்றியல்ல; மாறாக கடவுளின் நற்கொடையாகும். இறைவனின் கட்டளைக்கு அடிபணிந்த விசுவாசம் நிறைந்த இறைபக்தி வாழ்வுடன் கடமையையும் கண்களிரண்டாய் மேற்கொண்டு மாணவர் மத்தியில் நல்ல திபராய் வலம் வரும் யா/ புனித தெரேசாள் மகளிர் கல்லூரியின் அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ அவர்கள் தமது துறவற வாழ்வின் இருபத்தைந்தாவது ஆண்டினை நிறைவு செய்து கொள்வது பெருமைக்குரியது. இவரது துறவற வாழ்வின் மகிமையைப் போற்றி இந்நாளில் அவரை மன நிறைவுடன் வாழ்த்துகின்றேன்.

*வே.பாலசுப்பிரமணியம்,*
*கோட்டக் கல்வியதிகாரி, கோப்பாய்.*

### எல்லோரும் வாழ எந்நாளும் தன்னை செபத்தில் இணைத்துக் கொண்டவர்

என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற மகுட வாசகத்துக்கு அமைவாக இளமையிலேயே துறவற வாழ்வில் தன்னை இணைத்து வெள்ளி விழா கண்டு நிற்கும் இறைமகளான அருட்சகோதரி மரிய றொசாறியோ அ.கா அவர்களை வாழ்த்துவதில் பேருவகையடைகிறேன். எல்லோரும் வாழ எந்நாளும் தன்னை செபத்தில் இணைத்துக் கொண்டவர். அன்பு, தியாகம், பக்தி என்னும் அருட்சாதனங்களூடாக நல்லதொரு கல்விச் சமூகத்தைக் கட்டியெழுப்பியவர். கல்விப் பணி, சமயப் பணி, சமூகப் பணி என்றும் சிறப்புற்றுத் தொடரவும் அவர் ஆன்மபலம் நிறைவாகப் பெற்று பல்லாண்டு வாழ எனது வாழ்த்துக்கள்.

*செல்வி பொ.காசிப்பிள்ளை, முன்னாள் பிரதி அதிபர்,*
*யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.*

### என் உள்ளத்திலிருந்து...

*ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்*
*ஏனெனில் அவர் நல்லவர்*
*என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு*
*அவர் செய்த வியத்தகு செயல்களை முன்னிட்டு*
*அவருக்கு நன்றி செலுத்துங்கள்*

இன்று எனக்கு இரட்டிப்பான மகிழ்ச்சி. 1977 ஆம் ஆண்டு அச்சுவேலி கார்மேல் அன்பக தலைமைத்துவ பயிற்சி நிலையத்தை பொறுப்பேற்றபோது மன்னார், அடம்பனிலிருந்து 40 இளம் யுவதிகள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டனர். அந்த இளம் யுவதிகளில் மரிய றொசாறியோவும் ஒருவர். அன்று அவரை மாணவியாக சந்தித்தேன். இன்று அருட் செல்வியான மரிய றொசாறியோவுடன் இணைந்து வெள்ளிவிழா கொண்டாடுவதில் மனம் மகிழ்கின்றது. அவர் பணி பாரில் சிறக்க இறைவனை வேண்டி நிற்பதோடு விழாவில் இணைவதில் பூரிப்படைகிறேன்.

*அருட்சகோதரி எம்.தெரசில்டா அ.கா*
*லங்கா மாதா மடத்து தலைவி. அச்சுவேலி.*

### நும் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்

*இறைமகளாய் அதிபராய் அணிகள் சூட்டி*
*இன்பமாய் பத்து வகை பெருமை சூட்டி*
*வழமை மிகு சேவைகளை கருத்தில் கொண்டு*
*வரலாற்று முதலிடத்தில் தன்னை வைத்து*
*மிளிர்கின்ற மேதினியில் மேன்மையுற்று*
*மிதந்து வரும் மன்னார் பதி தென்றல் காற்று*
*ஞான ஒளி உமிழ்ந்து நிதம் பிறர் நலம் காக்கும் தாயே*
*நும் பணி சிறக்க வாழ்த்துகின்றேன் இந்நாளில்*

*திருமதி ந.ஞானலிங்கம்*
*பிரதி அதிபர்.*
*யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.*

### வெள்ளிவிழா நாயகியை வாழ்த்துவோம் வாரீர்

*எத்தனையோ பாதைகள் தெரிகின்றன அதில்*
*என் பாதை யாது?*
*எத்தனையோ படகுகள் காத்திருக்கின்றன*
*யார் என் படகோட்டி?*

பாதைகள் பல விதம் வாழ்வும் பலவிதம் அதில் ஒவ்வொருவர் வாழ்வும் ஒரு விதம். பயணங்கள் தொடங்க தெள்ளிய அறிவும் தேர்ந்த குறிக்கோளும் வேண்டும். இத்தகைய வியத்தகு செயல்கள் கொண்டவர் எமது அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ அ.கா. 25 ஆண்டுகளை நிறைவு செய்து கார்மேல் தோட்டத்து நறுமணம் வீசும் மலராக விளங்கும் அவரை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறோம்.

*யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி*
*பழைய மாணவர் சங்கம்.*

### சாதனை வாழ்வில்....

"அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார்" [லூக் 1:50]

இறைவனின் படைப்பின் பயனாய் தன் வாழ்வின் சுகபோகங்களை இறைவனுக்கு அர்ப்பணித்து துறவறம் என்னும் சாதனையை நிலை நாட்டியவர் எமது அருட்சகோதரி. என்றுமே உயர்ந்த சிந்தனையும் கடமையில் நேர்மையும் தன்னைப் போல் பிறரையும் நேசிக்கும் பான்மையும் கொண்டவராய் தம் இறைபணியில் வெள்ளி விழாவை எய்தும் அருட்சகோதரி மரிய றொசாறியோ அ.கா அவர்களை இத்தினத்தில் வாழ்த்துவதுடன் இவரது பணிவாழ்வு சிறந்து மேலும் புதுமை பெற இறையாசியை வேண்டுகின்றேன்.

*குருஸ் யேசுதாஸ் அன்ரனி பாலா,*
*பங்குத் தந்தை, அச்சுவேலி.*

### கார்மேல் தோட்டத்து நறுமலர்

அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் அருட்சகோதரியாகி இறைபணியில் வெள்ளி விழாவை நிறைவு செய்து மகிழ்வடையும் எமது அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ அ.கா அவர்களின் பணிவாழ்வு போற்றுதற்குரியது. இளமையில் துறவறம் கண்டு மென்மையான உள்ளம் படைத்து மாணவர் நலன் பேணி பாடசாலை உயர்வையே நோக்காகக் கொண்டவர். தன் பணி சிறக்க வெண்துகில் பூண்டு இன்புறும் வாழ்வில் சாதனை வழிகாட்டியாய் திகழ்பவர். திரேசியன் ஓங்கிடவும் மறை பணி செழித்திடவும் கல்லூரிதனை கண்ணை இமை காப்பது போல் காத்து வரும் எம் அதிபர் அவர்களின் பரித்தியாக வாழ்க்கை நமக்கெல்லாம் முன்மாதிரியாக அமைந்து மகிழ்வைத்தருகிறது.

*யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி,*
*பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.*

### வெள்ளிவிழா நாயகி எம் அதிபருக்காய்...

*வானளந்த தமிழ்த்தாயின் மெல்லிசை கேட்டோம்*
*தேனளந்த மலர்களை மாலையாகக் கேட்டோம்*
*காய்கின்ற ஆதவனை கதிர் தணியக் கேட்டோம்*
*காலமெலாம் வற்றாத நீரோடை கேட்டோம்*
*கோடையிலும் வற்றாத குளிரைக் கேட்டோம்*
*மேடையிலே தோற்காத வீரம் கேட்டோம்*
*எப்போதும் அன்பு கொண்ட இதயம் கேட்டோம்*
*இப்போது போலிருக்கும் இளமை கேட்டோம்*
*இன்று மட்டும் இவை எலாம் மிளிர வேண்டும்*
*வெள்ளி விழா நாயகி எம் அதிபருக்காய்*

*யா/ அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி,*
*ஆசிரியர் நலன்புரி கழகம்.*

# வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் அனல்மின் திட்டத்தை மீளாய்வு செய்யக்கோருகிறார் நகரசபை உறுப்பினர்

திருகோணமலை,ஏப்.29

திருகோணமலை மாவட்டம் சம்பூரில் அமைக்கப்படவிருக்கும் அனல் மின்சார உற்பத்தி நிலையத்திலிருந்து வெளியேறும் வெப்பக் கழிவுகளால் கடல்வாழ் உயிரினங்கள், மீனிணங்களின் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும் திறன் பாதிக்கப்படும் அபாயம் காணப்படுகிறது.

அதனால் திருகோணமலை மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலை நம்பியிருக்கும் தமிழ், சிங்கள, முஸ்லிம்களின் எதிர்கால வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி அவர்களின் பொருளாதாரம் பாதிக்கப்படும்.

எனவே சம்பூர் அனல் மின்சார நிலையம் குறித்து அரசு தூரநோக்கோடு செயற்படவேண்டும் என்ற தீர்மானத்தை மீளாய்வு செய்ய வேண்டும் என திருகோணமலை நகரசபையின் உறுப்பினர் சி.நந்தகுமார் அறிக்கை ஒன்றில் வலியுறுத்தியுள்ளார்.

அந்த அறிக்கையில் நந்தகுமார் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

திருகோணமலை மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற போர்வையில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் பறிக்கப்பட்டு வருகின்றன.

சம்பூரில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த ஆயிரத்து 486 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 16 ஆயிரம் பொது மக்கள் வெளியேற்றப்பட்டு பல வருடங்களாகின்றன. மூதூர் கிழக்கில் விவசாயக் காணிகளும் குளங்களும் தடை செய்யப்பட்ட பிரதேசங்களுக்குள் அகப்பட்டமையால் அந்த மக்களின் ஜீவனோபாயம் தடைப்பட்டுள்ளது.

இந்த மண்ணில் ஆண்டாண்டு காலமாக சகல வளங்களுடன் வாழ்ந்து வந்த மக்கள் இன்று நாடோடிகளாகத் திரிகின்றனர்.

அந்த மக்கள் மீண்டும் தங்கள் சொந்தக் கிராமங்களில் குடியேறுவதற்கும் அவர்களின் வாழ்வாதாரங்களை வழங்குவதற்கும், அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வந்த வளமிக்க பூமியில் அனல் மின்சார நிலையம் அமைப்பது தொடர்பான தீர்மானத்தை அரசு மீளாய்வு செய்ய வேண்டும் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# குன்றுகள் மேலுள்ள கற்கள் சரிந்து விழும் அபாயம்

நுவரெலியா,ஏப்.29

மலையகப் பகுதியில் மண் திட்டுகள் மற்றும் குன்றுகளில் உள்ள கற்கள் சரிந்து விழும் நிலை தோன்றியுள்ளது என தேசிய கட்டட நிர்மாணக் குழுவின் நிறுவனம் எதிர்வு கூறியுள்ளது.

தற்போது மாலை நேரங்களில் பெய்யும் மழை காரணமாக இவ்வாறான நிலை தோன்றியுள்ளது.

நுவரெலியா, மாத்தளை, கண்டி, பதுளை, கேகாலை ஆகிய பகுதிகளிலும், மலைகள் நிறைந்துள்ள பகுதிகளிலும் மக்களை மிகவும் அவதானமாக இருக்கு மாறும், எந்த நேரத்திலும் மலைகளில் உள்ள திட்டுகள், கற்கள் சரிந்து விழலாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

எனவே, இவ்வாறான பகுதியில் வாழ்ந்து வரும் மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு அனர்த்த நிவாரண சபையினர் கேட்டுக் கொள்கின்றனர்.

நாட்டில் தற்போது நிலவிவரும் மாலை நேர மழை காரணமாக இவ்வாறான இயற்கை அழிவுகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

எனவே, அவற்றைக் கண்டறிந்து அந்த இடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அனர்த்த நிவாரணக் குழுவினர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# கூரைத்தகடுகள் வழங்கத் திட்டம்

குறைந்த வருமானம் பெறும் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த குடும்பங்களுக்கு கூரைத் தகடு வழங்க மத்திய மாகாண குடியிருப்பு அதிகாரசபை அதிகாரிகள் முன்வந்துள்ளனர். குறைந்த வருமானம் பெறும் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த 600 குடும்பங்களுக்கு முதற் கட்டமாகக் கூரைத் தகடுகள் வழங்குவதற்கு சுமார் ஒரு கோடியே இருபது லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என மத்திய மாகாண வீதி அபிவிருத்தி மற்றும் மின்சக்தி, குடியிருப்பு கட்டுமான அமைச்சர் பந்துல யாலேகம தெரிவித்துள்ளார்.

இந்த முறை குறைந்த வருமானமுள்ள குடியிருப்பாளர்களுக்கு கூரைத் தகடுகளுக்குப் பதிலாக 'எஸ்பெஸ்டோ' சீட் வழங்கமுடிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்துக்கு 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபா வரை பெறுமதியான சீட் வழங்கப்படவுள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ளி)

## சுத்தமாக வாழ....



சிரமதானம்:- வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிண்ணியா பிரதேச செயலகப்பிரிவுக் குட்பட்ட மக்களுக்கு பணத்துக்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்ட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் கிண்ணியாவில் உள்ள வீதிகள் மற்றும் நீர்ப்பாசன கால் வாய்கள் பயனாளிகளால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படுகின்றது. (ச)

# ஜேர்மன் தொண்டர் குழு கல்முனை வருகை

கடந்த கால இயற்கை அனர்த்தங்கள் காரணமாகப் பாதிக்கப்பட்டு வேறு இடங்களில் மன அழுத்தங்களுக்குள்ளாகி பாதுகாவலர்களின் பராமரிப்பன் கீழ் உள்ள பிள்ளைகளுக்கு ஜேர்மன் நாட்டின் தொண்டர் குழு ஒன்று உதவி வருகிறது.

தாம் உதவி புரியும் பிள்ளைகளின் நிலைமையைப் பார்வையிட ஜேர்மனில் இருந்து வந்துள்ள கேய்கி , லீனா ஆகியோர் கல்முனை இறவெளிக்கண்ட வீட்டுத்திட்டத்தைப் பார்வையிட்டுள்ளனர்.

சுனாமியில் தாய் மற்றும் தந்தையை இழந்த 270 பிள்ளைகளை ஷடோ அமைப்பினர் இனம் கண்டு அவர்களுக்கு இந்தத்தொண்டர் அமைப்பின் மூலம் கடந்த ஏழு ஆண்டுகளாக உதவி புரிந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தமிழர்களின் உரிமைகள் தோற்கடிக்கப்படமாட்டா கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஏப்.29

தமிழ் மக்களின் உரிமைகள் தோற்கடிக்கப்படவில்லை என கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்துள்ளார்.

கிரான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கு 5,000 ரூபா கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

கிழக்கு மாகாணம் அபிவிருத்தியைக் கண்டு வருகின்றது. மாகாணத்தை அபிவிருத்தி செய்வதிலும் இந்தப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதிலும் ஜனாதிபதி அதிக அக்கறை செலுத்தி வருகின்றார்.-

யுத்தகாலத்தில் இந்தப்பகுதி மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்தது. 30 வருடகால யுத்தத்திலிருந்து இந்தப்பகுதியை மீட்டெடுத்து அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் ஜனாதிபதிக்கு நாம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

தமிழ்ச் சமூகம், அரசின் எதிர்ச் சமூகம் என்ற நிலைமை இன்று இல்லை. தமிழ் மக்களின் உரிமைகள் ஒருபோதும் மழுங்கடிக்கப்படமாட்டாது. அவர்களது அபிலாஷைகள் குழிதோண்டி புதைக்கப்படமாட்டாது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமிழ் மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதில் அதிக அக்கறை காட்டுமாறு எமக்குப் பணித்துள்ளார் -என்றார். (ச)


# மின்னல் தாக்கியதில் உடைமைகள் சேதம்

மட்டக்களப்பு,ஏப்.29

மட்டக்களப்பு, சந்திவெளியிலுள்ள வீட்டின் மீது மின்னல் தாக்கியதில் வீட்டின் ஒருபகுதியும் பொருள்களும் சேதமடைந்துள்ளன.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலையிலிருந்து இந்தப்பகுதியில் இடி, மின்னலுடன் கூடிய கடும் மழை பெய்தது. இந்த நிலையிலேயே இந்த வீட்டின் மீது இடி வீழ்ந்து வீட்டின் ஒருபகுதியும் உடைமைகளும் சேதமடைந்துள்ளன. (ச)

# 10 அடி நீளமான முதலை அகப்பட்டது



மட்டக்களப்பு,ஏப்.29

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட களுதாவளை கிராமத்துக்குள் புகுந்த முதலை ஒன்றைப் பொலிஸார் பிடித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு கல்முனைப் பிரதான வீதிக்கு அண்மையில் உள்ள வீட்டிற்குள் குறித்த முதலை பதுங்கியிருந்தபோது அதனைக் கண்ணுற்ற கிராமத்தவர்கள் களுவாஞ்சிகுடி பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளனர். இந்த முதலையினை பிடித்துக்கட்டி வைத்து வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவித்துள்ளனர்.

வனஜீவராசிகள் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் இந்த முதலையைக் கொண்டு சென்று அம்பாறை தேசிய பூங்காவில் விட்டதாகத் திணைக்களத்தின் அதிகாரி ரி.கேதிஸ் தெரிவித்துள்ளார். (ச-21)

# மாத்தளையில் தப்பியோடிய சிறுவன் கைது

மாத்தளை,ஏப்.29

சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து தப்பிச்சென்ற சிறுவனை வேரகல சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்குமாறு மாத்தளை மாவட்ட மேலதிக நீதிபதி சத்துரிக்கா டி சில்வா உத்தரவிட்டுள்ளார்.

உக்குவெல பிரதேசத்திலுள்ள வீடொன்றில் இருந்து 4,000 ரூபா பணம் களவாடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் பொலிஸார் குறித்த சிறுவனைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

இவ்வாறு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு அழைத்துச் செல்லும்போது இந்தச் சிறுவன் சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து தப்பிச் சென்றிருந்தார்.

இந்தநிலையில் சிறுவன் மீண்டும் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

உக்குவெல பிரதேசத்தில் இடம்பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் இந்த சிறுவனுக்குத் தொடர்புள்ளது எனப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

# ஓய்வூதியக் கொடுப்பனவை விரைவாக்க பிரதேச செயலகங்களில் தனிப்பிரிவு

கொழும்பு, ஏப்.29

ஓய்வூதியத்தை வழங்குவதற்காக சகல பிரதேச செயலகங்களிலும் தனியான பிரிவொன்றை அமைக்குமாறு ஓய்வூதியச் சம்பளப் பணிப்பாளர் நாயகம் கே.ஏ.திலகரத்ன மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களுக்குச் சுற்று நிருபம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

சில பிரதேச செயலகங்களில் வெவ்வேறு இடங்களில் ஓய்வூதியச் சம்பளக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவது அரச கடமைகளை நிறைவேற்றுவதில் தாமத்தை ஏற்படுத்துகிறது. அதன் காரணமாக ஓய்வூதியம் பெறும் மூத்த பிரஜைகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்று ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளமையே இந்தச் சுற்று நிருபம் அனுப்பப்படுவதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.

எனவே, அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் தனியான ஓய்வூதியச் சம்பளப் பிரிவொன்று நிறுவப்பட வேண்டும் எனவும் அது சம்பந்தமாகத் தேவைப்படும் பௌதீக வசதிகள் போன்றே தேவையான அலுவலக ஊழியர்களை அமர்த்துவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பிரதேச செயலகங்களில் தீர்த்து வைக்க இயலாத சிக்கல்களை ஓய்வூதியச்சம்பளத் திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறும் அந்த சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஓய்வூதியம் பெறும் நாட்டின் மூத்த பிரஜைகளுக்கு விசேட வசதிகள் கிடைக்கும் வகையில் இந்தச் சேவைகளைப் பெறுவோரை முன்னிலைப்படுத்தி சேவைகளை வழங்குவதற்கு வங்கிகள் மற்றும் தபாலகங்களுக்கு இடையில் சிறப்பான தொடர்பாடலை மேற்கொள்ளுமாறும் மேற்படி சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-22)

# இலங்கையின் இறப்பு விகிதம் நான்கு ஆண்டுகளில் அதிகரிப்பு

## திணைக்கள புள்ளி விவரம் சுட்டிக்காட்டு

கொழும்பு,ஏப்.29

இலங்கையில் கடந்த நான்காண்டில் பிறப்பு எண்ணிக்கை குறைவடைந்து இறப்பு எண்ணிக்கை அதிகரித்துச் சென்றுள்ளது எனப் பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் புள்ளி விவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

மேற்படி திணைக்களத்தின் புள்ளி விவரங்களுக்கு அமைய 2007 ஆம் ஆண்டின் குழந்தைப் பிறப்புக்களின் எண்ணிக்கை 3 லட்சத்து 86 ஆயிரத்து 573 ஆகும். 2008 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 3 லட்சத்து 79 ஆயிரத்து 912 வரையில் குறைவடைந்துள்ளது.

2009 ஆம் ஆண்டில் 3 லட்சத்து 76 ஆயிரத்து 843 ஆக நிலவிய பிறப்பு எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டில் 3 லட்சத்து 64 ஆயிரத்து 585 வரையில் குறைவடைந்துள்ளது.

இந்த பிறப்புக்களில் 7 லட்சத்து 69 ஆயிரத்து 830 ஆண் குழந்தைகளின் பிறப்புக்கள் என்பதோடு 7 லட்சத்து 38 ஆயிரத்து 83 பெண் குழந்தைகளின் பிறப்புக்களாகும்.

2007 ஆம் ஆண்டின் இறப்பு எண்ணிக்கை ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 998 ஆக இருந்துள்ளதோடு, 2008 ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 279 ஆகும். அதேவேளை 2009 ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 20 ஆயிரத்து 85 ஆக நிலவிய இறப்பு எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 603 ஆக அதிகரித்துள்ளது. (எ-22)

## எதிர்ப்பு....



நேற்றுமுன்தினம் புதன்கிழமை நடைபெற்ற மட்டக்களப்பு மாநகரசபையின் விசேட கூட்டத்தில் சபை உறுப்பினர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனின் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக கண்டனம் தெரிவித்துக் கோஷம் எழுப்பியுள்ளனர். (ச)

# புத்தளம் நகரில் அரச காணியை அபிவிருத்திக்கு வழங்க இணக்கம்

புத்தளம், எப்.29

புத்தளம் நகர மத்தியிலுள்ள அரசுக்குச் சொந்தமான காணியை அபிவிருத்திப் பணிகளுக்கு வழங்குவதற்கு மாவட்டச் செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளார். இந்தக் காணியில் நவீன மரக்கறிச் சந்தை, மீன் சந்தை, கடைத் தொகுதிகள் மற்றும் ஓட்டோ தரிப்பிடம் போன்றவை அமைக்கப்படும் என புத்தளம் நகரபிதா கே.ஏ. பாயிஸ் தெரிவித்துள்ளார். அண்மையில் நடைபெற்ற நகரசபையின் முதலாவது அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புத்தளம் நகரிலிருந்து சுமார் 30 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கலாஓயா ஆற்றிலிருந்து கால்வாய் மூலம் நீர் கொண்டு வரப்பட்டு 24 மணிநேரமும் புத்தளம் நகருக்குச் சுத்தமான குடிதண்ணீர் வழங்கப்படும். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டத்துக்குச் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ள சுமார் 1,800 மில்லியன் ரூபா நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

நகர எல்லைக்குள் உள்ள அனைத்துக் குளங்களும் புனரமைக்கப்படும். அனைத்து வீதிகளின் பெயர்களும் பலகைகள் மூலம் அறியத்தரப்படும். நகரின் எல்லையோடு உள்ள முள்ளிபுரம் மீனவக் கிராமத்தை புத்தளம் நகரசபையோடு இணைத்துக் கொள்ள வடமேல் மாகாண முதலமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.- என்றார். (ச)

# தனியார் பஸ் ஊழியர்களின் ஒழுக்கத்தை அறிய அ.அட்டை

கொழும்பு, ஏப்.29

தனியார் பஸ் ஊழியர்களின் ஒழுக்கத்தை அதிகரிக்கும் முகமாக அவர்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது. அத்துடன் இது தொடர்பில் புதிய சட்டமும் அமுல்படுத்தப்படவுள்ளது எனத் தனியார் போக்குவரத்து அமைச்சர் சீ.பி. ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் ஒழுக்கமின்மையின் விளைவாகவே அதிக விபத்துகள் இடம்பெறுகின்றன. பொது மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் வகையில் வேலை நிறுத்தங்களிலும் ஈடுபடுகின்றனர். சாரதிகளின் நடத்தையைக் கட்டுப்படுத்த இலகுவழிகள் எதுவுமில்லை. இதனாலேயே சில புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தவுள்ளோம். எனினும் நிதிப்பற்றாக்குறை காரணமாக சட்டத் திருத்தங்களை உடனடியாக மேற்கொள்ள முடியாதுள்ளது.

புதிய ஆள் அடையாளம் காணும் முறைமையின் மூலம் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களின் விவரங்களைத் தனியார் போக்குவரத்து அமைச்சும், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவும் பேணவுள்ளன - என்றார். (ச)

# புத்தளம் முஸ்லிம்களுக்கு நிவாரணம் இல்லை; மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளருக்கு மகஜர்

வடமாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நிலையில் புத்தளத்தில் தங்கியுள்ள முஸ்லிம்களுக்கு உலர் உணவு முத்திரைக்கான பொருள்கள் வழங்கப்படாதது குறித்து மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளருக்கு யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் மூவர் மகஜர் மூலம் அறிவித்துள்ளனர். என்.எம்.முஸ்தபா, பீ.அஸ்கர் ருமி, ஏ.அஸ்பர் ஆகிய மாநகரசபை உறுப்பினர்களே உலர் உணவு வழங்கப்படாமை குறித்து மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளருக்கு மகஜர் அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த மகஜரின் பிரதிகள் அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, குணரத்ன வீரக்கோன், ரிஷாட் பதியுதீன், வடமாகாண வடமேல் மாகாண ஆளுநர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கடந்த 2010ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரையான காலப் பகுதியில் உலர் உணவு முத்திரைக்கான பொருள்கள் வழங்கப்பட்டபோதும், மூன்று மாதங்களுக்கான பொருள்கள் மாத்திரமே பலநோக்குக் கூட்டுறவு சங்கம் மூலம் விநியோகிக்கப்பட்டுள்ளன. மிகுதி மூன்று மாதங்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் இன்று வரை வழங்கப்படவில்லை.

புத்தளத்தில் இயங்கிவரும் வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த முஸ்லிம்களுக்கான செயலகமும் நாளை சனிக்கிழமையுடன் மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த மக்களுக்கு வழங்கப்படாதுள்ள உலர் உணவுப் பொருள்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்- என்று இந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கொழும்பு இதய சத்திர சிகிச்சைப் பிரிவுகளில் ஒன்று மூடப்பட்டது

கொழும்பு,ஏப்.29

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இதய நோய்ப் பிரிவின் ஒரு தொகுதி மூடப்பட்டுள்ளதன் காரணமாகத் தற்போது இதய சத்திர சிகிச்சைகள் பிரிவு முழுமையாக இயங்க முடியாதுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தேசிய வைத்தியசாலையில் இதய சத்திர சிகிச்சைப் பிரிவின் இரு சத்திரசிகிச்சைக் கூடங்கள் மற்றும் அவசர சிகிச்சைத் தொகுதியொன்றும் கடந்த 12 ஆம் திகதியிலிருந்து மூடிவிடப்பட்டுள்ளன.

இதன் காரணமாக இதய சத்திர சிகிச்சைகளுக்கான பெயர்ப்பட்டியலுக்கு அமைய சத்திர சிகிச்சைகளுக்காகக் காத்திருக்கும் நோயாளர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இதய சத்திர சிகிச்சைத் தொகுதி அமைந்துள்ள நான்கு மாடிகளைக் கொண்டுள்ள இந்தக் கட்டடம் சிதைவடைந்துள்ளமையாலேயே மேற்படி சத்திர சிகிச்சைக் கூடங்களை மூடி விட வேண்டி நேர்ந்துள்ளது எனவும் அந்தக் கட்டடத்தில் அமைந்துள்ள ஏனைய விடுதிகளிலுள்ள நோயாளர்களும் கூடப் பெரும் ஆபத்து நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் மருத்துவர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2001 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்ட இந்தக் கட்டடம் சில வருடங்களுள் இவ்விதம் சிதைந்து போயுள்ளது. மேற்படி கட்டடத்தின் மேற்கூரையும் பழுதடைந்துள்ளது. கொங்கிறீட் இடப்பட்டுள்ள ஒவ்வொரு மாடி தளங்களிலும் கூட நீர்க்கசிவு ஏற்பட்டுள்ளது. அத்தோடு ஒவ்வொரு தளத்திலிலுள்ள மலசல கூடத் தொகுதிகளும் சிதைவடைந்து அசுத்த நீர் கசிந்து ஓடுவதாகவும் மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கட்டடத்தில் பொருத்தப்பட்டுள்ள குளிரூட்டும் சாதனங்கள் உரியவிதத்தில் பராமரிக்கப்படாததால் அவற்றின் செயற்பாடு சீரான முறையில் செயற்படாமையைச் சுட்டிக்காட்டும் மருத்துவர்கள், இந்தக் காரணிகளால் நோயாளர்களின் நிலைப்பாடும் கவலைக்குரியதே என மேலும் சுட்டிக்காட்டுகின்றனர். (எ-22)



யாழ். புதிய உயர் கல்லூரியில் வெளிவாரியாகப் பட்டப்படிப்பை மேற்கொள்ளும், வன்னியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் 150 பேருக்கு யு.என். எயிட் நிறுவனத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. கல்லூரி நிர்வாக இயக்குநர் திருமதி அருள்நங்கை சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் எல்.ஓ.எல்.சி.யின் வலயத் தலைவர் ரி.குமாரதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கான உதவிப் பொருள்களை வழங்குகிறார். (319)

# கிராம அபிவிருத்திக்கு மட்டும் முதலிடம் வழங்காது விளையாட்டு முன்னேற்றத்திலும் அக்கறை காட்டவும்

இங்கு இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வுகளில் கலந்து கொண்டு திறமையை வெளிப்படுத்திக் களைத்த நிலையில் உள்ள வீரர்களை நான் சோதிக்கவில்லை. கஷ்ரப் பிரதேசமான இந்தப் பிரதேசத்தில் இந்த விளையாட்டுப் போட்டியை ஒழுங்கு செய்த பிரதேச செயலகத்தை நான் பாராட்டுகின்றேன். கிராம அபிவிருத்திக்குப் பொறுப்பாக இருப்பது மட்டுமல்ல விளையாட்டுக்கும் முதலிடம் கொடுத்து அந்த நிகழ்வையும் இங்கு நடத்தியமை மெச்சத்தக்கது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வாரம் வரணி மகா வித்தியாலயத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் இடம்பெற்ற தென்மராட்சிப் பிரதேச செயலக விளையாட்டுக் கழகங்களின் மெய்வன்மைப்போட்டியின்போது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய போது அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:

தலைமைத்துவத்தை எதிர்பார்க்காது விட்டுக் கொடுப்பவர்களால்தான் எதையும் சாதிக்க முடியும். முயற்சி உடையவர்களால்தான் எதுவும் சாத்தியமாகும். திறமைக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். கிராமப் புறங்களில் இந்த வளர்ச்சி பாராட்டத்தக்கது.

குடாநாட்டில் பெரிய அபிவிருத்திக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. கடந்தகால இன்னல்களில் இருந்து மக்கள் தற்சமயம் மீண்டெழுந்துள்ளனர். விளையாட்டு வீரர்கள் பெற்றோர்களுக்கும் நாட்டுக்கும் பிரதேசத்துக்கும் நற்பிரஜைகளாகத் திகழ வேண்டும். வென்றவர்கள் தோற்றவர்கள் எல்லோரும் வெற்றியாளர்கள். எல்லோரும் ஒரே மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும்.- என்றார். (ஐ-122)

# தேசியக் கவிஞர்களுடன் இணைந்து யாழ்.கவிஞர்களும் செயற்பட வேண்டும்

யாழ்ப்பாணம், ஏப்.29

ஒன்றிணைக்கப்பட்ட நாட்டின் ஒற்றுமை கவிஞர்களால் உருவாக அகில இலங்கைக் கவிஞர் சம்மேளனம் பாடுபடுகின்றது.

அதில் இங்குள்ள கவிஞர்களும் இணைந்து செயற்பட முன்வர வேண்டும் என இலங்கை கவிஞர் சம்மேளனத்தின் பிரதித் தலைவர் நில்மடுத விமல சூரிய தேரர் கூறினார்.

அகில இலங்கை கவிஞர் சம்மேளனத்தின் வடக்குக்கான உறவுப் பயணம் நிகழ்வு கடந்த சனிக்கிழமை யாழ்.செயலகக் கேட்போர் கூடத்தில் யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்றது.

அதில் உரையாற்றிய நில்மடுத விமல சூரிய தேரர் இப்படிக் கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:

கவிஞர்களால் உலகை மாற்றவும் பிரச்சினைகளைத் தீர்க்கவும் முடியும். அதற்குக் கவிஞர்கள் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். எமது ஜனாதிபதியின் சிந்தனைக்கமைய எல்லா மக்களும் ஒன்றுபட்டு ஐக்கியத்துடன் சகோதரர்களாக வாழ வேண்டும்.

ஒற்றுமையை உருவாக்க யாழ்ப்பாணத்துக் கவிஞர்களுடன் இணைந்து புதிய கலாசார வளர்ச்சியைத் தோற்றுவிக்கக் கூடியதாக உங்களுடன் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ள மிகவும் மகிழ்ச்சியுடன் இங்கு வந்துள்ளோம்.- என்றார்.

யாழ்.அரச அதிபர் தனது தலைமை உரையில்:

எமது கலாசாரத்தின் முக்கிய அம்சமாகக் கவிதை இலக்கியங்கள் உள்ளன. நாங்கள் பத்திரிகை ஊடகங்கள், இலக்கியங்களைப் படித்திருந்தாலும் இன்று நேரடியாகக் கலந்து கொண்டு எமது நாட்டின் கவிதை இலக்கியத்துறைகளைப் புரிந்து கொள்ள உங்களது வருகையும் சேவையும் முக்கியமாகிறது.- என்றார். (ஐ-7)

# மரபுரிமைச் சொத்துக்கள் அழியாமல் பாதுகாக்க வேண்டியது சகலரதும் பொறுப்பு

யாழ்ப்பாணம், ஏப்.29

உலகம் முழுவதும் மரபுரிமைச் சொத்துக்களைப் பாதுகாப்பது என்பது பிரச்சினையாகவே இருக்கிறது. அபிவிருத்தி என்ற திட்டத்தில் மரபுரிமைகளை துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன.

ஒரு நாட்டின் அடையாளங்கள் மொழியை அடிப்படையாகக் கொண்டவை என்பது பொய்யாகிவிட்டது. அந்த நாட்டின் தொன்மைகளையும் பண்பாட்டையுமே அடிப்படையாகக் கொண்டே விளங்குகின்றது.எனவே மரபுரிமைச் சொத்துக்களைப் பாதுகாக்க வேண்டும்.

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பாக்கியநாதன் அகிலன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆறுதல் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'இலங்கையில் மரபுரிமைகளைப் பாதுகாப்போம்' என்ற தலைப்பில் யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே இவ்வாறு அவர் தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றும்போது தெரிவித்தவை வருமாறு:

ஒவ்வொரு நாடும் மரபுரிமைச் சட்டங்களையும் உரிமைகளையும் கொண்டுள்ளன. அந்தச் சட்டங்களை நிராகரிப்பதற்கு யாருக்கும் அனுமதி இல்லை.

சுற்றுலாத் துறைகள் மூலம் அதிக வருமானம் ஈட்டக் கூடியதாகத் தொன்மையான பொருள்களைப் பார்வையிட வருபவர்களின் எண்ணிக்கைகளும் அதிகமாகவுள்ளன.

ஒவ்வொரு மக்களும் வெவ்வேறு பண்பாட்டு வழியாக வந்தவர்கள். அந்தப் பண்பாடும் மரபுரிமைச் சொத்துக்களாகும்.

நூறு வருடத்துக்கு மேற்பட்ட கட்டடங்களோ, தாவரங்களோ, பண்பாடுகளோ அல்லது இயற்கைகளோ மரபுரிமைகளாகப் பாதுகாக்கப்பட வேண்டியவை.

போரின் நெருக்கடியின் பின்னரும் இலங்கையில் ஒருசில தொல்பொருள்களே எஞ்சியுள்ளன. அவை எமது சமூகத்தின் அடையாளமாகப் பேண வேண்டியன.

எமது சமூகத்துக்காகவும் எங்களுக்காகவும் காணவும் பேணவும் இருப்பது ஒருசில சான்றுகள் மட்டுமே. அவற்றை வீதி அகலிப்பு, புதிய கட்டடங்கள் என்ற அபிவிருத்தியின்போது அழிவது வேதனை தரக்கூடியது.

தொன்மைகளைப் பாதுகாப்பது எதிர்காலச் சந்ததியினர்களுக்காக எமது கடமையாகும். வரலாற்றுத் தொடர்புகளும் பண்பாடுகளும் அரைவாசி அழிந்துவிட்டன. ஏனையவற்றைக் கற்பித்தல் மூலமும் கண் காட்சிகள் மூலமாகவும் கருத்துக்கள் மூலமாகவும் பாதுகாக்க வேண்டும்.- என்றார். (ஐ-311)

# சேவை மேம்பாட்டு நிபுணர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஏப்.29

வடக்கு- கிழக்கு உள்ளூர் சேவை மேம்பாட்டு திட்ட வடக்கு மாகாண பிரிவுக்கு நிபுணர்கள் ஆள்சேர்ப்பு செய்யப்படவுள்ளனர்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

தகவல் தொடர்பாடல் நிபுணர், சமூகப் பாதுகாப்பு நிபுணர், நிறுவன அபிவிருத்தி நிபுணர் ஆகிய பதவிகளுக்கே ஆள் சேர்ப்புச் செய்யப்படவுள்ளன.

இதேவேளை 'நெல்சிப்' திட்டப் பிரிவுக்குத் திட்டப் பணிப்பாளராக பி.ஜோன்சனும், பிரதித் திட்டப் பணிப்பாளராக வி.சாம்பசிவமும், திட்டக் கணக்காளராக எஸ்.குகபாலனும், பெறுகை நிபுணராக வி.என். ராஜவரதனும், நிகழ்ச்சித் திட்ட அதிகாரிகளாக கே.கஜீதன், செல்வி கே.சுஜித்தா, திருமதி வி.ராகுலன் ஆகியோர் நியமனம் பெற்றுள்ளனர். (ஐ-302)

# கொட்டடி மாணவர்கள் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.29

கொட்டடி கிராம சேவையாளர் பிரிவில் (ஜே/83) உள்ள தரம் 5, ஜி.சீ.ஈ. உயர்தரம், ஜி.சீ.ஈ. சாதாரணம் ஆகிய பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களின் விவரங்களைக் கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கம் கேட்டுள்ளது.

சங்கத்தின் விழாவில் மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளமையால் விவரங்களை இன்று எழுத்து மூலம் சமர்ப்பிக்குமாறு அந்தச் சங்கத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர். (ஐ)

# ஆக்கங்களைக் கோருகிறது மாகாணசபை

பருத்தித்துறை,ஏப்.29

'கவின் தமிழ்' சஞ்சிகைக்கு ஆசிரியர்களிடமிருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. மாகாண மட்டத் தமிழ் மொழித் தினத்தையொட்டி இந்தச் சஞ்சிகை வெளியிடப்படவுள்ளது.

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் வருடா வருடம் தமிழ் மொழித் தினத்தையொட்டி இந்தச் சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களின் கவிதை, கட்டுரைகளும் மாகாண மட்டத் தமிழ்த் தினப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவர்களின் கட்டுரை, கடிதம், சிறுகதை, கவிதை ஆகியனவும் 'கவின்தமிழ்' சஞ்சிகையில் வெளியாகவுள்ளன. (ஐ-190)

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
ஒன்றுக்கு மேற்பட்ட வகையில் உதவிகளை பெறலாம். சில வேலைகளை அலைச்சல் இல்லாமல் இருந்த இடத்தில் இருந்தே மற்றவர்கள் மூலம் முடித்துக் கொள்வீர்கள். பிள்ளைகள் வழியில் பெருமைப்படும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். உங்களுக்குப் பிடித்தமான பொருள்களை மற்றவர்கள் கொடுக்கலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம்.

**இடபம்:**
மலை போல் வந்த பிரச்சினை ஒன்று பனிபோல விலகி விடும். குடும்பத்தில் சில நல்ல நிகழ்ச்சிகள் நடக்கலாம். உங்கள் நலனில் அக்கறை கொண்ட ஒருவரைச் சந்திப்பீர்கள். ஒன்றுக்கு மேற்பட்ட உறவினர்களுக்கு ஒரே நேரத்தில் உதவி செய்யலாம். மற்றவர்கள் கடினம் என நினைக்கும் வேலைகளை நீங்கள் எளிதாக செய்வீர்கள். நல்ல செய்தி கேட்கலாம்.

**மிதுனம்:**
வரவை மிஞ்சிய செலவுகளைச் சந்திக்கலாம். சகோதரர்களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீரும். முக்கியமான பணி ஒன்றில் தடை, தாமதங்களுக்கு பின்னர் வெற்றி காணலாம். மன உறுதி, தன்னம்பிக்கையுடன் செயற்பட முற்படுவீர்கள். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். கனவுத் தொல்லையுண்டு.

**கடகம்:**
விளையாட்டாகச் செய்த காரியங்கள் விபரீதமாக முடியலாம். வெளியிடத்துக்குப் புறப்பட்டுச் செல்லும் போது, யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். வெளியூரில் இருக்கும் ஒருவரைத் தொடர்பு கொண்டு பேச முற்பட்டு, அது முடியாமல் போகலாம். பேராசையால் நட்டம் ஏற்படும்.

**சிங்கம்:**
புதியவர்கள் ஒத்துழைப்புக் கிடைக்கலாம். பொழுது போக்கு விடயங்களில் நாட்டம் செல்லும். மற்றவர்கள் வியக்கத்தக்க வகையிலான காரியங்களைச் செய்வீர்கள். அவசர செலவு ஒன்றைச் சமாளிக்க பொன், பொருள்களை அடகு வைக்கலாம். நீண்ட நாள்களாகப் பார்க்காத உறவினர்கள் சிலரைப் பார்க்கலாம். கூட்டு முயற்சிகளில் வெற்றியுண்டு.

**கன்னி:**
சோர்வு விலகி சுறுசுறுப்பு ஆள்கொள்ளும் நாள். குடும்பத்தினரின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். அரசியல்வாதிகள் மேலிடத்தை; விமர்சிப்பதைத் தவிர்க்க வேண்டும். சிலர் கேட்ட பண உதவிகளைச் செய்யலாம். நேற்று செய்து முடிக்காமல் இடையில் விட்ட சில வேலைகளை இன்று முடிப்பீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் கூடும்.

**துலாம்:**
வாகனங்களாலோ அல்லது பயணங்களாலோ செலவுகள் ஏற்படலாம். விலை உயர்ந்த பொருள்களைக் கவனமாக கையாள வேண்டும். வெளியூர்களில் இருந்து முக்கியமான செய்திகளை கேட்கலாம். நண்பர்களால் உங்களின் வேலைகளில் தடை ஏற்படலாம். சில பொருள்களை மறதியாக எங்காவது வைத்து விட்டு தேடலாம். வீண் பயம் உண்டாகும்.

**விருச்சிகம்:**
சிலர் கேட்ட உதவியை செய்ய மனம் இல்லாமல் கையை விரிப்பீர்கள். ஒரு வகையில் வரவுகள் வந்தாலும், மற்றொரு வகையில் செலவுகளும் நேரும். கடன் பிரச்சினை ஒன்றை தீர்க்க முற்படுவீர்கள். முகவர் தொழில் புரிவோர் சிரமங்களுக்கு ஆள்படலாம். பிள்ளைகள் வழியில் அலைச்சல்களுக்கு ஆள்படலாம். தண்டச் செலவு நேரும்.

**தனுசு:**
நினைத்த காரியங்கள் சுமுகமாக முடிவதால் சந்தோஷம் குடிகொள்ளும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி பெருமை சேர்ப்பீர்கள். சேமிப்பை அதிகரிப்பதில் நாட்டம் செல்லும். பூர்வீக சொத்துக்கள் வழியில் இருந்த பிரச்சினைகள் தீரலாம். சில விடயங்களில் தந்திரமாகச் செயற்பட்டு கூடுதல் ஆதாயம் பெறுவீர்கள். உதிரி வரவுகளைப் பெறலாம்.

**மகரம்:**
மாமன், மைத்துனர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பது தள்ளிப் போகலாம். கடந்த கால இழப்பு ஒன்றை நினைத்து வருத்தம் அடைவீர்கள். கடன் மிகுதிகளைச் செலுத்துவீர்கள். திட்டமிட்ட வேலைகளைச் செய்ய முடியாமல் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். தொழில் ரீதியான வேலைகளை தவறாகச் செய்து விட்டு மீண்டும் செய்யலாம்.

**கும்பம்:**
எதிர்பார்த்த பண உதவி கிடைக்கலாம். இரண்டு நாள்களுக்கு முன்னர் செய்யாமல் இடையில் கைவிட்ட வேலை ஒன்றை இன்று சரியாகச் செய்து முடிப்பீர்கள். பெண்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். நாளைய பயணங்களுக்காக இன்றே சில ஏற்பாடுகள் செய்யலாம். வாக்குவாதத்தைத் தவிர்த்து, கனிவான பேச்சால் காரியம் சாதிக்க வேண்டிய நாள்.


**மீனம்:**
எப்படியும் முடிந்து விடும் என நினைத்த காரியம் ஒன்று முடியாமல் போகலாம். சிலர் உங்களின் மனம் புண்படும் வகையில் பேசலாம். கடிதங்கள் மூலம் எதிர்பார்த்த தகவல்கள் வரலாம். பழைய சம்பவங்களை அசை போட்டுப் பார்ப்பீர்கள். தெய்வ வழிபாடுக்களுக்காகக் கணிசமான தொகையைச் செலவு செய்யலாம். விமர்சனங்களைச் சந்திக்கலாம்.

# பெரிய
# சம்ப

கலியாணம் என்றால் ஊரே களைகட்டி விடும். குதூகலம் விண்ணை முட்டும். அதுவும் பிரிட்டனின் அரச குடும்ப கலியாணம் என்றால் பேசவா வேண்டும்?

உலகம் முழுவதும் கொண்டாட்டமாக அமையப் போகிறது. பெரிதாகப் பேசப்பட்ட இளவரசர் சாள்ஸ் - டயானா கல்யாணத்துக்குப் பின் மீண்டும் பிரிட்டனில் அவர்களது மகன் வில்லியமின் கலியாணம் களைகட்டியுள்ளது.

பிரிட்டிஷ் மக்கள் ஒவ்வொருவரும் இதனைத் தங்கள் குடும்பக் கல்யாணமாக கொண்டாடப் போகிறார்கள். என்றாலும் மக்கள் இதில் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. அவ்வளவு ஆர்வமாக இல்லை என்றெல்லாம் பேசப்பட்டது. கருத்துக் கணிப்புக்கள் அப்படி இப்படி இருந்தாலும் கலியாணம் கடைசி நேரத்தில் உலகம் முழுவதும் களை கட்டித் தான் உள்ளது.



29 எப்ரல் 2011 வெள்ளிக்கிழமை அதாவது இன்று, அரச குடும்பத்தின் திருமணங்கள் மற்றும் மரணச் சடங்குகள் நடைபெறும் வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில் இளவரசர் - கேற் திருமணமும் நடைபெற இருக்கிறது.

இளவரசர் வில்லியம் அவரது காதலி கேற் மிடில்ரன் ஆகியோரின் திருமண வைபவத்தை உலக சனத்தொகையில் கால்வாசிப்பேருக்கு மேலானோர் - அதாவது இரண்டு பில்லியன் மக்கள் - இதனைக் கண்டு களிக்கத் துடிக்கின்றனர் என்று ஒரு பிரிட்டிஷ் அமைச்சர் கருத்து வெளியிட்டு இருக்கிறார். ஏனையவர்களுக்கு தொலைக்காட்சி அல்லது இணையத் தளங்களை அணுக வாய்ப்பு இருக்காததே அவர்களின் துரதிர்ஷ்டம்.

1947 நவம்பர் 20 அன்று இன்றைய எலிஸெபெத் மகராணியின் திருமணமும் இதே வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தில்தான் இடம்பெற்றது. சாள்ஸ் - டயானா தம்பதியினரின் திருமணம் இங்கு இடம்பெறாத போதும், 1997இல் டயானாவின் இறுதிச் சடங்கு, உலகெங்கும் இரண்டு பில்லியன் மக்கள் தொலைக்காட்சியில் கண்டு கண் கலங்க இங்கேயே நடைபெற்றது.

இளவரசரின் பெற்றோரான சாள்ஸ் டயானா தம்பதிகளின் திருமணம் 1981 ஜூலை 29இல் இந்த வழமைக்கு மாறாக செனற் போல் தேவாலயத்தில் இடம்பெற்றது. இதனை உலகெங்குமுள்ள 750 மில்லியன் மக்கள் தொலைக்காட்சியில் கண்டு களித்திருந்தனர்.

இன்றைய தினத்தை ஓர் அரச விடுமுறை தினமாக பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் அறிவித்து



இருக்கிறார். இது பிரிட்டன் மக்களுக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதும் பரவி வாழும் பிரிட்டிஷ் ஆதரவாளர்களுக்கும் மக்களுக்கும் கொண்டாட்டமான தினம் எனக் கருதப்படுகிறது. எனினும் இந்த விடுமுறை அறிவிப்புக்கு குடியரசு கட்சி ஆதரவாளர்களிடம் இருந்து எதிர்ப்புகளும் கிளம்பியுள்ளன.

பாரம்பரிய வெஸ்ட்மினிஸ்டர் தேவாலயத்தை புதுமணத் தம்பதிகள் தேர்ந்து எடுத்தமை தொடர்பாக மகிழ்ச்சி வெளியிட்டு இருக்கும் (The Dean of Westminster, the Very Reverend Dr John Hall) தேவாலய மதகுரு வணக்கத்துக்குரிய டாக்டர் ஜோன் ஹோல் உலகம் முழுவதற்கும் இது ஒரு பெருவிழா எனக் குறிப்பிட்டுள்ளார்.

திருமண செலவான 12 மில்லியன் பிரிட்டிஷ் பவுண்டுகளில் பெரும் பங்கை அரச குடும்பமும் மீதியை மணப்பெண் குடும்பமும் பகிர்ந்து கொள்ளும்.

ஆனாலும் பிரிட்டிஷ் மக்களின் வரிப்பணத்தில்தான் பாதுகாப்பு செலவீனங்கள் அடங்கும் என அறிவிக்கப் பட்டுள்ளது.



அரச குடும்பம் பழமையை விட்டுக் கொடுக்காது என்பதனை உறுதி செய்வது போல ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. திருமண மண்டபம் குழந்தைகள் சிறுவர்களாலும் தொண்டர்களாலும் வசதியற்றவர்களாலும் நிறைய வேண்டும் என்பது வில்லியத்தின் எதிர்பார்ப்பு ஆகிறது.

நினைப்பதை சாதிப்பதில் வில்லியம் உறுதியானவர். தமது திருமண திகதி, இடம், விதம் என்பவற்றை தீர்மானிக்க அரச குடும்பத்திடம் அதிகம் அவர் தங்கியிருக்கவில்லை. தவிர தனது பள்ளிக் கால மற்றும் சேவைக் கால நண்பர்களின் ஆதிக்கத்தை மேலோங்க வைக்

## கேற் மிடில்ரன்



*மணமகள் கேற் மிடில்ரன் 1982 ஜனவரி மாதம் 9ஆம் திகதி பிறந்தவர். மணமகனை விட ஐந்தரை மாதங்கள் மூத்தவர். சென் அன்ரூஸ் பல்கலைகழகத்தில் கற்கும்போது 2001 இல் வில்லியமை சந்தித்தவர். கல்லூரியில் அவர் சமர்த்தர்தான். பல போட்டிகளில் அனைவரையும் வெகுவாக கவர்ந்து விடுவார். வெற்றிகளையும் குவிப்பார். இது வில்லியமை கவரத் தொடங்கியது.*

*இரண்டாம் வருடம் அதாவது 2002 இல் அவர்களிடையே காதல் மலர்ந்தது. அதனை பின்னர் சில பத்திரிகைகள் கசியவிட்டிருந்தன. 2004இல் இருவரிடையே ஒரு சிறு சச்சரவு ஏற்பட்டாலும் அது அந்த கிறிஸ்மஸ் காலத்தில் சரிப்பட்டுவிட்டது.*

*2005இல் வில்லியமின் பட்டமளிப்பு விழாவிற்கு வருகை தந்த மகாராணியார் கேற் பட்டம் பெறுவதையும் கண்டிருப்பார். வில்லியம் இளவரசர் பல சோலிக்காரர் பொறுப்பான பதவிகளை வகிப்பவர் தொழிலில், பயிற்சிகளில் தீவிரமாக பங்கெடுப்பவர் என்பதால் காதல் லீலைகளுக்கு அதிகம் நேரத்தை ஒதுக்க முடிவதில்லை. இதனால் 2007 இல் மீண்டும் காதலில் முறிவு ஏற்பட்டது.*

*ஆனால் விரைவாக இருவரும் மீண்டும் இணைந்தார்கள். தன்னை இப்பிரிவு காலப் பகுதியில் முதிர்ச்சியான வராகச் சகிப்பவராக சமாளிப்பவராக ஆக்கிக் கொண்டதாக கேற் பின்னர் தெரிவித்து இருந்தார்.*

# இடத்து ...ந்தம்



கூவே திட்டங்கள் தீட்டப்பட்டன. மகன் சாள்ஸை விட பேரன் உறுதியானவர் என்பது மகாராணிக்கும் தெரிந்த விடயம். என்னதான் நாட்டுக்கு மகாராணி என்றாலும் வில்லியமிற்கு அப்பம்மாதானே! தம்பி நினைத்ததை நினைத்தபடி சாதித்த வரலாறு அரச குடும்பத்தில் புதுமைதான்.

தனது தாயார் டயானாவின் திருமண வைர மோதிரத்தை காதலி கேற்றுக்கு அணிவிக்கவுள்ளதாக வில்லியம் அறிவித்தமை பலரையும் வியப்புக்கு உள்ளாக்கி இருக்கிறது. டயானாவுக்காக அந்த மோதிரத்தை சாள்ஸ் அல்ல டயானாவும் அல்ல எலிஸெபத் மகாராணியாரே அப்போது தெரிந்து எடுத்திருந்தார். அரச குடும்ப நகைவர்த்தகர் டேவிட் தோமஸ் அரண்மனைக்கு எடுத்து வந்த மோதிரங்களிலிருந்து இரகசியமாக அது தெரிவு செய்யப்பட்டது.



அந்த வரலாற்று மோதிரம் கேற்றின் விரல்களை அலங்கரிக்கும்போது அவள் மீண்டும் ஒரு புதிய டயாணாவாக உலா வர வாய்ப்புக்கள் உருவாகலாம்.

திருமணத்திற்கான ஏற்பாடுகளும் ஒத்திகைகளும் தீவிரமாகவே இடம்பெற்று வருகின்றன. 12 மில்லியன் பவுண்டுகளை என்ன காற்றில் வீசியா செலவழிக்க முடியும்? இச் செலவுகள் பற்றி அதிருப்தி கொள்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.


மணமகன் இல்லமாக பக்கிங்ஹாம் அரண்மனை திகழும். மணமகள் குடும்பத்தினர் லண்டனின் 5 நட்சத்திர விடுதியான மேபெயார்ஸ் கோரிங் ஹோட்டலில் (Mayfair's Goring Hotel) தங்கியிருந்து புறப்படுவர். இது அரண்மனைக்கு மிகச் சமீபமாக இருக்கும் உல்லாச விடுதியாகும்.

லண்டன் நேரப்படி காலை 11.00 மணிக்கு வெஸ்ட்மினிஸ்டர் தேவாலயத்தில் மதச் சடங்குகள் ஆரம்பமாகும். இது இலங்கை நேரப்படி மாலை 4.30 ஆக அமையும்.

காலை 8.15 முதல் விருந்தினர்கள் வருகை தர ஆரம்பிப்பார்கள். காலை 9.50ற்கு பிரிட்டன் பிரதமர் டேவிட் கமருன் தனது மனைவி சமந்தா சகிதம் வருகை தந்து இராஜதந்திரிகள் புடைசூழ ஆசனத்தில் அமருவார். உள்நாட்டு வெளிநாட்டு முக்கிஸ்தர்கள் பலரும் இதில் கலந்து கொள்ள இருக்கிறார்கள்.

அரண்மனையிலிருந்து அரச குடும்பத்தினர் ஒன்றரை மைல் தூரம் பயணித்து தேவாலயத்தை வந்தடைவர்.

கடிகார முட்கள் காலை 10.15 இனை எட்டும்போது மணமகன் வில்லியம் சகோதரன் ஹரி சகிதம் மணமேடையை அலங்கரிக்க வருகை தருவார். காலை 10.40 மணிக்கு அரண்மனையை விட்டுப் புறப்பட்டு 10.45ற்கு மகாராணி எடின்பரோ கோமகன் சகிதம் மண்டபத்தை வந்தடைவார். இவர்களின் வரவுடன் மணமகன் அணியினர் வரவு முற்றுப் பெறும். தொடர்ந்து



மணமகள் பகுதியினர் வருகை ஆரம்பமாகின்றது.

தாயார் வருகை தந்தபின் தனது தந்தையார் மைக்கேல் மிடில்ரன் சகிதம் அரச குடும்ப பழம்பெரும் றோல்ஸ் றோய்ஸ் காரில் மணமகள் கேற், உலகெங்கும் உள்ள பில்லியன் கணக்கான மக்களின் கண்கள் காவு கொள்ள, காலை 10.41ற்கு ஹோட்டலை விட்டுப் புறப்பட்டு ஒன்பது நிமிட லண்டனின் வீதியுலா பயணமாக காலை 11.00 மணிக்கு தேவாலயத்தை வந்தடையும்போது ஆராதனைகள் ஆரம்பமாகும்.

1997இன் உற்பத்தியான Rolls-Royce Phantom VI காரை தனது தேவாலய வருகைக்கான வாகனமாக கேற்தான் தெரிந்தெடுத்தார். அதன் பெரும் கண்ணாடிகள் பார்வையாளர்களுக்கு வசதியானவை என அவர் கருது கிறார். இளவரசி யாகும் மணப்பெண் குதிரை வண்டியில் மணமேடைக்கு வரும் வழமையையும் அவர் துறந்தார்.

**மு.சிவநேசன்**
sivanesan@usa.com

(26ஆம் பக்கம் பார்க்க)

## சார்ல்ஸ் வில்லியம்

*மணமகன் வில்லியம் ஒரு முற்போக்கான இளவரசர். சாள்ஸ் - டயானா தம்பதிகளின் மூத்த புதல்வர். 1982 ஜுன் மாதம் 21ஆம் திகதி பிறந்தவர். இளம் வயதில் குடும்பச் சோகங்களைச் சுமந்தவர். 15 வயதில் தாயார் டயானாவின் மரணத்தை சகித்தவர். பண்ணைகளில் கடினமான பணிகளைச் செய்து பழக்கப்பட்டவர். 2005 இல் புவியியல் பட்டதாரியானார்.*



*குதிரைச் சவாரி இவருக்கு கை வந்த கலை. குருவை மிஞ்சிய சீடராகத் தகப்பன் சாள்ஸை விட லாவகமாக குதிரையை கையாள வல்லவர், காயம்படாமல் தப்புபவர் என்றெல்லாம் ஊரிலே பேச்சுண்டு*

*பிரிட்டிஷ் இராணுவத்தில் ஒரு லெப்டினன்ட் தர அதிகாரியாகச் செயற்பட்டவர். தற்போது கடற்படையின் மீட்பு படையணி பைலட் பயிற்சிகளில் தீவிரமாக ஈடுபாடு காட்டுகிறார். தவிர பல தரும மற்றும் தொண்டு நிறுவனங்களின் ஆர்வலராக, தலைவராக, போஷகராக கடமை புரிகிறார்.*



## கவிஞர்



*என்ன ஐயா! கொஞ்ச நாளாக இந்தப் பக்கம் உங்களைப் பார்க்க முடியவில்லை?'' என்று ஒருத் தரை இன்னொருவர் கேட்டார். அதற்கு ''கதை, கட்டுரை, நாடகம் எல்லாம் நிறை எழுதுவதால் எனக்கு இப்போது இங்குவர நேரமே கிடைப்பதில்லை'' என்றார் மற்றவர்.*

*அப்படியென்றால் இப்போது எதற்காக இந்தப்பக்கம் வந்தீர்கள்?'' என்று கேட்டார்.*

*''என்னுடைய கவிதை மிகவும் நன்றாக இருக்கிறது என்று எல்லோரும் சொல்கிறார்கள். அதனால் என் பேருக்கு முன்னால் போடுவதற்கு பட்டம் வேண்டும்'' என்றார் அவர்.*

*''என்னிடம் கைவசம் எந்தப் பட்டமும் இல்லையே?'' என்றார் இவரை நீண்ட நாள்கள் காணவில்லை என்றவர்.*

*''அது எனக்குத் தெரியும். ஆனாலும் உங்களிடம் ஏதாவது யோசனை கேட்கலாம் என்று வந்தேன்'' என்றார்.*

*''என்ன யோசனை எதிர்பார்க்கிறீர்கள்?'' என்றதற்கு, ''என்னுடைய பெயருக்கு முன்னால் 'கவிஞர்' என்று போடலாமா? பண்டிதர் என்று போடலாமா?'' என்று கேட்டார்.*

*''நீங்கள் எழுதியவற்றைப் படித்துப் பார்த்து விட்டுத்தான் இதற்குப் பதில் சொல்லமுடியும்'' என்றார் மற்றவர்.*

*அவரும் விடுவதாக இல்லை. ''என்னுடைய படைப்புக் களைக் கொண்டு வந்திருக்கிறேன்; முதலில் இதைப் படியுங்கள்'' என்று சொல்லி அவற்றை அவர்முன் நீட்டினார்.*

*''இதை நான் படிப்பதற்கு முன்னர் கவிஞர் என்றால் யார்? பண்டிதர் என்றால் யார்? என்பதைப் புரிந்து கொள்வதற்கு ஒரு கதை சொல்கிறேன்'' என்று கதையைக் கூற ஆரம்பித்தார்.*

*வடமொழியிலே பவபூதி என்று ஒரு மகாகவி இருந்தார். அவர் மிகப்பெரிய அறிவாளி. பக்திமான். அவருடைய அறிவையும், பக்தியையும் பார்த்துவிட்டு சரஸ்வதிதேவியே மிகவும் ஆச்சரியப் பட்டுப் போனார்களாம். அதுமட்டுமல்ல சரஸ்வதியே ஒரு சிறுமியாக வந்து அவருக்குப் பணிவிடை செய்து வந்தார்கள்.*

*ஒரு நாள் இந்தப் பவபூதியைப் பார்ப்பதற்காக இரண்டு பேர் வந்தார்கள். வந்தவர்களில் ஒருவர் காளிதாசர், இன்னொருத்தர் தண்டியடிகள். அவர்கள் இரண்டு பேரும் அங்கு வந்த நேரத்தில் பவபூதி பூஜையில் இருந்தார். வாசலில் அந்தச் சிறுமி நின்று கொண்டிருந்தாள். இவர்களைப் பார்த்தவுடன் ''வாருங்கள், கொஞ்சநேரம் இப்படி உட்காருங்கள்; வந்து விடுவார்'' என்றாள்.*

*''சரி என்று இரண்டு பேரும் உட்கார்ந்தார்கள்.*

*சிறிது நேரத்தில் தண்டியடிகள் அந்தச் சிறுமியைப் பார்த்து ''பூரண சந்திரனைப் போன்ற முகத்தை உடையவளே! கொஞ்சம் பாக்குத்தூள் கொண்டுவா'' என்றார்.*

*அதன் பின்னர் காளிதாசர் அந்தச் சிறுமியைப் பார்த்து ''காதளவு நீண்ட கண்களையுடைய பெண்ணே! பொன்னிறமான வெற்றிலையைக் கொண்டுவா'' என்றார்.*

*இந்தச் சிறுமி வெற்றிலையையும் பாக்கையும் எடுத்துக் கொண்டுவரும் வழியில் பவபூதி பூஜையை முடித்துக் கொண்டு வந்தார். அவர் வெற்றிலை பாக்கோடு சிறுமி போய்க் கொண்டிருப்பதைப் பார்த்தார்.*

*''யாருக்கு அம்மா! வெற்றிலை, பாக்கு எடுத்துக் கொண்டு போகிறாய்?'' என்று கேட்டார். அதற்கு அந்தச் சிறுமி ''கவிஞராகிய காளிதாசருக்கும் பண்டிதராகிய தண்டியடிகளுக்கும் கொண்டு செல்கிறேன்'' என்றாள்.*

*''அது சரி காளிதாசரை கவிஞரென்று சொல்கிறாய்? தண்டியைப் பண்டிதர் என்று சொல்கிறாய்? அது ஏன்?'' என்று கேட்டார் பவபூதி. அதற்கு அந்தச் சிறுமி பின்வருமாறு விளக்கம் கொடுக் கிறாள்.*

*''காளிதாசர் என்னைக் காதளவு நீண்ட கண்களை உடையவளே'' என்று வர்ணித்தார். ''எனக்குப் பொன்னிறமான வெற்றிலையைத்தேடி எடுத்துக் கொண்டு வா என்று சொன்னார். பயனற்ற வர்ணனை எதுவும் இல்லாமல் சொற்களைக் காரண காரியத்துக்கு ஏற்றமாதிரி பயன்படுத்துபவர்தான் கவிஞன். ஆனால் காரண காரியத்தை நோக்காமல் வெறும் வர்ணனையைக் கையாள்பவன் பண்டிதன்.*

*தண்டி பாக்குத்தூள் கேட்டார். என்னை பூரண சந்திரன் போன்ற முகத்தை உடையவளே என்று வர்ணித்தார். இந்த வர்ணனைக்கும் பாக்குத்தூள் கொண்டுவருவதற்கும் ஒரு தொடர்பும் இல்லை. இது வெறும் சொல் அலங்காரம். அதனால்தான் காளிதாசனைக் கவிஞன் ஏன்று சொன்னேன். தண்டியைப் பண்டிதர் என்று கூறினேன்'' என்றாள். இதுதான் அந்தச் சிறுமி கூறிய பதில்.*


*''இந்தக் கதையை எதிரில் உட்கார்ந்திருந்தவரிடம் சொல்லி விட்டு'' இந்த அடிப்படையில் தான் நீங்கள் கவிஞரா? பண்டிதரா? என்பதை முடிவு செய்யப் போகிறேன்'' என்று கூறி அவருடைய படைப்பை படித்துப் பார்த்தேன்.*

*அவர் கொடுத்த முதல் படைப்பைப் படித்துவிட்டு இந்தக் கட்டுரை மிகவும் நல்லதாக இருக்கிறது...... என்று ஆரம் பித்தேன். அதற்குள் அவர் அவசரமாகக் குறிக்கிட்டு ''அது கட் டுரை இல்லை, கவிதை என்றார்.''*

**கோ. சுவாமிநாதன்.**

# விண்டோஸ் 7 இல் ஆரம்ப பட்டனை மறைக்கும் வழி

இப்போதுதான் கணினிப் பயன்பாட்டாளர் கள் விண்டோஸ், எக்ஸ் பியை விட்டு, விண் டோஸ் ஏழு பக்கம் அடியெடுத்து வைக்கின்றனர்.




அதற்குள் விண்டோஸ் எட்டு ஓப்பரேட்டிங் சிஸ்ரமானது வெளி யாக உள்ளது. இந்த விண்டோஸ் ஏழு ஓப ரேட்டிங் சிஸ்ரத்தில் பல சிறப்பம்சங்கள் உள்ளன.

இந்த ஓப்பரேட்டிங் சிஸ்ரத்தைச் சார்ந்து தினமும் பல்வேறு மென்பொருள்கள் வெளியாகின்றன. அவற்றில் ஒன்று தான் Taskbar Hider. இந்த மென்பொருளின் உதவியுடன் விண்டோஸ் ஏழு ஓப்பரேட்டிங் சிஸ்ரத்தின் ராஸ்க்பார் மற்றும் தொடக்க பொத்தானை மறைக்கலாம்.

இந்த மென்பொருளானது இலவச மென்பொருள் அத்துடன் அளவில் சிறியது ஆகும்.

இந்த மென்பொருளை இணையத்தில் இருந்து பதிவிறக்கிக் கொள்ளவும் சுருக்கு கோப்பறையாக(Zip) உள்ள கோப்பை விரித்துக் கொள்ளவும். பின் அந்த கோப்பின் மீது வலது கிளிக் செய்து தோன்றும் விண்டோவில் Run as administrator என்பதைத் தேர்வு செய்யவும். தேர்வு செய்தவுடன் தோன்றும் விண்டோவில் உங்கள் விருப்பப்படி ராஸ்க்பார் மற்றும் ஸ்டார்ட் பட்டனை மறைத்துக் கொள்ள முடியும்.

# பென்ட்ரைவ் மூலம் பரவும் வைரஸ்களைத் தடுக்க

தற்பொழுது பென்ட்ரைவ் மூலமாகப் பரவும் வைரஸ், மால்வேர்களின் தொல்லை மிகவும் அதிகமாக உள்ளது.

இதனைத் தடுக்க ஓர் இலவச மென்பொருள் உள்ளது. USB Firewall எனப்படும் இந்த மென்பொருளை உங்கள் கணினியில் நிறுவிக் கொள்ளவும்.

அதன் பின் எந்தவொரு பென்ட்ரைவையும் கணினியுடன் இணைக்கும் பொழுது, இந்த மென்பொருளானது அதுவாகவே பென்ட்ரைவை ஸ்கான் செய்து விடும். கணினியில் நுழைய முயற்சிக்கும் கோப்புகளைத் தடுத்து நிறுத்தும். (முக்கியமாக Autorun.inf).



உங்கள் கணினியில் வேறு ஆண்டி வைரஸ் மென் பொருள் நிறுவப்பட்டிருந்தாலும் அதனோடு இதையும் உபயோகப்படுத்தலாம்.

# யூடியூப் வீடியோக்களை MP3யாக மாற்றம் செய்யும் முறை

யூடியூப் தளத்தில் தினமும் லட்சக்கணக்கான வீடியோக்கள் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. இந்தத் தளத்தில் இருக்கும் வீடியோக்களைப் பதிவிறக்கம் செய்யப் பல்வேறு வழிமுறைகள் உள்ளன.

யூடியூப் தளத்தில் இருக்கும் வீடியோவில் இருந்து ஓடியோவினை மட்டும் தனியே பதிவிறக்கம் செய்ய வேண்டுமெனில் நாம் முதலில் வீடியோவைப் பதிவிறக்கம் செய்து அதிலிருந்து ஓடியோவை மட்டும் பிரித்தெடுக்க வேண்டும்.

இல்லையெனில் எதாவது ஒரு மூன்றாம் தர மென்பொருளின் உதவியினை நாடிச் செல்ல வேண்டும். இதற்குப் பதிலாக இணையத்திலேயே யூடியூப் வீடியோவை MP3 யாக மாற்றம் செய்ய ஒரு தளம் வழிவகை செய்கிறது.

சுட்டியில் குறிப்பிட்ட தளத்துக்குச் சென்று மாற்றம் செய்ய வேண்டிய முகவரியை (URL) குறிப்பிடவும். பின் மின்னஞ்சல் முகவரியை உள்ளிடவும். அடுத்து எந்த முறையில் மாற்றம் செய்ய வேண்டும் என்பதைத் தேர்வு செய்து கொள்ளவும்.

அடுத்து தரத்தைத் தேர்வு செய்து கொள்ள வேண்டும். பின் Convert Now என்னும் பொத்தானை அழுத்தவும். சில நொடிகளில் உங்களுடைய மின்னஞ்சல் முகவரிக்கு பதிவிறக்கம் செய்வதற்கான சுட்டி அனுப்பி வைக்கப்படும். அந்தச் சுட்டியைப் பயன்படுத்தித் தரவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு வீடியோவில் இருந்து ஓடியோவைப் பிரித்து எடுக்க நாம் எந்த ஒரு மென்பொருளையும் கையாள வேண்டியது இல்லை. இணையத்தின் உதவியுடனேயே மாற்றம் செய்து கொள்ள முடியும்.

# இணையத்தள பக்கங்களை PDF ஆகவும் சேமிக்கலாம்

இணையத் தளங்களைப் பார்வையிடும் பொழுது சில தேவைகளுக்காக அதைச் சேமித்து வைத்தால் எதிர்காலத்தில் உபயோகமாக இருக்கும் என்று சிலர் கருதுவதுண்டு.



ஆனால் இணையப் பக்கங்களைச் சேமிப்பதில் பல்வேறு சிரமங்கள் ஏற்படலாம். இணையப் பக்கங்கள் மட்டுமல்லாமல் எந்த வகையான கோப்பாக இருந்தாலும் அதை PDF வடிவில் சேமிக்க ஓர் அருமையான இலவச மென்பொருள் உள்ளது.

Primo Pdf எனப்படும் இந்த மென்பொருளைத் தரவிறக்கி கணினியில் நிறுவிக் கொள்ளவும். எந்த இணைய பக்கத்தை PDF ஆக சேமிக்க வேண்டுமோ அந்த பக்கத்தைத் திறந்து கொண்டு File மெனுவில் Printl அழுத்த வேண்டும்.

பின் Open ஆகும் விண்டோவில் Primo Pdf என்பதைத் தெரிவு செய்ய வேண்டும். அதன் பிறகு Create PDFI அழுத்த வேண்டும்.

இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட இணையப் பக்கமானது Pdf ஆக சேமிக்கப்பட்டிருக்கும். PDF உருவாவதில் ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் Save AsA Specific Folder என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

# ஜிமெயிலில் டுவிட்டரைப் எவ்வாறு பயன்படுத்தலாம்?

டுவிட்டர் தளமானது நண்பர்களிடம் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள உதவும் தளம் ஆகும். சமூக இணையத்தளத்தில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் தளத்தில் இந்தத் தளமும் ஒன்றாகும்.

சாதாரண மனிதனில் தொடங்கி மிகப்பெரிய நபர்கள் வரை டுவிட்டர் தளத்தில் கணக்கு வைத்திருப்பார்கள். இவர்கள் தங்களுடைய சுயவிவரங்களையும், பிடித்த செயல்களையும் அவ்வப்போது டுவிட்டர் தளத்தில் வெளியிடுவார்கள்.

செய்தித்தாள்களில் கூட வெளிவராத செய்திகள் இதுபோன்ற சமூக இணையத்தளங்களில் காண முடியும். இதுபோன்ற செய்திகளை நாம் டுவிட்டர் தளத்தில் நம்முடைய கணக்கில் நுழைந்த பின்புதான் காண முடியும்.

ஒரே நேரத்தில் பல தளங்களில் பணியாற்றும் போது நாம் தனியாக இந்தத் தளத்திற்குச் சென்று இதுபோன்ற செய்திகளைக் காண முடியாது. டுவிட்டரில் பதிவிடும் செய்திகளை ஜிடால்கில் இருந்தவாறே காண முடியும். இதற்கு ஒரு தளத்தில் ஜிமெயில் கணக்கு மற்றும் டுவிட்டர் கணக்கைச் சமர்பிக்க வேண்டும்.

இந்தத் தளத்தில் நுழைந்து கொடுக்கப்பட்ட சுட்டி கிளிக் செய்து கூகுள் முதலில் ஐயச் கணக்கின் பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லை உள்ளிட்டு Allow என்னும் பொத்தானை அழுத்தவும். அடுத்ததாக டுவிட்டர் கணக்கின் பயன்ர் பெயர் மற்றும் கடவுச்சொல்லை உள்ளிட்டு Allow என்னும் பொத்தானை அழுத்தவும்.

அடுத்து ஜிடால்கினை Open செய்து அதில் புதியதாக வந்துள்ள நண்பர் அழைப்பினை ஒகே செய்யவும். அவ்வளவு தான் இனி டுவிட்டரில் பதியப்படும் உங்கள் கணக்குத் தொடர்பான அனைத்துச் செய்திகளையும் உங்களால் ஜிடால்கில் இருந்தவாறே பெற முடியும்.

இந்த வசதியை நீங்கள் ஜிமெயில் அரட்டையிலும், ஆர்குட் அரட்டையிலும் பெற முடியும். விரும்பினால் நிறுத்திக் கொள்ளவும் முடியும். இந்த வசதியின் மூலம் இனித் தனியாக டுவிட்டர் கணக்கைத் திறக்க வேண்டிய அவசியம் இருக்காது.

# தெங்குவளம் நிறைந்த எழுதுமட்டுவாழ் கிராமம்

ஒரு கிராமத்தின் வளர்ச்சிக்கு அங்குள்ள வளங்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. வளங்களை உருவாக்கக் கூடிய மண்வளம் காணப்படின் எந்தத் திட்டத்தினை உருவாக்கினாலும் அதன் பயன்பாடு நிறையவே கிடைக்கும். மண் வளம் சிறப்பாக இருப்பின் அங்கு கிடைக்கும் தண்ணீரும் நல்ல தண்ணீராக இருக்கும். நல்ல தண்ணீர் இருப்பின் அங்கு பயிர்வகைகளின் உற்பத்தியும் அதிகமாக இருக்கும். உற்பத்திகள் பெரும் பயனை வழங்குவதால் அதனால். பயனடைவோரின் தொகையும் அதிகமாகக் காணப்படும்.

அந்த வகையில் அங்கு வாழ்ந்த குடும்பங்களை மட்டுமல்ல அயல் கிராம மக்களின் பொருளாதாரத்துக்கு வழி சமைத்து கடந்த பத்து வருடங்களில் பாலைவனமாக மாறியுள்ள எழுதுமட்டுவாழ் கிராமம் பற்றி ஆராய்வோம்.

தென்மராட்சிப் பிரதேசத்தின் கிழக்குப் புற எல்லைக் கிராமமாக எழுதுமட்டுவாழ் அமைந்துள்ளது. யாழ்ப்பாணம் - கண்டி வீதி (ஏ-9) இந்தக் கிராமத்தை ஊடறுத்துச் செல்கின்றது. தென்மராட்சிப் பிரதேசத்தின் கிராம அலுவலர் (ஜே/333) பிரிவுக்கான தனிக் கிராமமாக எழுதுமட்டுவாழ் உள்ளது.

இந்தக் கிராமத்தின் எல்லைகளாக கிழக்குப் புறம் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் மேற்குப் புற எல்லைக் கிராமான முகமாலையையும் வடக்குப் புறம் வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தின் நாகர் கோவில் பிரிவின் தெற்குப் புற எல்லையையும் தெற்குப் புறம் கிளாலி, ஒட்டுவெளி, கரம்பகம் பகுதிகளையும் மேற்குப் புறம் மிருசுவில் பகுதியையும் கொண்டுள்ளது. இந்தக் கிராமத்தின் முக்கிய விளை பயிராகத் தென்னை மரங்கள் உள்ளதால் ஒவ்வொரு குடியிருப்பாளரும் தென்னந் தோப்புகளின் சொந்தக்காரர்களாகவே இருந்தனர். இங்கு உற்பத்தி செய்யப்படும் தேங்காய்கள் யாழ்.குடா நாட்டின் தேவைகளைப் பெருமளவில் பூர்த்தி செய்யக் கூடியவகையில் இருந்தன.

இவற்றுடன் இந்தப் பிரிவில் உள்ள ஒட்டுவெளி நெல் வயல்களில் காலபோகத்தில் விளைவிக்கப்படும் நெல், பிரிவு மக்களின் உணவுத் தேவைக்குப் பயன்படுத்தப்பட்டது. மேலும் அடுத்த பெரும் வான் பயிராகப் பனை மரங்கள் காணப்படுகின்றன. பனை மரத்தின் மூலம் கிடைக்கும் ஓலைகளில் தயாரிக்கப்படும் உற்பத்திப் பொருள்கள் மற்றும் பனாட்டு, கிழங்கு, ஓடியல், புளுக்கொடியல் போன்றவை தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு இப்பகுதி மக்களின் உற்பத்தியும் உழைப்பு காணப்பட்டன. இவற்றினை விட வருடம் முழுவதும் உப உணவு உற்பத்திப் பொருள்களும் விளைவிக்கப்பட்டு குடாநாட்டுச் சந்தைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டன. ஏ-9 வீதி இந்தக் கிராமத்தின் ஊடாகச் செல்வதால் இங்கு விளைவிக்கப்படும் விளை பொருள்களை சந்தைக்குக் கொண்டு செல்வதில் மக்களுக்கு எந்தவொரு பிரச்சினையும் ஏற்படவில்லை.வருடம் முழுவதும் இந்தக் கிராமத்தில் உற்பத்திகள் மேற்கொள்ளப்படுவதால் அயற் கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இப்பகுதியில் நிரந்தர வேலை வாய்ப்பினைப் பெற்று நிரந்தர வருமானங்களைப் பெறமுடிந்தது.

இங்குள்ள மாணவர்களை கல்விமான்களாக உருவாக்க 3 பாடசாலைகள் இருந்தன. ஆரம்பப் பிரிவுக்கென மருதங்குளம் அ.த.க பாடசாலை, எழுதுமட்டுவாழ் அ.த.க பாடசாலை ஆகியவையும் இடைநிலை,உயர் கல்விக்கென எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயமும் திகழ்ந்தன.

இந்தப் பாடசாலைகளில் கல்வி பயின்ற பலர் பல்வேறு திணைக்களங்களில் உயர் பதவிகளை வகித்து இங்குள்ள பாடசாலைகளுக்கும் பிறந்த மண்ணுக்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

இந்த கிராமத்தில் வசித்தோரில் பெருமளவானோர் இந்துக்களாக இருந்த தால் பல சைவ ஆலயங்களும் இங்கு காணப்பட்டன. கிராமத்தின் மத்தியில் சிவன் கோயிலும் வடக்குப் புறத்தில் விழுவளை கண் ணகை அம்பாள் ஆலயமும் கிழக்குப் புறத்தில் பெரியகேணி பிள்ளையார் ஆலயமும், மேற்குப் புறத்தில் வயல்வெளியில் உள்ள ஒட்டுவெளி முருகன் ஆலயம் ஆகியவற்றுடன் பல்வேறு சிறிய ஆலயங்களும் இங்குள்ள மக்களுக்கு அருள் பாலித்தன.

அத்துடன் கிராமத்தின் கிழக்குப் புற

**ஐயந்தன்**

எல்லைக் கிராமமான முகமாலையில் இருந்த அன்னை வேளாங்கன்னி மாதா தேவாலயமும், கிளாலியில் காணப்பட்ட கத்தோலிக்க தேவாலயங்களும் இந்தப் பகுதி மக்களின் வழிபாட்டுத் தலங்களாகத் திகழ்ந்தன. இத்தகைய வளங்களுடன் திகழ்ந்த எழுதுமட்டுவாழ் கிராமத்தின் வளர்ச்சியில் இடி வீழ்ந்ததுபோல் 2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் ஏற்பட்ட இடப்பெயர்வு இந்தக் கிராமத்தின் தலையெழுத்தையே மாற்றி அமைத்துள்ளது.

*(தொடரும்)*

# சமூகத்தின் வளர்ச்சிக்குக் கைகொடுக்கும் கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*



வளர்மதி சனசமூக நிலையத்தைப் பொறுத்தவரை முன்னைய காலங்களிலும் சரி தற்போதைய காலத்திலும் சரி கல்விக்கே முன்னுரிமை கொடுத்து வருகின்றது. தமது பிரதேசச் சிறார்கள் முன்னேற வேண்டும் என்பதற்காகப் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதன் மூலம் அந்தச் சிறார்களைப் பாடசாலைக் கல்வியைத் தொடரச் செய்கின்றார்கள். அத்துடன், புலம் பெயர்ந்து வசிக்கும் தமது நிலையத்தின் அங்கத்தவர்களின் முழுப் பங்களிப்புடன் கல்வி நிலையத்தை உருவாக்கி இலவசக் கல்வியைப் போதித்து வருகின்றார்கள். குறிப்பாக நேர்வே நாட்டில் வசிக்கும் கி.நமசிவாயம் நீண்ட காலமாகவே மேற்படி நிலைய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களைத் தொடர்ந்து ஒவ்வொரு முறையும் இலவசமாக வழங்கி வருகின்றார்.

இதேவேளை, தமது கல்வி நிலையத்தின் ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை வழங்குவதில் புலம் பெயர் வாழ் அங்கத்தவர்கள் முண்டியடித்து உதவி வருகின்றனர். மாதாந்தம் 30ஆயிரம் ரூபாவை சுவிஸ், லண்டன் மற்றும் ஏனைய நாடுகளில் வசிக்கும் இவர்கள் மாதந்தோறும் ஒவ்வொருவர் எனப் பட்டியலிட்டு இந்தக் கல்விக்கான உதவு தொகையை அனுப்பி வருகின்றனர் என்று வளர்மதி கல்விக் கழகத்தினர் உவகையுடன் தெரிவிக்கின்றனர்.

மேலும் மக்களுக்கான சேவையை வழங்குவதிலும் தாம் மிகவும் ஆர்வம் காட்டுகிறார்கள் எனவும் கூறுகின்றனர். மரணக் கிரியைக்கான நன் கொடை, திருமணத்துக்கான நன்கொடை என்பவற்றுடன் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடனும் மக்களின் வாழ்வாதாரத்தைத் தாம் கட்டியெழுப்பி வருவதாகவும் சிலவேளைகளில், சில வேலைகளைப் பல எதிர்ப்புகளின் மத்தியிலேயே வாதாடி வென்றே சாதித்துள்ளோம் எனவும் வளர்மதி நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர். உதாரணத்துக்குக் கைதடி இராஜபுரிக் கிராமத்தின் வீதித் திருத்தத்துக்கு வந்த நிதியை வேறொரு வீதிக்கு மாற்றியவேளை வீதியில் இறங்கிப் போராட்டம் செய்தே தமது இராஜபுரி வீதியைப் புனரமைத் துள்ளனர். அத்துடன் அந்தக் கிராமத்துக் கான மின்னிணைப்புக்காக விஞ்ஞானத் தொழில் நுட்பத்துறை அமைச்சர் திஸ்ஸ விதாரணவின் நிதியுதவியுடனும் நடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சந்திரகுமாரின் பங்களிப்புடனும் 50 இற்கும் மேற்பட்ட மின்கம்பங்கள் நடப்பட்டு மின்னிணைப்பைப் பெற நிலைய நிர்வாகிகளும், நிலையத்தின் ஆர்வலர்களும் மிகவும் முன்னின்று உழைத்தமையையும் அவர்கள் தெளிவாகவாகவும் ஆதாரத்துடனும் கூறுகின்றனர்.

கலை நகரில் இயங்கும் முன்பள்ளி 2000ஆம் ஆண்டு ஏற்பட்ட கடும் போரின் போது சேதமடைந்த வேளை அன்றைய நாடாளுமன்ற உறுப்பினர் மறைந்த என்.இரவிராஜ் உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்து அதனைத் திருத்த வழி சமைத்தார். அத்துடன், நிலையத்தினதும், முன்பள்ளியினதும் தேவைக்காக அவர் ஒலி பெருக்கிச் சாதனத்தையும் வழங்கினார் என்று நிலைய நிர்வாகத்தினர் கூறுகின்றனர்.

அத்துடன், சாவகச்சேரிப் பிரதேச சபையும் எமது நீண்ட நாள் கோரிக்கையின் பேரில் மாணவர்களின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்கோடு குடிதண்ணீர்க் குழாய்க் கிணறு ஒன்றையும் அமைத்துத் தந்துள்ளது. அதுவும் கடந்த சில வருடங்களாகப் பழுதடைந்த நிலையில் இருந்தது. அதனை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் உடனடியாகத் திருத்திச் சிறார்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தார் என்றும் வளர்மதி முன்பள்ளியை முன்னின்று நிர்வகித்து வரும் வளர்மதி சனசமூக நிலைய நிர்வாகம் தெரிவிக்கின்றது.

மேலும், மக்களுக்கான வேலைத் திட்டங்கள் பலவற்றைத் தமது பகுதி இளைஞர்களின் பூரண ஒத்துழைப்புடன் சிரமதானம் மூலம் நிறைவேற்றி வைக்கின்றனர். பாடசாலைகள், கோயில்கள் ஆகியவற்றின் சில தேவைகளையும் தாம் பூர்த்தி செய்கிறோம் என்றும் கூறுகின்றார்கள்.

1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின்போது தெற்கிலிருந்து தமிழ் உறவுகள், உடைமைகளை இழந்து வந்தவேளை தமது சனசமூக நிலையம் சகல வழிகளிலும் உதவி, அவர்களை ஆறுதல்படுத்தி, ஆற்றுப்படுத்தி அனுப்பியமையையும் நினைவு கூருகின்றனர்.

1990 ஆம் ஆண்டில் ஏற்பட்ட போர் நடவடிக்கையின்போதும் அதீதமாகச் செயற்பட்டு உதவியமையையும் நிலைய நிர்வாகத்தினர் எடுத்தியம்பினர்.

சகலதுறை வல்லுநர்களாகத் திகழும் வளர்மதி விளையாட்டுக்கழக வீரர்கள் சென்ற இடமெல்லாம் பரிசிலுடனும் பாராட்டுடனுமே வருகின்றனர்.

இவர்களின் முன்னேற்றத்துக்குப் புலம்பெயர்வாழ் வளர்மதி உறவுகள் உத்வேகம் கொடுக்கின்றனர் என்று விளையாட்டு வீரர் ஒருவர் வெளியிட்ட கருத்துமூலம் தெரியவருகிறது.

தற்போது தமது பழைய கட்டடம் போர் நடவடிக்கையால் சேதமடைந்துள்ளது. இவர்கள் புதிய கட்டடம் ஒன்றை உருவாக்கிக் .கொண்டிருக்கின்றார்கள்.

அதற்கான உதவிகளைப் புலம் பெயர்ந்த தமது நிலைய அங்கத்தவர்களே ஊக்கமுடன் செய்து வருகின்றனர்.

சுவிஸில் வசிக்கும் க.தர்மலிங்கம், நோர்வேயில் வசிக்கும் கி.நமசிவாயம் ஆகியோர் சனசமூக நிலையத்தின் தேவைக்காக இரண்டு காணிகளை வாங்கி அன்பளிப்பாக நிலையத்துக்கு வழங்கியுள்ளனர்.

அத்துடன் தமது நிலைய அங்கத்தவர்களில் காணி இல்லாத மக்களுக்

**தயா**

குப் பல போராட்டத்தின் மத்தியில் இராஜபுரி எனும் இடத்தில் இருந்த அரச காணிகளை 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்ளுக்குப் பகிர்ந்து வழங்கியுள்ளமையையும் நிலையத்தின் மூத்த உறுப்பினர்கள் கூறினர்.

நிலையத்தின் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் தமது மக்களின் ஒற்றுமையும் பூரண ஒத்துழைப்புமே காரணம் என்று வளர்மதி சனசமூக நிலையத்தின் தலைவர் சி.கந்தசாமி கூறுகிறார்.

இத்துடன் நிற்காது மேலும் மேலும் இந்த நிலையத்துக்குப் பல்வேறுபட்ட அமைப்புக்களும் உதவிபுரியும் சமயத்தில் வளர்மதி கல்வி நிலைய மாணவர்களின் கல்வி வளர்ச்சி உயர்நிலையை அடையும் என்பதில் ஐயமில்லை.

இந்தப் பகுதி மக்களின் வாழ்வாதாரமும் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்ல வாய்ப்பாக அமையும்.

*(முற்றும்)*

# மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு,ஏப்.29

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2386ஆம் இலக்க நேற்றுமுன்தினம் சீட்டிழுப்பில் "V" என்ற ஆங்கில எழுத்தும் 9/6/4/3/6/3 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக் குரியனவாகத் தெரிவாகின. இதன் பிரகாரம் வலமிருந்து இட மான அமைப்பில் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை.

9/6/4/3/6/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் ஒருவருக்கு முதலாம் பரிசாகத் தலா இருபது இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.6/4/3/6/3 என்ற இலக்கங் களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 12 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

4/3/6/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 119 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

3/6/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,210 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும். 6/3 என்ற இலக்கங் களைக் கொண்ட சீட்டுக்களை வைத்தி ருக் கும் 11,908 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

3 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,18,588 பேருக்கு 6ஆம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும். இடமிருந்து வலமான அமைப்பில் 9/6/4/3/6 என்ற இலக்கங் களைக் கொண்ட சீட்டுக்களை வைத் திருக்கும் 11 பேருக்கு ஏழாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது. 9/6/4/3 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்தி ருக்கும் 128 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும். 9/6/4 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக் கும் 1,195 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

9/6 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 11,966 பேருக்கு பத்தாம் பரிசாகத் தலா ஐம்பது ரூபாகிடைக்கும். "V" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 47,141 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ற)


## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், கலைப்பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரியும் 1973 ஆம் ஆண்டு பிறந்த பூராட நட்சத்திரம், கிரக பாவம் 32¼, செவ்வாய் தோசம் குறைந்த மணமகனுக்கு ஆசிரியை/அரச ஊழியர்/ அரச வங்கி ஊழியராகப் பணிபுரிபவர் விரும்பத்தக்கது.

(3596) (39-20-50) தொடர்பு: 0779558170

## கோண்டாவில் கிழக்கில் வீடு விற்பனைக்கு

பலாலி வீதிக்கு அண்மையில் கோண்டாவில் கிழக்கில் இராச வீதியையும் பலாலி வீதியையும் இணைக்கும் கோட்டைக்காடு வீதியில் பரப்பு 1½ நிலத்தில் அமைந்துள்ள வீடு, சுற்று மதிலுடன் உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்புகளுக்கு: 0779633993.

## AAT

AAT பயில விரும்பும் மாணவர்களுக்கு ஓர் இலவச

"வழிகாட்டல் கருத்தரங்கு"

அத்தோடு இணைந்து Professionals English வகுப்புகள் பற்றிய கருத்துரைகளும் வழங்கப்படும்.

இடம் : Spectra Hall

காலம் : 30th April 2011 (சனிக்கிழமை) (10 am-12.30 pm)

Spectra Skills
No.19, Stanly Road,
(People's Bank Building 2nd Floor) Jaffna.
Tel:- 0212221422/1423
Mobil:- 0770517528

(ச/577968) (39-20-50)

## காணி விற்பனை

தென்மராட்சி, கொடிகாமம், கச்சாய் றோட், கச்சாய் அரசினர் பாடசாலைக்கு அருகில் எதிர்கால முதலீட்டுத் திட்டத்துக்கு ஏற்றவகையில் பெரிய நிலப்பரப்பு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ள:-
0750476078, 0772021691, 0247911178.




## 31ஆம் நாள் நினைவஞ்சலி



உதிப்பு:
04.05.1946

உதிர்வு:
30.03.2011

அமரர்
**வைரவன் கணேசன்**

ஆனைமுகத்தான் திருநாமம் பூண்டு
அகிலத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து நெறிபூண்டு
பெயர் விளங்க இப்புவியில் பிள்ளைகளைப் பெற்று
ஊர்விளங்கும் புகழோடு விண்ணகம் சென்றீர்
நிறைவுபெற்ற வாழ்க்கையென்றும் இறையுலகிற் சேர்க்கும்
முறை தவறா இறையைத் தினமும் இறைஞ்சுகின்றோம் ஐயா

கச்சாய் வீதி, சாவகச்சேரி. - குடும்பத்தினர்.

(ச/574849) (39-20-50)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அம்பிகைபாகர்
**கணேசலிங்கம்**

மண்ணுலகில்: 12.11.1935
விண்ணுலகில்: 10.05.2010

திதி: தேய்பிறை நுவாதசி (29.04.2011)

எம்மைவிட்டு நீங்கள் பிரிந்து
ஓராண்டு ஆனாலும்...
உங்கள் நினைவுகள்
எம்மை விட்டகலா.

தங்கரத்தினம், பேரப்பிள்ளைகள், கைதடி கிழக்கு, கைதடி.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(3565) (39-20-50)

## 91ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்:
13.12.1990

மறைவு:
30.01.2011

செல்வன்
**இராசதுரை றஜீவன்**

கடந்த 30.01.2011 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபத மடைந்த எமது அன்புச் செல்வத்தின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (30.04.2011) சனிக்கிழமை ந.ப.12 மணி யளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஜனசக்தி வீதி,
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி. (3577) (39) - குடும்பத்தினர்.

## லங்கா வோல்டைல்ஸ்

# மகத்தான மலிவு விற்பனை!

40% தள்ளுபடி

ஏராளமான வடிவங்களிலும் அளவுகளிலும் பெறலாம்

ஏப்பிரல் 25 முதல் 30 வரை

- நாராயண செரமிக் பிரிவு, 113, A 9, கிளிநொச்சி.
- நியூ கமல் செரமிக்ஸ், மின்சார நிலைய வீதி (யாழ் போதனா வைத்தியசாலைக்குப் பின்னால்), யாழ்ப்பாணம்.

இந்த அரிய வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்!

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
24.12.1946

மறைவு :
02.05.2008

**திருமதி தம்பித்துரை மகேஸ்வரி**

காலன் உன்னைக் கடுகதியில் பிரித்திடுவான்
என்றிருந்தால்
நேரமெல்லாம் உன் வதனம் மெய்மறந்து
பார்த்திருப்பேன் அம்மா

விடியல் வருமென்று வெளிநாடு வந்துமென்ன?
தேடி அலைந்து திரவியங்கள் சேர்த்துமென்ன
கூடிக் குதூகலித்த சொந்தங்கள் பிரிந்ததோடும்
பாசப்பிணைப்பை பாதியில் தொலைத்துவிட்டுடோம் அம்மா
தேடியும் கிடைக்காத சித்திரமே அம்மா!
உன் ஆத்மா சாந்தியடைய இனுங்கித் தோட்ட
முருகன் பாதம் பணிகின்றோம்.

ராஜ வீதி, நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (3545) குடும்பத்தினர்.

# கனடா தேர்தலும் தமிழர்களின் எதிர்பார்ப்பும்

கனடாவின் நாடாளுமன்றத் தேர்தல் மே 2 ஆம் திகதி நடைபெறவுள்ளது. தற்போது இதற்கான பிரசாரங்கள் ஓய்வு நாள்கள் என்றும் பாராமல் சூடு பிடித்துள்ளன. நான்கு கட்சிகள் தேர்தல் பிரசாரக் களத்தில் இறங்கியுள்ளன. நாளுக்குநாள் வெளிவரும் தேர்தல் கருத்துக் கணிப்பின்படி யார் ஆட்சியைக் கைப்பற்றப் போகிறார்கள் என்று உறுதியாகக் கூறமுடியாதுள்ளது. இருந்தாலும், ஒரு பெரும்பான்மையுடன் யாரும் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது என்பதை உறுதியாகக் கூறுகின்றனர் அவதானிகள்.

ஆட்சியில் இருந்த ஸ்ரீபன் காபரின் ஆட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் சென்றமாதம் நீக்கப்பட்டிருந்தது. இந்த விடயத்தில் ஸ்ரீபன் காபருக்கு எந்தக் கட்சியும் ஆதரவு தெரிவிக்கவில்லை. இவருக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தை நியாயப்படுத்த இவரது கட்சியால் முடியாமல் போனது. கனடாவில் ஒரு மாற்றம் தேவை என்று எவ்வளவு தூரம் எதிர்பார்க்கப்படுகின்றதோ அதேபோன்று ஸ்ரீபன் காபரின் அரசையும் மக்கள் நிராகரித்து விடவில்லை என்பதைக் கருத்துக் கணிப்பு மூலம் அறிய முடிகின்றது.

உலகில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார சரிவும் அதனால் ஏற்பட்டிருந்த வேலை இழப்பும் அமெரிக்கா போன்ற பொருளாதாரத்தில் முதன்மை பெற்ற நாடுகளின் பாதிப்புக்களுடன் ஒப்பிடும்போது கனடா இதில் முன்னேற்றத்தில்தான் இருக்கின்றது என்பது பொருளியல் அறிக்கைகள் மூலம் அறிய முடிகின்றது.

உலகின் முதன்மை வங்கிகள் இழப்பைச் சந்தித்ததுடன் பல வங்கிகள் திவாலானதும் நாம் அறிந்த விடயம். ஆனால், கனடாவில் இதுபோன்ற இழப்புக் குறிப்பிட்டுச் சொல்லும்படி ஏற்படவில்லை. இதற்கு இந்தக் காலப்பகுதியில் ஆட்சியிலிருந்த ஸ்ரீபன் காபரின் அரசின் பொருளாதாரக் கொள்கைதான் காரணம் எனப் பரவலாக நம்பப்பட்டிருந்தது. இதனை கனேடியர்கள் வரவேற்றாலும் இத்துறை சார்ந்த வல்லுநர்களின் கூற்றுப்படி இந்த வங்கிகள் கடைப்பிடித்து வரும் திறன் வாய்ந்த நடைமுறைகளே தவிர இதற்கு யாரும் உரிமை கோரமுடியாது. கடந்த காலத்தில் ஆட்சியிலிருந்தவர்களுக்கும் இதில் பங்குண்டு என்கின்றனர்.

பிரதானமாகப் பொருளாதார முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட கட்சிகள் தேர்தல் வாக்குறுதிகளை வழங்கி வந்தாலும் கனடா ஒரு பல்லின சமுதாயம் வாழும் நாடு. தனியே கனேடியர்களை மட்டும் இந்தத் தேர்தல் இலக்கு வைக்கவில்லை. பல நாடுகளில் இருந்து கனடாவில் குடியேறியவர்களையும் திருப்திப்படுத்த வேண்டிய நிலையில் அனைத்துக் கட்சிகளும் இருக்கின்றன. அவர்களது வாக்குகள்தான் தீர்மானிக்கும் சக்தியாகவும் இருக்கின்றன.

குறிப்பாக சீனகனேடியர்கள் (சீனர்கள்), தமிழ்க் கனேடியர்கள் (ஈழத்தமிழர்கள்) மற்றும் இந்தியர்களைப் பிரதானமாகக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். தற்போது ஆட்சியிலிருக்கும் காபர் அகதிகள் விடயத்தில் கடுமையான சட்ட திட்டங்களைக் கடைப்பிடிக்கின்றார். அண்மையில் சி.49 என்கின்ற சட்டத்தைக் கொண்டு வரப் பெரும் முயற்சி எடுத்தபோதும் மற்றக் கட்சிகளின் எதிர்ப்பால் அது நிறைவேற்ற முடியாமல் போனது. அத்துடன், பல மனித உரிமைகள் அமைப்பு, அகதிகள் தொடர்பில் பணிபுரிவோர் மற்றும் கத்தோலிக்க அமைப்புக்களும் எதிர்ப்புத் தெரிவித்தபோதும் இந்த விடயத்தில் காபரின் அரசு உறுதியாக இருக்கின்றது.

அடுத்து இவர் பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தால், இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் உறுதியாகவுள்ளார். கனடாவில் அகதிக் கோரிக்கை விடுத்தவர்களின் நிலைமையில் பெரும் பாதிப்பு ஏற்படும். அத்துடன் திரும்ப மீள் இணைவும் பாதிக்கப்படும். மீள் இணைவு தற்போது குறைக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இலவச மருத்துவம், கல்வி ஊக்குவிப்பு, முதியோர் நலன், புதிய வேலை வாய்ப்பு ஏற்படுதல் போன்ற தளங்களில் மக்களுக்கு கட்சிகள் வாக்குறுதிகளை வழங்கி வருகின்றன. ஆனால், கட்சிகள் முன்வைத்த திட்டங்களை விமர்சிப்பதில் கட்சிகள் குறியாக இருக்கின்றன. பிரதானமான இரண்டு கட்சிகளின் தலைவர்களான ஜக்ளைற்றன் மற்றும் மைக்கல் இக்னாட்டிவ் ஆளும் கன்சவேட்டிவ் கட்சியின் தலைவர் ஸ்ரீபன் காபரை இலக்குவைத்தே பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## நோக்கன்

இலவச மருத்துவம் கனடாவில் இருந்து வந்தாலும் இதற்கு நிதி ஒதுக்கீடுகள் சீராக மேற்கொள்ளவில்லை என்றும் மருத்துவத் துறையை மறைமுகமாகத் தனியார் மயப்படுத்துகின்றார் ஸ்ரீபன் காபர் என்றும் குற்றம் சாட்டப்பட்டாலும் மாநில அரசுகள் தான் இதனை சீராக மேற்கொள்ளவில்லை என்றும் சொல்லப்படுகின்றது.

NDP யும் Libral (லிபரல்) லும் இணைந்து ஆட்சியைக் கைப்பற்றலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றபோதும் இதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

தமிழர்களுக்கு இந்தத் தேர்தல் ஏன் முக்கியமானது. இந்தத் தேர்தலில் இரண்டு தமிழ் வேட்பாளர்கள் நிற்கின்றனர். ராதிகா சிற்சபேசன் மற்றும் ராகவன் பரஞ்சோதி. இவர்களை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும் என்பதில் தமிழர்கள் மத்தியில் மாற்றுக் கருத்து இல்லை. இருந்தாலும் அவர்கள் சார்ந்திருக்கும் கட்சியின் கொள்கைகள் என்ற விடயத்தில்தான் தமிழர்கள் யோசிக்க வேண்டியுள்ளது. ராகவன் பரஞ்சோதி சார்ந்திருக்கும் கன்சவேட்டிவ் கட்சி அகதிகள் விடயத்தில் இறுக்கமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது. குடும்ப மீள் இணைவு வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. அண்மையில் Sun sea கப்பலில் கனடா வந்த 492 அகதிகள் விவகாரத்தை தேர்தல் விளம்பரத்துக்குப் பயன்படுத்தியதன் மூலம் அவர்களது நிலைப்பாட்டை அறியமுடிகின்றது.

(28 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.மாவட்டத்தில் டெங்கு அபாயம் உடனடி நடவடிக்கை அவசியம்

யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் ஏப்ரல் மாத நடுப்பகுதிவரை 129 டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர். இந்தக் காலப்பகுதியில் ஓர் இறப்பும் ஏற்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தற்போது மழை தொடங்கியுள்ளதால் எதிர்வரும் வாரங்களில் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கலாம்.

எனவே காலம் தாழ்த்தாது உடனடியாக டெங்குத் தடுப்பு நடவடிக்கைகளை முழு வீச்சில் முன்னெடுக்க வேண்டியது இன்றைய காலத்தின் அவசர தேவையாகும்.

டெங்குநோயை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப் பல்வேறு திணைக்களங்கள், நிறுவனங்கள், உள்ளூராட்சிமன்றங்கள், பாடசாலைகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்பு மிக அவசியம்.

**டெங்குத் தடுப்பு நடவடிக்கைகள்**

* சகல வைத்தியசாலைகளிலும் நுளம்பு பெருகும் இடங்களை அழிக்கும் சுத்திகரிப்புப் பணி இடம்பெற வேண்டும். இதற்கென சிரமதானங்கள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். (பொறுப்பு : வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி)
* சகல திணைக்கள / நிறுவன வளவுகளிலும் சிரமதான அடிப்படையில் சுத்திகரிப்புப் பணி இடம்பெற வேண்டும். (பொறுப்பு : திணைக்கள/ நிறுவனத் தலைவர்கள்)
* பொது இடங்களில் நுளம்பு பெருகும் இடங்களையும் தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களையும் துப்புரவு செய்ய வேண்டும். (பொறுப்பு: உள்ளூராட்சிமன்றச் செயலாளர்கள்)
* பிரதேச/ கிராம மட்ட டெங்குக் கட்டுப்பாட்டுக் குழுக்களைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி வாரம் ஒருமுறை மீளாய்வு செய்தல் (பொறுப்பு: பிரதேச செயலர்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள்)
* திண்மக் கழிவுகள் கிரமமாக உரிய முறையில் அகற்றப்பட வேண்டும். (பொறுப்பு - உள்ளூராட்சி மன்றச் செயலாளர்கள்)
* பாடசாலைகளில் சிரமதான அடிப்படையில் சுத்திகரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். (பொறுப்பு :பாடசாலை அதிபர்கள்)
* தனியார்கல்வி நிலையங்களிலும் டெங்கு ஒழிப்பு சுத்திகரிப்புப் பணிகள் இடம்பெற வேண்டும். (பொறுப்பு: தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள்)
* ஒவ்வொரு வீட்டிலும் நுளம்பு பெருகக் கூடிய கொள்கலன்கள் அழிக்கப்பட்டுச் சுத்திகரிப்புப் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். (பொறுப்பு: வீட்டு உரிமையாளர்கள்/ குடியிருப்பாளர்கள்)
* கிராம மட்டத்தில் நுளம்பு பெருகும் இடங்களையும் தண்ணீர் தேங்கி நிற்கும் இடங்களையும் கிராமத்தில் உள்ள பொதுமக்கள் துப்புரவு செய்ய வேண்டும். (பொறுப்பு: கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், விளையாட்டுக்கழகங்கள்)
* மேற்படி சுத்திகரிப்புப் பணிகளுக்கு ஆலோசனைகளை வழங்கிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேற்பார்வை செய்வார்கள்.(பொறுப்பு: சுகாதார வைத்திய அதிகாரிகள்)

வைத்திய கலாநிதி **ஆ.கேதீஸ்வரன்**
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

* டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வு சுகாதார வைத்திய அதிகாரிகள்/ பொதுச்சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்படும். பாடசாலைகளில் காலை ஒன்றுகூடலில் இதற்காக நேரம் ஒதுக்கப்பட வேண்டும். (பொறுப்பு : சுகாதார வைத்திய அதிகாரிகள்/ பொது சுகாதாரப் பரிசோதகர்கள்/ பாடசாலை அதிபர்கள்)
* சகல வைத்தியசாலைகளிலும் விடுதிகளில் தங்கியுள்ள நோயாளரை நுளம்புக் கடியிலிருந்து பாதுகாக்க நுளம்பு வலைகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். (பொறுப்பு : வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிகள்)
* டெங்குநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். (பொறுப்பு: உள்ளூராட்சி மன்றச் செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனங்கள்)
* பொதுச் சுகாதார பரிசோதகர்கள்/ .குடும்பநல உத்தி யோகத்தர்கள் தத்தமது பிரிவிலுள்ள வீடுகளுக்கு வீட் டுத் தரிசிப்புக்குச் செல்லும்போது நுளம்பு பெருகும் இடங் களை இனங்காட்டி அழிக்க ஆலோசனை வழங்க வேண் டும். (பொறுப்பு: பொதுசுகாதார பரிசோதகர்கள்/ குடும்ப நல உத்தியோகத்தர்கள்)
* நுளம்பு பெருகும் இடங்களுக்கு BTI (பக்ரீரியா) விசிற நடவடிக்கை எடுத்தல். (பொறுப்பு: சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்)
* யாழ்.மாவட்டத்தில் பல காணிகள் கைவிடப்பட்ட நிலையில் பராமரிப்பின்றி பற்றைக்காடுகளாகக் காட்சியளிக்கின்றன. இவற்றில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாக வாய்ப்புண்டு.

எனவே, இந்தக் காணிகளின் உரிமை யாளர்கள் அல்லது பராமரிப்புக்குப் பொறுப்பாக உள்ள வர்கள் உடனடியாக இந்தக் காணிகளில் நுளம்பு பெருகுமிடங்களை அழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறினால் உள்ளூராட்சி மன்றங்கள் பொருத்தமான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். மேற்படி நடவடிக்கைகள் யாவற்றுக்கும் தொழில் நுட்ப உதவி/ ஆலோசனைகளை வழங்குதல் (பொறுப்பு: சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள். உள்ளூராட்சி மன்றச் செயலாளர்கள்)

* தற்போது இலங்கையில் டெங்குநோயைக் கட்டுப்படுத்தக் கடுமையான புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் பெருக உடந்தையாக இருப்பவர்களுக்கு அபராதமும் சிறைத்தண்டனையும் வழங்கப்படலாம். ஆனால், நாம் சட்டத்தின் உதவியின்றி பொதுமக்களின் ஒத்துழைப்புடனேயே இங்கு டெங்குத் தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க விரும்புகிறோம்.

ஆனால், இதற்கு ஒத் துழைப்பு வழங்காது டெங்கு நோய் பரவ உடந்தையாக இருப்பின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். (பொறுப்பு: சுகாதார வைத்திய அதிகாரிகள்).

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயைத் தடுக்க அனைவரது ஒத்துழைப்பும் மிக அவசியம்.

# இளவரசர் வில்லியம் திருமணத்தில் ஈடுபாடு காட்டாத பிரி. மக்கள்

லண்டன், ஏப். 29

பொருளாதார நெருக்கடி காரணமாக, பிரிட்டனில் ஆயிரக்கணக்கான பேர் தங்கள் வேலைகளை இழந்துள்ளனர். இந்த நிலையில், நடக்கவுள்ள இளவரசர் வில்லியம் திருமணத்தில் பிரிட்டிஷ் மக்கள் அதிகளவில் ஈடுபாடு காட்டவில்லை.

பிரிட்டிஷ் அரச குடும்ப திருமணங்களைப் பொறுத்தவரை உலகப் போர், பொருளாதார நெருக்கடி என்பன போன்ற ஒருவித நெருக்கடி காலகட்டங்களிலேயே நடந்திருக்கின்றன.

இளவரசர் வில்லியமின் திருமணமும் இதற்கு விதிவிலக்கல்ல. பிரிட்டன் தற்போது பொருளாதார நெருக்கடியில் உள்ளது. இந்த மந்தத்தால் அங்கு ஆயிரக் கணக்கானோர் தங்கள் வேலையை இழந்துவிட்டனர்.

பெற்றோல் விலை அதிகரித்துள்ளது. பிரிட்டன் பணமான 'பவுண்ட்'டின் நிலை பலவீனமாக இருக்கிறது என பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

பிரிட்டிஷ் மக்களின் மனநிலை வேறு விதமாக உள்ளது. இவ்வளவு பொருளாதார நெருக்கடியில் இப்படி ஆடம்பரமாக திருமணம் நடத்த வேண்டுமா என்று அவர்கள் கோபத்தில் உள்ளனர்.

அதனால், அவர்கள் திருமண விருந்தில் கலந்துகொள்ள விரும்பவில்லை என்றும், அரச பரம்பரை நீடிப்பதை விரும்பவில்லை என்றும் கூறப்படுகிறது.

திருமணத்திற்கு ஆகும் செல்வம் அனைத்தையும் அரச குடும்பமும், மணமகள் கதே மிடில்டன் குடும்பமும் பகிர்ந்துகொள்ளும் என்று பக்கிங்ஹாம் அரண்மனை சமீபத்தில் குறிப்பிட்டிருந்தது.

திருமணத்திற்கான பாதுகாப்பு ஏற்பாடு உள்ளிட்ட சிலவற்றுக்கு மட்டும் அரசு செலவழிக்கும் என்று தெளிவாக்கப்பட்டிருந்தது.

சமீபத்தில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில், 35 சதவீதம் பேர் அவரவர் வீடுகளில் தொலைக்காட்சி மூலம் திருமணத்தைப் பார்க்கப் போகின்றனர் என்றும் 35 சதவீதம் பேர் திருமணத்தைப் புறக்கணிக்கப் போகின்றனர் என்றும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



ஐ.நா. சபையின் தலைமையகத்திற்கு வந்திருந்த ஜெர்மன் பாதுகாப்புத்துறை அமைச்சர் தாமஸ் மைஸிரியா (இடது), ஐ.நா.பொதுச்செயலாளர் பான்-கீமூனை, சந்தித்து பேசினார்

# விமானி துப்பாக்கிப் பிரயோகம் ஆப்கானில் 8 சிப்பாய்கள் பலி!

காபூல், ஏப். 29

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள விமான நிலையத்தில், ஆப்கான் விமானப் படை விமானி ஒருவர் துப்பாக்கியால் சுட்டதில், 'நேட்டோ' படையைச்சேர்ந்த எட்டு பேர் பலியாயினர். இச்சம்பவம் குறித்து குழப்பமான அறிக்கைகள் வெளியாகியுள்ளன.

காபூல் சர்வதேச விமான நிலையத்தின் ஒரு பகுதியில், ஆப்கான் விமானப் படைப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இங்கு, அமெரிக்கா, ஆப்கான் ஆகிய நாடுகளின் இராணுவ அதிகாரிகள் கூட்டம் புதன்கிழமை நடந்துகொண்டிருந்தது.

அப்போது, ஆப்கான் விமானப் படை விமானி ஒருவர் தன் கையிலுள்ள துப்பாக்கியால், 'நேட்டோ' படைச் சிப்பாய்களை நோக்கிச் சுட்டதில், எட்டுப் பேர் பலியாகினர். இதுகுறித்து ஆப்கான் பாதுகாப்பு அமைச்சகம், விமானிக்கும், 'நேட்டோ' சிப்பாய்களுக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதால் இச்சம்பவம் நிகழ்ந்தது எனக் கூறியுள்ளது.

'நேட்டோ' வெளியிட்ட அறிக்கையில், 'நேட்டோ'வைச் சேர்ந்த எட்டு பேர் பலியாகியுள்ளனர் என்று மட்டும் கூறப்பட்டுள்ளது. அவர்கள் எந்த நாட்டவர் என்று வெளியிடப்படவில்லை.

# அல்-குவைதா ஆள்சேர்க்கும் மசூதிகள்: அமெரிக்க பென்டகன் கண்டுபிடிப்பு

**விக்கிலீக்ஸ் - இணையம் தகவல்**

மான்ட்ரீல், ஏப். 29

உலகத்தையே நடுநடுங்கச் செய்யும் அல்-குவைதா அமைப்பினர் தங்களுக்குத் தேவையான தீவிரவாதிகளைத் தேர்வு செய்யும் மசூதிகள் பட்டியலை அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகன் கண்டறிந்துள்ளது.

இத்தகவலை 'விக்கிலீக்ஸ்' இணைய தளம் வெளியிட்டுள்ளது.

ஆப்கனிஸ்தானிலும், பாகிஸ்தானின் சில பகுதிகளிலும் வலுவான தளத்தைக் கொண்டுள்ள அல்-குவைதா தீவிரவாதிகள் உலகையே அச்சுறுத்தும் வகையில் நாச வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கனடாவின் மான்ட்ரீல் நகரிலிருந்து கராச்சி வரையில் மசூதிகள், இஸ்லாமிய மையங்கள் ஆகியவற்றில் அல்-குவைதா அமைப்புக்கு ஆள் சேர்க்கும் இடங்களின் பட்டியலை பென்டகன் தயாரித்துள்ளது.

இந்தப் பட்டியலில் கியூபாவிலுள்ள குவாந்தநாமோ வளைகுடா, மான்ட்ரீலிலுள்ள அல்-சுனா மசூதி, கராச்சியிலுள்ள அபு பகிர் சர்வதேச பல்கலைக்கழகம், யேமனிலுள்ள திமஜ் மையம், வடக்கு லண்டனிலுள்ள பின்ஸ்புரி பூங்கா மசூதி, இத்தாலியின் மிலன் நகரிலுள்ள மசூதி, பிரான்ஸின் லியோன் நகரிலுள்ள லினெக் மையம், காபூலிலுள்ள வாஸிர் அக்பர் கான் மசூதி ஆகியவற்றில் அல்-குவைதா அமைப்புக்கு ஆட்சேர்ப்பு நடைபெற்றது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அல்-குவைதா அமைப்பினர் தங்களது மையத்தைப் பயன்படுத்தினர் எனக் கூறப்படுவதை பிரான்ஸிலுள்ள லெனக் மைய காப்பாளர் மறுத்துள்ளார். சிறந்த நன்னடத்தையுடன் செயல்படுவதால் உலகிலேயே மிகவும் பிரபலமாக இந்த மையம் விளங்குகிறது.

அப்படியிருக்கும்போது இதுபோன்ற முட்டாள்தனமான செயல்களில் இந்த மையம் ஈடுபடுமா என்று அந்த மையத்தின் காப்பாளர் காமெல் கப்டானே வெளியிட்ட அறிக்கையில் மறுத்துள்ளார்.

இது தொடர்பாக அமெரிக்காவுக்கான பிரான்ஸ் தூதரிடம் தங்களது கண்டனத் தைத் தெரிவித்துள்ளார் என்றும் அவர் கூறினார்.

**பெயர் மாற்றம்**

புத்தூர் கிழக்கு புத்தூரைச் சேர்ந்த திருமதி.மகேஸ்வரி மேகநாதன் ஆகிய நான் இன்றில் (29.04.2011) இருந்து எனது பெயரை திருமதி சரஸ்வதி மேகநாதன் எனப் பெயர் மாற்றி உள்ளேன் என்பதை சகலருக்கும் அறியத்தருகின் றேன்.

திருமதி.மே.சரஸ்வதி

**உடன் விற்பனைக்கு**

TOSHIBA-181 போட்டோக் கொப்பி இயந்திரம் உத்தரவாதத்துடன் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0775925096

**சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆண்டுப் பொதுக்கூட்டம்-2011**

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் 30.04.2011 ஆம் நாள் நடைபெறவிருந்த ஆண்டுப்பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற் போடப்பட்டுள்ளது. பொதுக்கூட்ட நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி. — செயலாளர்.

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2218 திகதி 27-04-2011

ஆங்கில எழுத்திற்கும்: O

வெற்றி எண்கள்: 37 48 65 67

போனஸ் இல: 32

ஜக்பொட் பரிசு ரூ. 21,625,700/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 191453 | 20/- | 3,829,060/- |
| 2 இல | 13673 | 100/- | 1,367,300/- |
| 3 இல | 268 | 1,000/- | 268,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7800 | 40/- | 312,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 572 | 1,000/- | 572,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 22 | 10,000/- | 220,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 21,625,700/- | - |
| 1 இல + போனஸ் இல | 9078 | 100/- | 907,800/- |
| 2 இல + போனஸ் இல | 430 | 500/- | 215,000/- |
| 3 இல + போனஸ் இல | 04 | 100,000/- | 400,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 369 | 200/- | 73,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 09 | 1,500/- | 13,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| மொத்தம் | | | 9,328,460/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 223690 | | 9,928,460/- |

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 203087631-3-30 |
| கம்பஹா | 203093802-4-25 |
| குருநாகல் | 203079929-9-26 |
| திருகோணமலை | 203092614-1-22 |
| கொழும்பு | 203100398-6-37 |
| அம்பாந்தோட்டை | 203081924-8-27 |
| குருநாகல் | 203078984-3-02 |
| புத்தளம் | 203079897-3-26 |
| மாத்தறை | 203081293-0-39 |
| மட்டக்களப்பு | 203084535-4-22 |

வரும் சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு

ரூ. 22,148,500/-

பச்சை நிற டிக்கட்டுகள் 2011 ஏப்ரல் 30 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் ப்லேஸ், கொழும்பு - 02
தொ.பே 2333546/7

**4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

அமரர் செல்வராசா றஜீவர்மன்



தாயின் மடியில் 17.01.1982
ஆண்டவன் அடியில் 29.04.2007

அன்பெனும் அரங்கேற்றி
பண்புடனே வாழ்ந்த உத்தமனே
உன் கனிவான பார்வையும்
கள்ளமில்லா பேச்சும்
எம் கண் முன்னே நின்று
திண்டாடுதே
மும்மூர்த்திகளால் நீ நிகழ்ந்தாய்
நான்கு ஆண்டுகள் கடந்தாலும்
ஆறவில்லை எம் துயரம்!

உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல கற்பக விநாயகப் பெருமானை
வேண்டுகின்றோம்

ஆவரங்கால் கிழக்கு,
புத்தூர். — குடும்பத்தினர்

**யாழ்.மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)**

**பதவி வெற்றிடம்**

மேற்படி எமது சங்கத்துக்கு கீழ் குறிப்பிடப்படும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01\. I. பதவி: - காவலாளி

பதவி இலக்கமும்/ சம்பளக் குறியீடும்
315 : 17 8950 - 10300 / 65x10 - 70x10

II\. பதவி :- தொழிலாளி

318 : 17 8950 - 10300 / 65x10 - 70x10

02\. தகைமைகள்:- (இருபதவிகளுக்கும்) எட்டாம் (08) வகுப்புச் சித்தியும், நல்ல தேகாரோக்கியமும்இருத்தல் வேண்டும்.

03\. பிறதகைமைகள்:- (இருபதவிகளுக்கும்) (அ) சித்த மருந்துகள் தொடர்பான அனுபவமும் இருத்தல் வேண்டும்.
(ஆ) கூட்டுறவுப் பயிற்சி பெற்றிருப்பது விரும்பத்தக்கது.

04\. வயதெல்லை :- (இருபதவிகளுக்கும்) 18-45 (31:97 சுற்றறிக்கைக் கமைய சங்கப் பணியாளர்களுக்கு, வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது) சங்கப் பணியாளர்கள் தங்கள் சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

05\. பிணை தொடர்பானது :- ரொக்கம்.

06\. விண்ணப்ப முடிவு திகதி:- 14.05.2011

07\. விண்ணப்பப் படிவங்கள் யாவும், எமது அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பங்கள் தலைவர், யாழ். மாவட்ட சித்த மருந்துகள் உற்பத்தி விற்பனவு வைத்திய சேவைக் கூட்டுறவுச் சங்கம் காங்கேசன் துறை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்னும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்,
யா.மா.சி.ம.உ.வி.வை.சே.கூ.சங்கம்

(3616)-43-22-24)

# ஜனநாயகம் மலராவிட்டால் சிரியாவில் புரட்சி வெடிக்கும்

## எதிர்க்கட்சிகள் எச்சரிக்கை

டமாஸ்கஸ், ஏப். 29

"சிரிய ஜனாதிபதி அசாத், ஜனநாயகத்துக்கு நாட்டை அழைத்துச் செல்லாவிட்டால், சமுதாயத்தின் அடிமட்டத்திலிருந்து வெடிக்கும் புரட்சி அவரது ஆட்சியைத் தகர்த்துவிடும்'' என சிரிய எதிர்க்கட்சிகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல்-அசாத் உடனடியாக பதவி விலகக் கோரி, கடந்த ஆறு வாரங்களாக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எதிர்க்கட்சிகள் அனைத்தும், 'மாற்றத்திற்கான தேசிய துவக்கம்' என்ற பெயரில் இணைந்துள்ளன.

இக்கூட்டமைப்பின் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:

வன்முறை, குழப்பம், உள்நாட்டுப் போர் ஆகியவற்றிலிருந்து ஜனநாயக மாற்றமே நாட்டைக் காக்கும். இந்த மாற்றத்தைச் செய்தவர் என்று வரலாற்றில் ஜனாதிபதி அசாத் தன்னை பதிவு செய்து கொள்ளவில்லை என்றால் டுனிஷியர்கள், எகிப்தியர்கள், லிபியர்கள் ஆகியோர் வழியில் சிரியர்களும் நடப்பதைத் தவிர வேறு வழியே இல்லை.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

டரா, டமாஸ்கஸ், டவுமா, பனியாஸ் என பல்வேறு நகரங்களில் சிரிய அரசு, இராணுவத்தைக் குவித்து வருகிறது. இதில் பீரங்கிப் படையும் அடக்கம். பஸ்கள், லொறிகள் ஆகியவற்றின் மூலம் அழைத்து வரப்பட்ட இராணுவச் சிப்பாய்கள் டரா, டவுமா நகர்களில் குவிக்கப்பட்டுள்ளனர். ஜனாதிபதி அசாத்தின் சகோதரர் மஹர் தலைமையில் இயங்கிவரும் ஆயுத பாணிகளான ஒரு இராணுவப் பிரிவு, டரா நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆறு வார காலப் போராட்டத்தில் 453 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகளுக்கான சிரியா கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஐ.நாவின் மனித உரிமைகள் அமைப்பு, சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நாளை கூடி, சிரிய அரசின் வன்முறையைத் தடுப்பது குறித்து ஆலோசிக்க உள்ளது.

# நீண்டகால சர்ச்சைக்கு ஒபாமா முற்றுப்புள்ளி

வாஷிங்டன், ஏப். 29

நீண்ட கால சர்ச்சைக்குப் பின்னர் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தன்னுடைய பிறந்த இடம் குறித்த தகவலை அளித்துள்ளார்.

2008ஆம் ஆண்டில் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கான தேர்தலில் குடியரசுக்கட்சிச் சார்பில் போட்டியிட்டார். அப்போது இவரின் பிறப்பு, இருப்பிடம் ஆகியவை குறித்து சர்ச்சை எழுந்தது.

இருப்பினும் தேர்தலில் அமோகமாக வெற்றி பெற்று ஜனாதிபதி பதவியில் அமர்ந்தார். இருப்பினும், எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியினர் ஜனாதிபதி குறித்து சந்தேகங்கள் எழுப்பி வந்தனர்.

எதிர்வரும் 2012ஆம் ஆண்டு நடைபெற உள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிட முடிவு செய்துள்ள ஒபாமா தன்னுடைய பிறந்த இடம் குறித்த சான்றிதழை வெளியிட்டார்.

அதில் ஹவாய் தீவின் ஹோனோலு நகரில் 1961ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதி பிறந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் எதிர்க்கட்சிகளின் போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது என வெள்ளை மாளிகையின் தகவல் தொடர்பு இயக்குநர் டான் பெபியர் தெரிவித்தார்.

ஜனாதிபதி பதவி, துணை ஜனாதிபதி பதவி ஆகியவற்றுக்குப் போட்டியிடுவோர் அமெரிக்கப் பிரஜைகளாக இருக்க வேண்டும் என்பது நியதியாகும்.

# இராணுவ பஸ் குண்டுவைத்து தகர்ப்பு; பாகிஸ்தானில் சிப்பாய்கள் பலர் மரணம்

கராச்சி, ஏப். 29


பாகிஸ்தானில் செவ்வாய்க்கிழமை இராணுவ பஸ் ஒன்றை தீவிரவாதிகள் குண்டு வைத்து தகர்த்தனர். இதில் 6 பேர் பலியானார்கள். நேற்று வியாழக்கிழமை மேலும் ஒரு இராணுவ பஸ்ஸை தீவிரவாதிகள் குண்டு வைத்து தகர்த்துள்ளனர்.

பாகிஸ்தானிலுள்ள துறைமுக நகரமான கராச்சியிலிருந்து இராணுவ அதிகாரிகளை ஏற்றிக்கொண்டு பஸ் ஒன்று சென்றது. அப்போது அந்த பஸ்ஸில் சக்திவாய்ந்த குண்டு வெடித்தது.

இதில் பஸ்ஸிலிருந்த இராணுவ அதிகாரிகள் தூக்கி வீசப்பட்டனர். பஸ்ஸில் பயணம் செய்த ஏராளமான சிப்பாய்கள் பலியாகிவிட்டனர்.

அவர்கள் எத்தனை பேர் என்ற விவரம் உடனடியாக தெரியவில்லை. 2 பேர் மட்டும் இறந்து இருக்கின்றனர் என முதல் கட்ட தகவல் தெரிவிப்பதாக பொலிஸார் தெரிவித்தனர்.

15இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அவர்களில் பலருடைய நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இந்த குண்டு வெடிப்பால் கராச்சியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.



மான்டினிஜிரின் நாட்டுக்கு வந்திருந்த செக் குடியரசு நாட்டின் அதிபர் வக்லேவ்க்ளவுஸ்(இடது) அந்த நாட்டு பிரதமர் ஈகோர்லுக்ஸிக்கை, போட்கோரிகா நகரில் சந்தித்து பேசினார்.

# கனடாவில் வெள்ள அபாய எச்சரிக்கை

சில ஆறுகளில் பெருக்கெடுத்து ஓடுவதால் கனடா மணிடோபா மாகாணத்திற்கு வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

அருகில் உள்ள சாஸ்க் கட்ச்வான் பகுதியிலும் வெள்ள நீர் ஊடுருவும் நிலை உள்ளது. மணிடோபா மாகாண அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்தனர்.

கியூ அபெல்லே ஆறு, அசினிபோய்னே ஆறு மற்றும் சோரிஸ் ஒட்டிய பகுதிகளில் வெள்ள நீர் புகும் அபாயம் உள்ளது. லேடெலிவர் அருகே ரெட் ஆறு நீர் மட்டம் 784.15 அடியை எட்டும் என எதிர்பார்க்கப்பட்டது. சாஸ்க் கட்ச் வான் பகுதியிலும் வெள்ள முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. (ம)

# திபெத்தின் புதிய பிரதமராக லோப்சங் சங்காய் தேர்வு

திபெத்தின் புதிய பிரதமராக லோப்சங் சங்காய் தேர்ந்தெடுக்கப்பட்டார். திபெத்தின் புதிய பிரதமரைத் தேர்ந்தெடுக்க கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி தேர்தல் நடந்தது.

இந்தத் தேர்தலில் திபெத்தில் உள்ளவர்கள் மட்டுமல்லாமல் இந்தியா, பூட்டான், நேபாளம், ஜப்பான், ரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகள், ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றில் உள்ள திபெத்தியர்கள் வாக்களித்தனர். இதில் 43 வயதான லோப்சங் சங்காய் 8,646 வாக்குகள் கூடுதலாகப் பெற்று புதிய பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட தெதாங் டென்சின் 18,405 வாக்குகள் மட்டுமே பெற்றார்.

மொத்தம் உள்ள 49,189 வாக்குகளில் 55 சதவீத வாக்குகளே இந்தத் தேர்தலில் பதிவாகின. இதை திபெத் தேர்தல் ஆணையாளர் புதன்கிழமை அறிவித்தார்.

# இன்று இளவரசர் திருமணம் லண்டனில் விடுமுறை அறிவிப்பு

பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம்ஸ் - கதே மிடில்டன் ஆகியோரது திருமணம் இன்று 29 ஆம் திகதி காலை 11 மணிக்கு (இலங்கை நேரப்படி பிற்பகல் 3.30 மணி) லண்டனிலுள்ள பாரம்பரிய வெஸ்ட் மின்ஸ்டர் அபே எனும் தேவாலயத்தில் விமரிசையாக நடக்கிறது.

திருமணத்தன்று லண்டனில் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திருமணம் தொலைக்காட்சி, இணையதளம் ஆகியவற்றில் ஒளிபரப்பப்படுகிறது.

**வில்லியம்:** வில்லியம்ஸ் ஆர்தர் பிலிப் லூயிஸ்- பிரிட்டிஷ் இராணி இரண்டாம் எலிசபெத்தின் பேரனும், இளவரசர் சாள்ஸ் - மறைந்த இளவரசி டயானா ஆகியோரது மூத்த புதல்வருமாவார். இவர் 1982, ஜூன் 21இல் பிறந்தார்.

வில்லியம்ஸின் இளைய சகோதரர் ஹென்றி சார்லஸ் ஆல்பர்ட்ஹாரி. 1991ஆம் ஆண்டு முதன் முதலாக வில்லியம்ஸ் மக்களின் பார்வையில் வந்தார்.

**மிடில்டன்:**

பிரிட்டனில் பெர்க்ஷையர் எனும் இடத்தில் கதே மிடில்டன் 1982, ஜனவரி 9ஆம் திகதி பிறந்தார்.

இவரது முழுப்பெயர் கேத்தரீன் எலிசபெத் மிடில்டன். இவர் 'அழகான ஆடை அணிபவர்' என்ற பட்டியலில் இடம்பெற்றவர்.

**கனிந்து காதல்:**

ஸ்கொட்லாந்திலுள்ள புனித ஆன்ட்ரஸ் பல்கலைக்கழகத்தில் 2001ஆம் ஆண்டு வில்லியம்ஸ் - மிடில்டன் இடையே ஏற்பட்ட பழக்கம், காதலாகக் கனிந்து, தற்போது திருமணத்தில் முடிந்துள்ளது.

அறிவிக்கப்படாத காதலர்களாக இருந்த இவர்களுக்கு கடந்தாண்டு நவம்பர் 16ஆம் திகதி நிச்சய தார்த்தம் நடந்தது. அப்போது மிடில்டனுக்கு வில்லியம்ஸ் அணிவித்த மோதிரம், வில்லியம்ஸின் தந்தை சாள்ஸ், மனைவி டயானாவுக்கு அணிவித்தது.

**முக்கிய தகவல்கள்:**

✱ அபுதாபி, சூடான், ஜப்பான், மலேசியா, தாய்லாந்து உள்ளிட்ட 40 நாடுகளின் மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களும், 1,900இற்கும் மேற்பட்ட வி.ஐ.பிக்களும் கலந்து கொள்கின்றனர். பாதுகாப்புக் காரணங்களுக்காக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு அழைப்பு விடுக்கப்பட வில்லை. இருப்பினும் மே மாதம் பிரிட்டன் செல்லும் ஒபாமா, மணமக்களை சந்திப்பார்.

✱ திருமணத்துக்கு அளிக்கப்படும் பரிசுப் பொருள்களை, 26 விதமான தொண்டு நிறுவனங்களுக்கு வழங்குமாறு வில்லியம்ஸ் - மிடில்டன் கேட்டுக்கொண்டுள்ளனர்.

✱ திருமணம் நடைபெறும் வெஸ்ட் மின்ஸ்டர் அபே தேவாலயம், பக்கிம்ஹாம் அரண்மனை உட்பட திருமண நிகழ்ச்சியின் பாதுகாப்புக்காக 90 கோடி ரூபா செலவிடப்படுகிறது.

✱ மறைந்த தாய் டயானாவின் தொண்டு நிறுவனங்களின் மூலம் பாதுகாக்கப்பட்ட சிலரை, தனி விருப்பத்தின் மூலம் திருமணத்துக்கு வில்லியம்ஸ் அழைத்துள்ளார்.

✱ உலக மக்கள் தொகையின் நான்கில் ஒரு பகுதி பேர், இத்திருமணத்தை கண்டு களிப்பர் என மதிப்பிடப்பட்டுள்ளது.

✱ பிரிட்டிஷ் இளவரசிகளிலேயே மிடில்டன் தான் அதிக வயதில் (வயது - 29 வயது) திருமணம் செய்பவர். மறைந்த இளவரசி டயானா ( வயது - 20) குறைந்த வயதில் திருமணம் செய்தவர் ஆவார்.

✱ நியூசிலாந்தில் செப்ரெம்பர் மாதம் 'ரக்பி உலகக் கிண்ணம்' தொடர் நடக்கிறது. இந்தப் போட்டி அமைப்பாளர்கள், மணமக்களை 'தேனிலவுக்கு' நியூசிலாந்துக்கு அழைத்துள்ளனர்.

✱ மிடில்டன் 2002இல் படிக்கும்போது, 'கேட் வாக்'கின் போது, 'கர்லோட் டாட்' ஆடை அணிந்து பங்கேற்றார். இந்த ஆடை 75 ஆயிரம் மில்லியன் டொலர் ரூபாவுக்கு ஏலம் போனது.

✱ திருமணத்தை முன்னிட்டு அழகு சாதன பொருள்கள், ஆல்கஹால், பார்ட்டிக்குத் தேவையான பொருள்கள் உள்ளிட்ட பொருள்களின் மூலம் பிரிட்டன் முழுவதும் உள்ள வியாபாரிகளுக்கு சுமார் 2 ஆயிரம் கோடி ரூபாவுக்கு வருமானம் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பயணிகள் 6 லட்சம் பேர் லண்டன் வருவர் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

# ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் பிரதமர் அலுவலகம் மெத்தனமாக செயற்பட்டதாகக் குற்றச்சாட்டு

ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரத்தில் பிரதமர் அலுவலகம் மெத்தனமாக செயற்பட்டதாக முரளி மனோகர் ஜோஷி தலைமையிலான நாடாளுமன்ற பொதுக்கணக்குக் குழு தனது வரைவு அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளது.

ஸ்பெக்ட்ரம் ஏல விற்பனைக்கு முன்னதாக, மூத்த அமைச்சர்களை ஆலோசிக்கும்படி அப் போதைய அமைச்சர் ஆ. ராசாவுக்கு கடிதம் அனுப்பு வதில் பிரதமர் அலுவலகம் தாமதம் செய்ததாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் அலுவலகம் உரிய கவனத்துடன் செயற்பட்டிருந்தால், ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் ராசா செய்த தவறுகளையும், முறைகேடுகளை யும் தவிர்த்து, நட்டம் ஏற்படாத வண்ணம் காப்பாற்றி இருக்க முடியும் என்று நாடாளுமன்றத்தின் பொதுக்கணக்குக் குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தத் தகவல் வெளியானதால், ஏற்கனவே இந்த வழக்கின் குற்றப்பத்திரிகையில் கனிமொழி பெயர் இடம் பெற்றுள்ளது. அதனால் நெருக்கடி யில் உள்ள தி.மு.க.வுக்கு மேலும் சிக்கலை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. 2ஜி முறைகேடு தொடர்பாக சி.ஏ.ஜி. கூறியுள்ள தகவல்கள் சரிதான் என்றும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், ஆ. ராசா உரிய நடைமுறை க ளைப் பின்பற்றாமல் மிகக் குறைந்த விலைக்கு 2ஜி அலைக்கற்றையை தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கியதாகவும் பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை ஸ்பெக்ட்ரம் ஊழல் குறித்து விசாரணை மேற்கொண்டு வந்த பொதுக்கணக்குக் குழுவின் தலைவர் முரளிமனோகர் ஜோஷி, தனது விசாரணை அறிக்கையின் இறுதி நகலை, குழு வின் உறுப்பினர்களுக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது. இதையடுத்து, அதில் உள்ள விவரங்கள் நேற்று முன்தினம் டில்லியில் வெளியாகி பரபரப்பை எழுப்பியுள்ளன. இந்த அறிக்கை இன்ன மும் இறுதி செய்யப்படாவிட்டாலும் இதில் உள்ள விவரங்கள் தி.மு.க.,வுக்கும், மத்தியில் ஆளும் அரசுக்கும் கெட்ட பெயரை அதிகரிக்கச் செய் யும். மொத்தம் 270 பக்கங்களைக் கொண்ட அந்த அறிக்கை நகலின் ஒரு சில பக்கங்கள் மட்டுமே வெளியாகியுள்ளன. இது ரகசியமாகக் கசிந்திருக் கிறது. இந்த நிலையில், அவற்றில் தொழிலதிபர் ரத்தன் டாடா குறித்து மிகவும் கடுமையான விமர் சனங்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக, தனக்குச் சாதகமாகச் செயற்பட்ட ராசாவைப் புகழ்ந்து, தமிழக முதல்வர் கருணாநிதிக்கு எழுதிய கடிதம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம், கார்ப்பரேட் நிறுவனங்கள் எந்தளவுக்கு அமைச் சரவை இலாகா ஒதுக்கீடுகளில் ஆர்வம் காட்டுகின் றன என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஸ்பெக்ட்ரம் உரிமத்தை விற்கும் விடயம் தொடர் பாகப் பிரதமர் அலுவலகத்துக்கும், தொலைத் தொடர்பு இலாகாவுக்கும் இடையில் நடைபெற்ற தகவல் பரிமாற்றங்களில் முக்கிய தவறுகள் நடை பெற்றுள்ளன.

முக்கிய தகவல்களைப் பிரதமர் அலுவலக அதிகாரிகள், பிரதமரிடம் தெரிவிக்காமல் தாமதப் படுத்தியுள்ளனர். ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டை எவ்வாறு மேற்கொள்ளப்போகிறேன் என்பது குறித்து பிரதமருக்கு ராசா எழுதிய கடிதத்தை, பிரதமரின் கவனத்துக்கு உடனடியாகக் கொண்டு செல்ல, பிரதமர் அலுவலகம் தவறியுள்ளது.

இதனால், நடைபெறும் சம்பவங்கள் அனைத்தையும் பிரதமர் வெறுமனே வேடிக்கை பார்க்க வேண்டிய நிலை இருந்துள்ளது. தவறைத் தடுத்து நிறுத்தத் தவறியதன் மூலம், ராசாவின் தவறான நடவடிக்கைக்கு பிரதமரும் மறைமுகமாகத் துணை போய் இருப்பதாகக் கருத வேண்டியுள்ளது.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## மேற்கு வங்கத்தில் 3ஆம் கட்டத் தேர்தல்; 80% வாக்குகள் பதிவாகின

கொல்கத்தா, ஏப்.29

மேற்கு வங்க மாநிலத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலின் மூன்றாவது கட்டத் தேர்தல் வாக் கெடுப்பில் 80 சதவீதமான வாக்குகள் பதிவாகியுள்ளன என்று தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்கு வங்க மாநில சட்டசபைத் தேர்தல் 5 கட்டங்களாக நடைபெறுகிறது. அதில் 3ஆவது கட்டத் தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. வடக்கு 24 பர்கான மாவட்டம்,தெற்கு 24 பர்கானா மாவட்டம், கல்கத்தா மாவட்டம் என மூன்று மாவட்டங்கள் உட்பட்ட 75 தொகுதிகளில் தேர்தல் நடைபெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தலில் மொத்தம் 479 வேட்பாளர்கள் களத்தில் நின்றிருந்தனர். (வ)



மத்திய ரயில்வே அமைச்சரும், திரணமுல் காங். தலைவருமான மம்தா, கல்கத்தாவில் உள்ள வாக்குச் சாவடியில் தனது வாக்கைப் பதிவு செய்துவிட்டுத் திரும்பும் போது தன்னைப் பார்த்து வணக்கம் செய்தவர்களுக்கு, பதில் வணக்கம் செலுத்துகிறார். (வ)

## சாயி அறக்கட்டளைச் செயற்பாடுகளை ஆந்திர மாநில அரசு கண்காணிக்க முடிவு

குறுக்கீடுகள் ஏதுமின்றி, சிறிது காலம் வரை சாயி அறக் கட்டளைச் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கு ஆந்திர மாநில அரசு முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

நேற்று முன்தினம் நடைபெற்ற சத்திய சாயி பாபாவின் இறுதிச் சடங்கில் பங்கேற்கச் சென்ற ஆந்திர மாநில ஆளுநர் இ.எஸ்.எல். நரசிம்மன், முதல்வர் என். கிரண்குமார் ரெட்டி ஆகியோர், சாயி அறக்கட்டளை நிர்வாகிகள் சிலரை தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேசியுள்ளனர். அறக்கட்டளை நிர்வாகச் செயற்பாடுகளில் எந்தவித பிரச்சினையும் எழாதவரை, அதன் நடவடிக்கைகளில் மாநில அரசு தலையிடாது. நடை முறைக்கு மாறாக ஏதேனும் நடைபெற்றால், அதில் தலையிடுவதைத் தவிர அரசுக்கு வேறு வழியில்லை என்று கூறியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலையில், 40 ஆயிரம் கோடி ரூபா மதிப்புள்ள சொத்துகளை கொண்ட அறக்கட்டளையின் தலைமைப் பொறுப்பை ஏற்பதில், அதன் உறுப்பினரான முன்னாள் நீதிபதி பி.என். பகவதி, கணக்காளர் இந்துலால் ஷா ஆகியோர் ஆர்வம் காட்டவில்லை எனத் தெரிய வந்துள்ளது.

பாபாவின் தம்பி ஜானகிராமனின் மகன் ரத்னாகர், அறக்கட்டளைத் தலைமை பொறுப்புக்கான பரிசீலனையில் முதலிடத்தில் உள்ளார். டிவிஎஸ் குழுமத்தை சேர்ந்த வேணு சீனிவாசனும் இந்த வரிசையில் இருக்கிறார். தற்போதைக்கு செயலாளர் கே.சக்கரவர்த்தி அறக்கட்டளையை வழி நடத்துவார் என்றும் பாபாவின் 11 ஆவது நாள் காரியங்களுக்குப் பிறகு கூடும் அறங்காவலர்கள் குழுக் கூட்டத்தில் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

வீடு கட்டுதல், மாடி வீடு கட்டுதல், கட்டடங்கள் கட்டுதல் என்பன குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.

**KASTURI CONSTRUCTION**

அழையுங்கள்: 0773836123

(3608)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா கொம்பனி உத்தரவாதத்துடன் தரமான பிறிமா No. 1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (80/=) 05.05.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவுசெய்யவும்.

★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு - 0776904590
★ முகுந்தன், பருத்தித்துறை - 0771392593

இறைச்சிக் கோழிகள் திருப்பிக் கொள்வனவு செய்யப்படும்.

**நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர்,** தொ.பே இல:- 021 222 6944.

(3602)

### உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 604
திகதி 27/04/2011

சுப்பர் இலக்கம்: 03

வெல்லப்பட்ட இலக்கங்கள்: 04 21 54 57

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிபெற்றவர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் நான்கு இலக்கங்கள் சரியாயின் | ரூ. 12,668,810.40 | - |
| முதலாம் பரிசு | நான்கு இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 1,000,000.00 | - |
| இரண்டாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 3 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 50,000.00 | 11 |
| மூன்றாம் பரிசு | 3 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 2,000.00 | 229 |
| நான்காம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 2 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 1,000.00 | 463 |
| ஐந்தாம் பரிசு | 2 இலக்கங்கள் சரியா இருப்பின் | ரூ. 100.00 | 11708 |
| ஆறாம் பரிசு | சுப்பர் இலக்கம் மற்றும் 1 இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 40.00 | 6848 |
| ஏழாம் பரிசு | 1 இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 20.00 | 168438 |
| எட்டாவது பரிசு | சுப்பர் இலக்கம் சரியா இருப்பின் | ரூ. 20.00 | 26951 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள பரிசுத்தொகை ரூ. 6,823,500.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்பு திகதியில் இருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிசட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு 13,280,922.40

தேசிய லொத்தர் சபை
இணையத்தளம் - WWW.nlb.lk

**தவறிவிட்டது**

சிவகுரு வீதி, ஏழாலை மத்தி, ஏழாலை எனும் முகவரியைச் சேர்ந்த கார்த்திகேசு நவநீதராஜா என்பவரது தேசிய அடையாள அட்டை (702520134V), வாகன அனுமதிப் பத்திரம், மோட்டார் சைக்கிள் வரிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பன அடங்கிய கறுப்பு நிற பேர்ஸ் 26.04.2011 அன்று சுன்னாகத்துக்கும் ஏழாலைக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உதவவும்.

(3598) தொ.பே: 021 3209267, 0776165299

**NET CABS**

நெற் கப்ஸ் சேவை.

அழையுங்கள்:
021-3202202 அல்லது
077-5934168.

திருமண கார், வான்கள் மிகவும் குறைந்த விலையில் வாடகைக்கு.

தரமான சேவை. திருமண கார் ஒரு நாளுக்கு ரூ.6000/=, வான் ஒரு கி.மீ ரூ.30/= மட்டுமே!

(3609)

### ජාතික සම්පත — ஜாதிக சம்பத Jathika Sampatha — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் - 118
திகதி - 27.04.2011

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து: A; அதிர்ஷ்ட இலக்கம்: 01; வெற்றி இலக்கம்: 8 9 0 5 2

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | பரிசுத்தொகை | பரிசு |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | A 01 8 9 0 5 2 | ரூ. 15,055,567.00 | - |
| 1 பரிசு | 01 8 9 0 5 2 | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 8 9 0 5 2 | ரூ. 100,000.00 | 03 |
| 3 பரிசு | 9 0 5 2 | ரூ. 10,000.00 | 27 |
| 4 பரிசு | 0 5 2 | ரூ. 1,000.00 | 278 |
| 5 பரிசு | 5 2 | ரூ. 50.00 | 2776 |
| 6 பரிசு | 2 | ரூ. 20.00 | 26669 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | பரிசுத்தொகை | பரிசு |
|---|---|---|---|
| 7 பரிசு | 8 9 0 5 | ரூ. 1,000.00 | 29 |
| 8 பரிசு | 8 9 0 | ரூ. 100.00 | 277 |
| 9 பரிசு | 8 9 | ரூ. 50.00 | 2781 |
| 10 பரிசு | A | ரூ. 20.00 | 11024 |
| 11 பரிசு | A 01 | ரூ. 100.00 | 1252 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,061,610.00

வெற்றிபெறும் டிக்கட்கள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ரூ.5 இலட்சம் அல்லது அதற்குக் கூடிய பரிசுத் தொகைகள் அரச வரிகளுக்கு உட்படும். பரிசைப் பெற்றுக்கொள்வதற்கு, தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர அழைப்பிற்கு: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சனிக்கிழமை சுப்பர் பரிசு ரூ.15,490,974.00

**கோழிக்குஞ்சு விநியோகம்**

35 நாளில் 2 கிலோவுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 04.05.2011 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும். விலை 90/= கூடுதல் கொள்வனவு செய்பவர்களுக்குக் கழிவு வழங்கப்படும்.

மீண்டும் இறைச்சிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

★ றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ துர்க்கா பாம், ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.

T.P. No: 021 222 2867, 0776090926

(3602)

# ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றில் விசாரணை செய்யுமாறு வலியுறுத்து

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் மீது குண்டு வீசி தாக்குதல் நடத்தி போர்க்குற்றம் புரிந்துள்ள இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ மீது சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை நடத்த வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வலியுறுத்தியுள்ளார்.

சென்னை சைதாபேட்டை பனகல் மாளிகை முன்பாக திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில், இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை உலக நீதிமன்றக் கூண்டில் ஏற்றக்கோரி நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டத்தின்போது அவர் மேலும் வெளியிட்ட கருத்துக்கள் வருமாறு:

உலகம் கண் திறந்துவிட்ட இந்த நேரத்தில் ஐ.நா.சபையே இப்படிப்பட்ட ஒரு போர்க்குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என்று சொன்ன நேரத்தில்,

ஆர்ப்பாட்டத்தில் வீரமணி




தமிழ்நாட்டை உள்ளடக்கிய இந்திய அரசு என்ன செய்ய வேண்டும் என்றால், கடந்த கால செயல்களுக்கு கழுவாய் தேட முயல வேண்டும். அது மட்டுமல்ல அவர்கள் வருத்தம் தெரிவிக்கின்ற அந்த நிலையிலே செயற்பாட்டில் இறங்க வேண்டும். அதாவது ஈழத்தமிழர்களுக்கு போர்க் குற்றவாளியாக இருக்கக் கூடிய அவர்களை கூண்டிலே ஏற்ற வேண்டும் என்று இந்திய அரசு குரல் கொடுக்க முன்வர வேண்டும்.

ஈழத்தமிழர் வாழ்வுரிமையைப் பெறுவதற்கு தனி ஈழமே தீர்வு. ஒத்த கருத்துடைய அனைவரிடமும் கலந்து ஆலோசித்து அடுத்தக்கட்டமாக, தமிழ் ஈழ மாநாட்டையே நாம் தமிழகத்தில் நட்த்துவதற்கு சிந்திப்போம். சிந்தித்துக்கொண்டு இருக்கிறோம் என்றார்.

இதேவேளை ராஜபக்ஷவை உலக நீதிமன்றக் கூண்டில் ஏறுவது உறுதி என்று திராவிடர் இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச்செயலாளர் சுப. வீரபாண்டியன் தெரிவித்தார்.

சென்னையில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் சுப. வீரபாண்டியன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். (வ)

ஆலோசனை...



2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் சி.பி.ஐ., தாக்கல் செய்த 2ஆவது குற்றப்பத்திரிகையில் கனிமொழியின் பெயர் இடம்பெற்றதைத் தொடர்ந்து, சென்னை அறிவாலயத்தில் தி.மு.க., உயர்நிலை செயல்திட்டக்குழு கூட்டம் அந்தக் கட்சித் தலைவர் கருணாநிதி தலைமையில் நடந்தது. கூட்டத்தில் கருணாநிதி எதிரே அமர்ந்திருக்கிறார் கனிமொழி.

## மனைவியின் தயாரிப்பில் வீரப்பனின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாகிறது

மறைந்த சந்தனக் கடத்தல் வீரப்பனின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக தயாரிக்கப்படவுள்ளது. இந்தப்படத்தை அவரது மனைவி முத்துலெட்சுமியே தயாரிக்கிறார். பிரபல இக்குநரான ராம் கோபால் வர்மா படத்தை இயக்கவுள்ளார்.

தமிழக மற்றும் கர்நாடக பொலிஸாருக்கு சிம்ம சொப்பனமாக இருந்தவர் சந்தனக் கடத்தல் வீரப்பன் 30ஆண்டுகளுக்கு மேலாக காட்டில் தலைமறைவாக இருந்த வீரப்பன் கடந்த 2004ஆம் ஆண்டு அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவர் மீது சந்தனமரம் கடத்தல் உள்ளிட்ட 100இற்கும் மேற்பட்ட வழக்குகள் உள்ளன. வீரப்பன் மறைந்த பின்னர் அவரது வாழ்க்கையை படமாக்க பலர் முன்வந்தனர்.

ஆனால் வீரப்பன் மனைவி முத்துலெட்சுமி இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

அத்துடன் யாரும் தனது அனுமதி இல்லாமல் கணவரின் வாழ்க்கையை படமாக எடுக்கக் கூடாது என்று நீதிமன்றத்தில் தடை உத்தரவும் வாங்கினார்.

இந்தநிலையில் இந்தப் படத்தை தயாரிக்க முத்து லெட்சுமியே முன் வந்திருக்கிறார்.

இதுதொடர்பாக ஏற்கனவே ராம்கோபால் வர்மாவிடம், முத்து லெட்சுமி பேச்சு நடத்தியதாகக் கூறப்படுகிறது.

ஆனால் இடையில், முத்து லெட்சுமி சிறைக்குச் சென்றதால் இந்தப்படம் முடங்கி போனது. இப்போது சிறையிலிருந்து முத்து லெட்சுமி விடுதலையாகியுள்ளார்.

தற்போது மேட்டூர் சென்றிருக்கும் முத்துலெட்சுமி, சென்னை சென்ற பின் இந்தப்படம் குறித்து விரைவில் அறிவிப்பார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

## ஐ.நா.குழுவின் போர்க்குற்ற அறிக்கை குறித்து பெங்களூர் தமிழ்ச் சங்கத்தில் கலந்துரையாடல்

இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டது தொடர்பாக ஐ.நா.சபை வெளியிட்டுள்ள அறிக்கைக் குறித்து பெங்களூர் தமிழ்ச் சங்கத்தில் எதிர்வரும் முதலாம் திகதி கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது

பெங்களூர் தமிழ்ச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் நடந்த போரின்போது அப்பாவித் தமிழர்களை இலங்கை இராணுவம் கொன்று குவித்தது. இதை ஐ.நா.சபை உறுதி செய்துள்ளது. இதன் மூலம் மஹிந்த ராஜபக்ஷவின் முகத்திரை கிழிக்கப்பட்டுள்ளது.

சொந்த நாட்டு மக்களையே, நினைத்து பார்க்க முடியாத அளவுக்கு கொன்று குவித்த மஹிந்த ராஜபக்ஷ போர்க்குற்றவாளி ஆக்கப்பட்டு உரிய முறையில் தண்டிக்கப்பட வேண்டும். இதற்கான முதல்கட்ட முயற்சியில் வெளியிடப்பட்டுள்ள ஐ.நா. வல்லுநர் குழு அறிக்கையை பெங்களூர் தமிழ்ச் சங்கம் வரவேற்கிறது.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக ஐ.நா. சபை உறுதியான முடிவுகள் எடுக்க இந்தியா உட்பட பல நாடுகள் துணை நிற்க வேண்டும்.

பெங்களூர் தமிழ்ச் சங்கம் கர்நாடக தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து போராட முன்வருமாறு அழைப்பு விடுத்துள்ளது.

மே முதலாம் திகதி தொழிலாளர்கள் உரிமை நாளன்று மாலை 4.30 மணிக்கு தமிழ்ச் சங்கத்தில் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை குறித்து கர்நாடக தமிழர்கள் செய்ய வேண்டுவது பற்றி விரிவாகக் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெறும்.

தமிழர்கள் மற்றும் மனிதநேய ஆர்வலர்களின் கையொப்பத்தை பெற்று அதை அமெரிக்கா மற்றும் ஜெனிவாவில் உள்ள மனித உரிமை தலைமைக் கழகத்தில் வழங்க் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

-இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ர)

## இந்தியர் இருவருக்கு மரண தண்டனை: மலேசியா நீதிமன்றம் வழங்கித் தீர்ப்பு

மலேசியாவில் போதைப்பொருள் கடத்துவது மிகப்பெரும் குற்றமாகும். அங்கு போதை பொருள் கடத்திய 2 இந்தியர்களுக்கு மலேசியா நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

அவர்களில் ஒருவரது பெயர் சமாத் மொகமது சுல்தான் (44). இவர் போதை மருந்து விற்பனையாளர் ஆவார். இவர் நகைப் பெட்டியில் மறைத்து வைத்து கோலாலம்பூருக்கு போதை பொருளை கடத்தி வந்தார். விமான நிலையத்தில் வைத்து அவரை பொலிசார் கைது செய்தனர். அவரிடம் இருந்து 3.9 கிலோ எடை யுள்ள கேட்டமின் என்ற போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. இந்தச் சம்பவம் கடந்த 2009ஆம் ஆண்டு பெப்ரவரி 25 ஆம் திகதி நடந்தது. கைது செய்யப்பட்ட சமாத் மீது கோலாலம்பூர் உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி சி.டி. மரியா அகமது குற்றம் சாட்டப்பட்ட சமாத்துக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். இதே போன்று, மற்றொரு இந்தியரும் போதைப் பொருள் கடத்தல் வழக்கில் சிக்கினார். அவருக்கும் இதேபோன்று மரண தண்டனை விதிக்கப்பட்டது. (வ)

## ஜூலை 3இல் நடிகர் கார்த்திக் திருமணம்

நடிகர் கார்த்தி திருமணம் கோவையில், ஜூலை மாதம் 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது இது பெற்றோர் பார்த்து நடத்தி வைக்கும் திருமணம். மணப்பெண் ஈரோட் டைச் சேர்ந்தவர். தமிழ்ப் பட உலகின் மூத்த கதாநாயகர்களில் ஒருவரான சிவகு மாரின் இளைய மகன் கார்த்தி. இவர் நடிகர் சூர்யாவின் தம்பி. 'பருத்திவீரன்,' 'ஆயிரத்தில் ஒருவன்,' 'பையா,' 'நான் மகான் அல்ல,' 'சிறுத்தை' ஆகிய படங்களில் கதா நாயகனாக நடித்து இருக்கிறார். இதுகுறித்து கார்த்தியின் தந்தை சிவக்குமார் கூறுகையில், ஈரோட்டைச்சேர்ந்த ரஞ்சனியை கார்த்தி திருமணம் செய்கிறார். மணப்பெண் ரஞ்சனி எம்.ஏ. ஆங்கில இலக்கியத்தில் தங்கப்பதக்கம் பெற்றவர். ஜூலை 3 ஆம் திகதி கார்த்தி -ரஞ்சனி திருமணம் நடக்கிறது - என்று கூறினார். (வ)

(17ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர் பயணிக்க இருக்கும் இந்தக் கார், சாள்ஸ் - கமிலாவுடன் பயணித்த வேளையில் மாணவர் கும்பலொன்றின் தாக்குதலில் சேதமடைந்து திருத்தம் செய்யப்பட்ட வரலாற்றையும் கொண்டுள்ளது. இவர்கள் தேவாலயத்துக்கு வரும்போதும் அரண்மனைக்குத் திரும்பும்போதும் வழிநெடுகிலும் இருமருங்கும் காட்சியை நேரில் காண நெரிசலாக ஒரு மில்லியன் மக்கள் திரள வாய்ப்பு இருக்கிறது.


பக்கிங்காம் அரண்மனை


தம்பதியர் பயணிக்க இருக்கும் குதிரை வண்டி


இதுவும் தயார்

காரில் தேவாலயத்திற்கு வந்திறங்கும் மணப்பெண், உலக மக்களின் விழிகள் அகலத் திறந்து ஆர்வமுடன் பார்த்திருக்க, கமெராக்கள் மொய்க்க, 300 அடி நீளமான தேவாலய மத்திய நடைபாதை வழியே நடந்து, கடந்து மேடைக்கு ஏகி மணமகனை சந்திக்கும் கணத்தில்... உலகமே மெய்மறக்கப் போகிறது.

திருமணத்தை பேராயர் டாக்டர் றொவான் வில்லியம்ஸ் (The Archbishop of Canterbury, Dr Rowan Williams) நடத்தி வைக்கிறார். ஆராதனையை தேவாலய மதகுரு வணக்கத்துக்குரிய டாக்டர் ஜோன் ஹோல் (The Dean of Westminster, the Very Reverend Dr John Hall) நடத்தி வைக்கிறார்.

தேவாலயத்தில் சுமார் இரண்டாயிரம் விருந்தினர்கள் இதனை நேரில் கண்டுகளிப்பர். ஆராதனைகள் 12.05 அளவில் நிறைவுற்றதும் புதுமணத் தம்பதிகள் பிரிட்டன் அரச சொத்தான 109 வருடங்கள் தொன்மை வாய்ந்த 1902 இன் திறந்த குதிரைக் கோச்சில் பக்கிங்ஹாம் அரண்மனை நோக்கி புறப்படுவார்கள். இந்த வண்டியில்தான் மணமகனின் பெற்றோரான சாள்ஸ் டயானா தம்பதிகள், புதுமண மக்களாக லண்டன் வீதியிலே வலம் வந்தது நேற்றுப் போல இருக்கிறது.

தற்செயலாக அன்று மழை மூட்டம் தென்பட்டால் அதற்குப் பதிலாக அதைவிடப் பழமை வாய்ந்த 1881 தயாரிப்பான ஒரு கண்ணாடிக் கவசமுள்ள குதிரை வண்டியும் தயாராக இருக்கிறது. வழமையாக காலநிலை நிச்சயமின்மை காரணமாக அரச குடும்பங்கள் இந்தக் காலப் பகுதியை திருமண நிச்சயங்களில் தவிர்த்தே வந்துள்ளன. எனினும் வில்லியம் வைத்த விதி அந்த வழமையை மாற்றி விட்டது.

மணமக்களின் குதிரை வண்டியைத் தொடர்ந்து மேலும் சில குதிரை வண்டிகள் மணமக்கள் ஊர்வலத்தில் இணையும். இரண்டாவது வண்டியில் இளவரசர் ஹரியைத் தொடர்ந்து மணப் பெண்ணின் தோழியர்களும் அடுத்து மகாராணியாரும் கணவரும் அவர்களைத் தொடர்ந்து சாள்ஸ் கமிலாவும் இறுதிக் குதிரை வண்டியில் மணப் பெண்ணின் தாய் தந்தையரும் ஊர்வலத்தில் வருவர்.

12.30 மணிக்கு தம்பதிகள் அரண்மனையை வந்தடைவர். அதனைத் தொடர்ந்து 12.40இற்கு விருந்தினர்கள் அரண்மனையை வந்தடைவர். பொன்னான நேரம் மாலை 1.25 இனை எட்டும்போது உலகின் விழிகள் அகலத் திறந்து காத்திருக்க அரண்மனையின் பல்கனியில் மகாராணி மற்றும் அரச குடும்ப உறவுகள் சகிதம் வில்லியம் கேற் புதுமண தம்பதிகள் தோன்றி ஆதரவாளர்களுக்குக் கையசைப்பர்.

தொடர்ந்து பிரிட்டனின் விமானப்படை விமானங்கள் 1.30 மணிக்கு வானில் தோன்றும் காட்சியை காண அனைவரின் பார்வைகளும் விண் நோக்கி நிமிரும்! விமான சாகசங்களில் இளவரசர் வில்லியமின் சேவைத்தள சகாக்களே பங்கேற்பர்.

தொடர்ந்து பக்கிங்ஹாம் அரண்மனையில் மகாராணியார் வழங்கும் வரவேற்பு நிகழ்விலும் விருந்திலும் சுமார் 1000 பேர்வரையிலானோர் கலந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது. இவர்களில் சிறுவர்கள், ஊனமுற்ற படை வீரர்கள், திருந்திய போதைப் பொருள் பாவனையாளர்கள், வீடற்றவர்கள் எனப் பலதிறத்தாருக்கும் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

அரண்மனையில் விருந்து உண்ண இளவரசர் வில்லியம் பதவி வகிக்கும் பல்வேறு தருமஸ்தாபன பயனாளிகளை அவரே தேர்ந்திருப்பது முன்மாதிரியானது. இச்சாதாரண மக்களுடன் ஒருசில உள்நாட்டு வெளிநாட்டு முக்கிஸத்தர்களும் விருந்தில் இணைகிறார்கள்.

மதிய விருந்து முடிந்ததும் ஓய்வு நேரமாகி ஆரவாரம் அடங்கிவிடும். மீண்டும் இரவு 7.00 மணியளவில் இளவரசர் சாள்ஸின் அழைப்பின் பேரில் சுமார் 300 பேர் ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் என இராப் போசன விருந்தில் கலந்து கொள்கிறார்கள்.

# பெரிய இடத்து சம்பந்தம்

வழமைக்கு மாறாக தேனிலவு என்று அன்றே புறப்படாமல் அன்றைய இரவை மணப்பெண் கேற் மகாராணியார் மாளிகையில்தான் கழிக்கப் போகிறார். மறுநாள் இவர்கள் தேனிலவுக்காக புறப்படும் இடம், நேரம் எல்லாம் இரகசியமாகவே பேணப்படுகிறது. இணையத்தள சேவைகள் பரவலாக்கப் பட்டபின்னர் இடம்பெறும் முதலாவது பெரும் திருமணம் இது எனக் கருதப்படுகிறது. எனவே பலரும் இணையத்தில் வீடியோ காட்சிகளை அணுக உள்ளதால் இணைய அலைவரிசைகளில் அத்தருணம் நெருக்கடி ஏற்பட வாய்ப்பு உள்ளது.


மணமகளின் திருமண ஆடை பற்றிய ஊகங்கள் நிறையப் பேசப்பட்டாலும் அதனை வடிவமைப்பவர், அதனின் பெறுமதி, தன்மை, வடிவமைப்பு பற்றிய எல்லாமே இரகசியமாகத்தான் வைக்கப்பட்டுள்ளன.

இவ்வளவு ஆடம்பரமாக இருபத்தெட்டு வயதில் இருவரும் இணையும் இந்த வாழ்க்கை நிலைக்க பலரும் வாயார வாழ்த்துகிறார்கள். வாழ்த்துக்களுள் ஒரு இனம் புரியாத அச்சம் அல்லது ஏக்கம் பிறக்கக் கூடாது. எல்லா வகையான விமர்சனங்களும் எழச்செய்தாலும் வாழ்க்கை நல்லதாக அமையவே உலகம் விரும்புகிறது.

அரச குடும்ப வரலாறுகளை இத்தருணத்தில் விமர்சிக்க தயங்காத பலரும் இருக்கத்தான் செய்கிறார்கள். அதற்காகத்தானே நம்ம ஊரிலே கெட்டிமேளம் கொட்டுகிறார்கள்.

பல இணையத் தளங்களும் ஊடகங்களும் ஆரவாரமான அரச குடும்ப திருமணங்களும் அவற்றுக்குப் பின்னான தப்புத் தண்டாக்களும் மண முறிவுகளும் பற்றி விலாவாரியாக இத் தருணத்தில் வரைந்து தள்ளுகின்றன.

திருமணத்திற்கு இரண்டு வாரங்கள் இருக்கையிலேயே மோப்ப நாய்கள் சகிதம் பொலிஸார், திருமண ஊர்வலம் வருகின்ற வழியினை அங்குலம் அங்குலமாகப் பரிசீலிக்கத் தொடங்கிவிட்டார்கள். வடிகால்கள், வாய்க்கால்கள், மின் கம்பங்கள், சந்து பொந்துகள் எல்லாம் துருவித் துருவிச் சோதனை செய்யப்படுகின்றன. கூரைகளின் உச்சியில் சினைப்பர் துப்பாக்கிகள் சகிதம் காவலர்கள், வீதியில் வரும் அல்லது இரு மருங்கும் குவியும் ஒவ்வொருவரின் அசைவுகளையும் கண்காணிக்கின்றனர். ஊர்வலம் வருகின்ற போது ஹெலிகள் உச்சக்கட்ட கண்காணிப்பை மேற்கொள்ளும். எவராவது ஆர்ப்பாட்டம், சுலோகம், கூச்சல், குழப்பம் என்று ஜனநாயக உரிமையிலும்கூட வாலாட்ட முடியாது.


திருமணத்துக்கு முன்னர் அன்பைப் பகிர்ந்துகொண்ட தருணம் ஒன்றில்.

உலகெங்கிலுமிருந்து பல தலைவர்கள் நிகழ்வுகளில் கலந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பன்னாட்டு அரச பரம்பரையினரான இளவரசர்கள் இளவரசிகள் இதற்கென விசேடமாக அழைக்கப்பட்டுள்ளனர். எனினும் ஜப்பானிய அரச வம்சத்தினர் தமது நாட்டில் இடம்பெற்ற அழிவின் சோகம் காரணமாக இதில் கலந்து கொள்வதில்லை என முடிவு எடுத்துள்ளனர்.

ஏன்... பெற்றோரான சாள்ஸ் - டயானா தம்பதிகள் போல பல மாதங்கள் நீண்ட தேன்நிலவுக்குக்கூட இவர்கள் தயாரில்லை. இரண்டே வாரங்களில் வில்லியம் தனது படையணியின் விமானப் பயிற்சிகளில் இணைந்தாக வேண்டும்.

அரச குடும்பத்துப் பெண்ணாக கேற் அரண்மனைக்குள் நுழையும்போது பல சுதந்திரங்களை இழக்கத்தான் வேண்டிவரும். அரச மாளிகை வாசம் பற்றியும் இழக்கப்படும் பொது வாழ்வு பற்றியும் பல இணையத் தளங்கள் அவருக்காகக் கண்ணீர் வடிக்கின்றன.

மகாராணியார் உண்ணுவதை நிறுத்தும்போது அனைவரும் அதற்கு அப்பால் உண்ணக் கூடாது என்பது அவசரமாக சாப்பிட முடியாதவர்களுக்குப் பட்டினி நிலமைதான் என ஒரு இணையத்தளம் குறிப்பிட்டிருப்பது உண்மைதானோ என எவரறிவார்.


மிடில்ரன் அவரது மனைவி மற்றும் கேற்

கேற் மிடில்ரனின் ஆல்பம்







இளவரசர் வில்லியம் ஆல்பம்










# மாவட்ட மட்டத்திலான உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 29

பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தின் 75 ஆவது ஆண்டுநிறைவையொட்டி நடத்தப்படும் உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியின் மாவட்ட மட்டப் போட்டி எதிர்வரும் 4 ஆம் திகதி பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இச்சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கிலிருந்து இரு அணிகளும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கிலிருந்து இரு அணிகளும், யாழ். உதைபந்தாட்ட லீக்கிலிருந்து நான்கு அணிகளும் பங்குபற்றவுள்ளன. (த-23)



யாழ். கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வன்மைப் போட்டியில் இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான உயரம்பாய்தல் போட்டியில் மாணவன் ஒருவர் பாய்கின்றார். (ஜ-23)

## வடமராட்சியில் வட இந்து மகளிர் மூன்று பிரிவுகளிலும் சம்பியன்

பருத்தித்துறை, ஏப். 29

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட வலயமட்ட வலைப்பந்தாட்டப் போட்டிகளில் சகல பிரிவுகளும் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

15 வயதுப் பிரிவுப் போட்டி, 17 வயதுப் போட்டி, 19 வயதுப் பிரிவுப்போட்டி ஆகிய மூன்று வயதுப் பிரிவு போட்டிகளிலும் வெற்றியீட்டி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (ஜ-190)

## வடமராட்சியில் மெய்வன்மை பயிற்சிமுகாம்

வடமராட்சி வலய மட்ட மெய்வன்மை நிகழ்ச்சிகளின் பயிற்சி முகாம் எதிர்வரும் 3 ஆம் திகதியிலிருந்து மூன்று தினங்கள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சி முகாமில் 80 வீரர்களும் 69 வீராங்கனைகளும் கலந்து கொள்ளவுள்ளார்கள். (ஜ-190)

## காரைநகர் பிரதேச கழகப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம்

காரைநகர், ஏப். 29

காரைநகர் பிரதேச செயலர் பிரிவு பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடையேயான விளையாட்டுப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன. முடிவுகள் வருமாறு:-

* 100 மீற்றர் ஓட்டம் - ஆண்கள் வை.கோகுலன் (ஒளிச்சுடர் வி.க.), கே.பிரியரஞ்சன் (கலாநிதி வி.க.), கே.தேவசஞ்சீவ் (கோவளம் வி.க.),

பெண்கள் - எஸ்.சிவாசினி (அம்பாள் வி.க.), கு.பூர்விகா (கலாநிதி வி.க.), ற.ஜெனிற்றா (அம்பாள் வி.க.).

* 200 மீற்றர் ஓட்டம் - ஆண்கள் - வை.கோகுலன் (ஒளிச்சுடர் வி.க.), வி.சங்கர் (கலாநிதி வி.க.), ரி.ஜெயகிருஸ்ணா (அம்பாள் வி.க.),

பெண்கள் - எஸ்.சிவாஜினி (அம்பாள் வி.க.), கே.கிருபா (அம்பாள் வி.க.), பி.கலைச்செல்வி (அம்பாள் வி.க.).

* 400 மீற்றர் ஓட்டம் - ஆண்கள் - ரி.பிரதீபன் (ஒளிச்சுடர் வி.க.), வி.சங்கர் (கலா நிதி வி.க.), ந.ஜெயகிருஸ்ணா (அம்பாள் வி.க.),

பெண்கள் - ப.கலைரூபி (கலாநிதி வி.க.), சி.சுபாசினி (கலாநிதி வி.க.), தே.பிரதீபா (அம்பாள் வி.க.).

* 800 மீற்றர் - ஆண்கள் - ரி.பிரதீபன் (ஒளிச்சுடர் வி.க.), ப.சயந்தன் (ஒளிச்சுடர் வி.க.), ஆர்.சுரேஸ்குமார் (கலாநிதி வி.க.),

பெண்கள் - பி.கலைரூபி (கலாநிதி வி.க.), ரி.பிரதீபா (அம்பாள் வி.க.), எம்.மோகனா (கலாநிதி வி.க.). *(தொடரும்)*

## கிளிநொச்சியில் சுற்றுப்போட்டி ஒத்திவைப்பு

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நாளை முதல் நடத்தப்படவிருந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி தற்போதைய காலநிலை காரணமாக இருவாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுற்றுப்போட்டிக்கான திகதி பின்னர் அறியத்தரப்படுமென கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் ஜோயல் பியசீலன் தெரிவித்துள்ளார். (ஜ-23)

## வடமராட்சி வலய உடற்பயிற்சி போட்டி

பருத்தித்துறை, ஏப். 29

வடமராட்சி வலய மட்ட உடற் பயிற்சிப் போட்டி எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறுவதாகவிருந்த இந்தப் போட்டி மாவட்டமட்ட போட்டியில் ஏற்படுத்தப்பட்ட திகதி மாற்றம் காரணமாக முன் கூட்டியே நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-190)

CIFL
Strength & Integrity
சென்றல் இன்வெஸ்ற்மன்ஸ் அன் பைனான்ஸ் லிமிட்டெட், யாழ்ப்பாணம்
Central Investments & Finance Ltd (CIFL) Jaffna.
30.04.2011 ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு
CIFL மேன்மேலும் வளம் பெற வாழ்த்துகின்றோம்




CIFL இன் சேவைகள்
* நிலையான வைப்பு வட்டி வீதம் 5வருடங்களுக்கு மூத்த பிரஜைகளுக்கு 14.16%, ஒரு வருடத்துக்கு மூத்த பிரஜைகளுக்கு 12.80%
* றன் உதான தங்கநகை அடகுச்சேவையின் ஆகக்குறைந்த வட்டிவீதம் 0.9% வீதத்திலிருந்து, அதிகூடியபெறுமதி ஒருபவுணுக்கு 40.100/=
* மோட்டார் சைக்கிள்களுக்கும் ஏனைய வாகனங்களுக்கும் லீசிங், வாடகைக் கொள்வனவு குறுகிய காலத்துக்குள் செய்து கொடுக்கப்படும்.
* வாழ்வாதாரங்களை மேம்படுத்தும் நுன்கடன் வசதிகள். (Micro Finance).
* ஆதனக்கடன் வசதிகள் (Property Loan).

விவரங்களுக்கு CIFL யாழ்கிளையுடன் தொடர்புகொள்ள...
No.56/15, Stanley Road, Jaffna.
Tel: 021 4921101/2
Fax: 0214920292
E-mail: jaffna@cifl.lk
wep: www.cifl.lk

வாழ்த்துபவர்கள்

வேல் சன்ஸ் வேக்ஸ்
மோட்டர்பைக் உதிரிப்பாகங்கள், கூடைகள், கரியர்கள், ஒட்டு வேலைகள் என்பன செய்து கொடுக்கப்படும்.
56/15, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
உரிமையாளர்:- V.சந்திரசேகரம்.

தங்கத்திருமகள் தங்கமாளிகை
இல.205/6, ராஜா தியேட்டர் கட்டடம், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 5323522

JANASHAKTHI INSURANCE PLC
District Office:
No.165, Manipay Road, Jaffna.
Tel: 021 2229552
Fax: 021 2223827

CEYLINCO VIP
ON THE SPOT
உலகிற்கே ஒன்று

Vaanagam Phone City
Mobile Phone Sales& Repaires
வானகம் போன் சிற்றி
இல.64/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212228990

மிலேனியம் பெஷன்
பொம்பே & பஸார்
No.10,Power House Road, Grand Bazaar, Jaffna.
Tel: 0212229399 Fax: 021 222 2967
கண்டி வீதி,கிளிநொச்சி.
Tel: 0212285438.

மங்கையர் மனங்கவரும் ஆடைத்தினுசுகளுக்கும் மற்றும் அனைத்து புடைவைத் தெரிவுகளுக்கும் ஏற்ற ஸ்தாபனம்.
தனம் டெக்ஸ்
22A, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2222723.

சீமாட்டி புடைவைக் கடல்
அனைத்து ரக புடைவைகளினதும் மொத்த, சில்லறை, வியாபாரிகள்
Dealers in Textiles & Fancy Goods
No.122, Power House Road, Jaffna.
Tel: 021 222 8564 / Fax: 021 222 2102
Branch:
Mangai Silks, Modern Market, Jaffna.

Yaso Motors
Importers& Dealers In Moto Cycles& Spare Parts
Head Office:
No.163,Stanley Road, Jaffna, SriLanka.
Tel: 0094-212227566, 0094-217200650.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண் மகிழ
27
★
02
★
1930



மனம் நெகிழ
30
★
03
★
2011

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த

## அமரர் பொன்னையா சுப்பிரமணியம்

(முன்னாள் உரிமையாளர், ஜெயலட்சுமி பவான், புறக்கோட்டை, கொழும்பு-11)

**புவனத்தில் வந்துதித்தாய்**
**புண்ணியம் செய்தவரானோம்**
**பூத்திடும் பூக்களும் அறியும்**
**பூமியில் தன் பணி என்னவென்று...**
**உன் கடன் நீ முடித்தாய்**
**உன் உடல் நீ தவிர்த்தாய்**
**உரியவர் நாமிங்கு**
**உன் நினைவில் வாடுகின்றோம்.**
**கற்கள் தடக்கிய கடினமான பாதை**
**கை பிடித்துத் தூக்கி விட்டீர்**
**கால் தளர்ந்து சோர்ந்த போது**
**தழைத்து தலை தூக்கவைத்தீர்...**
**வந்த பாதையெல்லாம் வழி காட்டி**
**வாழ்க்கைக்கோர் அர்த்தம் தந்தீர்**
**போகும் வழியெல்லாம் நீர் இட்ட பாலமென்று**
**வணங்கி நிற்போம் என்றென்றும்**

எமது அன்புக் குலவிளக்கு பொ. சுப்பிரமணியம் அவர்கள் கனடாவில் திடீர் மரணமான செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்த வர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (29.04.2011) வெள்ளிக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்பு டன் அழைக்கின்றோம்.

*43/1, சம்பியன் லேன்,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

(3628)

குடும்பத்தினர்.



# அந்தியேட்டி அழைப்பு

## திருமதி நகுலேஸ்வரி அபிமன்யு

தாயின்
மடியில்
14
*
07
*
1954



இறைவன்
அடியில்
16
*
11
*
2010

**அம்மா, அம்மா எங்கே சென்றாயோ**
**இங்கே வந்து எங்களுக்கு ஆறுதல் சொல்லாயோ!**
**உம்மா தந்து ஊட்டி வளர்த்த அம்மா வருவாயோ**
**உனது திருமுகத்தை காணும் நாள் தான் வருமோ**
**பெம்மான் சிவம் பதமே சென்றடைவாய் தெய்வமே!**

**தேற்றுவார் யாரும் இன்றி அலையிது எம் மனமே**

16.11.2010 அன்று லண்டனில் இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொண்டவர்களுக்கும் பல வழிகளிலும் துயர்பகிர்ந்தும் அத்துடன் எமக்கு ஒத்தாசை புரிந்தும் உதவிய நல் உள்ளங்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

எம் அன்புக் குலவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (29.04. 2011) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணியளவில், கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும்.

மேலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (30.04. 2011) சனிக்கிழமை நண்பகல் எமது இல்லத்தில் நடை பெறும். இந்த நிகழ்வுகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

*(இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.)*

*191, சிவன் பண்ணை வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.*

(3631)

குடும்பத்தினர்.


# கனடா தேர்...

*(21 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

ஈழத்தமிழர்கள் பெருமளவில் கனடா வில் தஞ்சமடைந்துள்ளார்கள். அவர் களது பெற்றோர்கள் மற்றும் வாழ்க்கைத் துணைகளைத் தங்களுடன் இணைத்துக் கொள்வதில் தற்போது பெரும் சிரமங் களை எதிர்நோக்குவதுடன் நீண்டகால விரயமும் பெரும் பணச் செலவும் ஏற் படுகின்றன.

ராதிகா பரஞ்சோதி சார்ந்திருக்கும் கட்சி தமிழர்கள் முன்னெடுக்கும் போராட் டங் களில் நேரடியாகப் பங்குபற்றுவார்கள் என்று கூறப்படுகின்றது. ராதிகா நிற்கும் தேர்தல் தொகுதியில் பதினைந்தாயிரம் தமிழ் வாக்காளர்கள் இருக்கின்றனர். இவர் கள் அனைவரும் இவருக்கு வாக்களித் தால் ராதிகா நாடாளுமன்றம் செல்வது உறுதி என்றநிலை இருக்கின்றது.

எது என்னவாக இருந்தாலும் இந்தத் தேர் தலை தமிழர்களது வரலாற்று முக் கியத்துவம் வாய்ந் ததாகச் கருதுகின்ற னர். தமது கனடா வின் அரசியல் உரிமை களை மட் டும் சிந்திக்காது எதிர்கால ஈழத் தமி ழர்களின் அபிலா ஷைகள் பற்றியும் சிந்தித்துத்தான் வாக்களிக்க வுள்ள னர். அதற்கான முயற்சிகளும் நடை பெறுவது அவதா னிக்க முடிகின்றது.

சிலர் கூறிய கருத்துக்கள் பிரதி பலிப் புக்களைச் சுருக் கமாக நோக்கு வோம்:

ஈழத் தமிழர் களுக்கு இது முக் கியமான தேர்தல், தமிழர் விடயத்தில் வரும் காலங்களில் எந்தக் கட்சி எப்ப டிச் செயற்படப் போகின்றது என்று தான் பார்க்க வேண் டும், தமிழர் பிரதி நிதிகளை நாடா ளுமன்றம் அனுப்பி எமது நியாயங்களை அங்கு ஒலிக்கச் செய்ய வேண் டும், ஆட்சிக்கு வரும் கட்சி கடைப் பிடிக்கப் போகும் வெளி விவகார கொள்கையில் இலங்கை விடயத்தில் எடுக்கப்போகும் தீர்மானம் வருங் காலங்களில் புலம் பெயர் சமூகம் எடுக்கப் போகும் போராட் டங்களுக்கு இது தான் நன்மை பயக்கும்.

# உரிமை கோராத மோட்டார் சைக்கிள் நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம், ஏப்.29

உரிமை கோரப்படாத நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்றினை யாழ். நீதி மன்றில் யாழ். பொலிஸால் ஒப்படைத் துள்ளனர்.

யுபிகேயு 0759 என்ற இலக்கமுடைய சீனா நாட்டின் தயாரிப்பான இந்த மோட் டார் சைக்கிளை உரியவர்கள் மூன்று மாத காலத்துக்குள் அடையாளம் காட்டிப் பெற் றுக்கொள்ளுமாறும், தவறும்பட்சத்தில் அது அரசுடமையாக்கப்படும் என்று யாழ். நீதிமன்றப் பதிவாளர் என். வன்னியசிங் கம் அறிவித்துள்ளார். (த-9)


## யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

1921 - 2011

### பழைய மாணவர் விபரம் திரட்டலும் ஆவணங்கள் சேகரிப்பும்

இவ்வருடம் (2011) மேற்படி எமது கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு 90 ஆண்டுகள் நிறைவடைகின்றன. எனவே இவ்வருடத்தினை கல்லூரி அபிவிருத்திக்கான விழிப்புணர்வு ஆண்டாகக் கருதிச் செயற் படுவதற்குக் கல்லூரிச் சமூகம் தீர்மானித்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக கல்லூரியின் பழைய மாணவர்களின் விபரங்கள் மற்றும் கல்லூரி தொடர்பான பழைய ஆவணங்களைத் திரட்டும் பணியும் முன்னெடுக்கப் பட்டுள்ளது. எனவே ஆர்வமுள்ள பழைய மாணவர்கள். முன்னைநாள் ஆசிரியர்கள். நலன் விரும்பி களிடமிருந்து பின்வரும் விடயங்களை எதிர்பார்க்கின்றோம்.

- பழைய மாணவர்கள் தத்தமது முழுப்பெயர். கல்வி கற்ற ஆண்டு. தந்போதைய தொழில். தொழிலிட முகவரி. வதிவிட முகவரி. தொலைபேசி இலக்கம். மின்னஞ்சல் முகவரி என்பவற்றை எமக்கு அறியத் தருதல்.
- தாங்களறிந்த ஏனைய பழைய மாணவர்களின் விபரங்களை அறியத் தருவதோடு அவர்களையும் எம்மோடு இணைத்தல்.
- முன்னைய அதிபர்கள் மற்றும் கல்லூரி தொடர்பான பழைய புகைப்படங்கள். வெளியீடுகள் என்பவற்றைப் பெற்றுத் தருதல்.
- தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் முன்னாள் ஆசிரியர்களின் விபரங்களை அறியத் தருதல்.

மேற்படி செயற்பாடுகளினூடாக ஆக்கபூர்வமான பங்களிப்பினை வழங்கியுதவுமாறு தங்களைத் தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு : தலைவர்/செயலாளர்.
பழைய மாணவர் சங்கம்.
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.
கரவெட்டி.

மின்னஞ்சல் : osa.nmmv@gmail.com ,
nelliadymmv@gmail.com

தொலைபேசிகள் : 021 226 3017, 0718474411

தொலை நகல் : 021 226 4141

*- செயலாளர்,*
*பழைய மாணவர் சங்கம்.*





உ
சிவமயம்

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
## SRI NAGAPOOSHANI AMMAN KOVIL

# கூறுவிலை கோரல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்துக்குப் பின்வரும் கட்டுமானப் பொருள்களுக்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறு விலைகளைச் சமர்ப்பிக்க விரும்புபவர்கள் 05.05.2011 மு.ப. 11 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக ஒவ்வொரு பொருள்களுக்கும் தனித்தனியாக விலைகளை மதிப்பிட்டு மூடிய கடித உறையில் வைத்து செயலாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு என்ற முகவரிக்குப் பதிவு அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படவேண்டும். அல்லது ஆலயத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கூறுவிலைப் பெட்டியில் இடலாம். 05.05.2011 மு.ப. 11 மணிக்கு கூறுவிலை திறக்கப்படும் போது கூறுவிலை சமர்ப்பிப்பவர்கள் விரும்பினால் சமுகம் தரலாம்.

| இல. | பொருள் விவரம் | கியூப் | தொகை |
|---|---|---|---|
| 01. | பெரிய கருங்கல் (அத்திபாரத்துக்கானது) | 01 | |
| 02. | பெரிய சுண்ணாம்புக்கல் (அத்திபாரத்துக்கானது) | 01 | |
| 03. | ¾'' இஞ்சி சல்லி (சுண்ணாம்புக்கல்) | 01 | |
| 04. | ¾'' இஞ்சி சல்லி (கருங்கல்) | 01 | |
| 05. | கண்டாவளை மண் | | |
| 06. | மணல் மண் (நாகர் கோயில் போன்ற சிறிய மணல்) | 01 | |
| 07. | சிமெந்துக் கல் (அரிகல், கொங்கிறீட் கட்டி, சல்லி சேர்க்கப்பட்டவை) | 01ஒன்றுக்கானது | |
| 08. | 04'' இஞ்சி கல் (சுண்ணாம்பு) | 01 | |
| 09. | 04'' இஞ்சி கல் (கருங்கல்) | 01 | |

குறிப்பு:- பொருள்கள் அனைத்தும் குறிகாட்டுவான் துறைமுகத்தில் தரும் வரையான கூலிகளையும் உள்ளடக்கியதாக கூறு விலை அமைதல் வேண்டும்.
பொருள்களின் தரம் பரிசோதிக்கப்பட்டதன் பின்னரே அறங்காவலர் சபையினால் தீர்மானிக்கப்படும்.

திரு ஆ. தியாகராசா,
தலைவர்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
கோயில், நயினாதீவு.

(சி/577977)

திரு ந. மோகனரூபன்,
செயலாளர்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன்
கோயில், நயினாதீவு.

## யாழ். நகரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எஸ்.ரவீந்திரனால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு மீது சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தமது பக்க நியாயங்களை நேற்று முன்வைத்தார். வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதி எதிர்மனு தாரர்களுக்கு நோட்டீஸ் அனுப்பும்படி உத்தரவிட்டார். அத்துடன் விசாரணையை அடுத்த மாதம் 20 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா, மாநகர சபை ஆணையாளர் சரவணபவன், சபையின் பிரதான கணக்காளர் என்.யோகேந்திரராஜ், வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோர் எதிர்மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கட்டடப் பணிகளை உடனடியாக நிறுத்தவும், கடைக்கான அனுமதிப்பத்திரப் பணத்தை கட்டட ஒப்பந்தகாரர் பெறுவதற்கும் உடனடியாக இடைக்காலத் தடை உத்தரவு வழங்குமாறு மனுவில் கோரப்பட்டுள்ளது. அதில் மேலும் கோரப்பட்டுள்ளதாவது:

* குறித்த கட்டடத்தொகுதியை அமைப்பது தொடர்பாக முடிவெடுக்கும் அதிகாரத்தை முதல்வர் மற்றும் சபையால் அமைக்கப்பட்ட உபகுழுவுக்கு வழங்கும் சபையின் 29.11.2010 கூட்டத் தீர்மானத்தை ரத்துச் செய்து நீதிமன்றம் உத்தரவிடவேண்டும்.
* உத்தேச கட்டடத்தொகுதியை அமைப்பதற்கான பணிகளை நிறுத்தும்படியும், அதில் அமைய உள்ள கடைகளுக்காக அனுமதிக் கட்டணமாகப் பெருந்தொகைப் பணத்தை சட்டவிரோதமாகப் பெறும் நடவடிக்கையை தடுத்து நிறுத்தும் படியும் நீதிமன்றம் உத்தரவிட வேண்டும்.
* மாநகர சபைக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைய சபை முதல்வரோ அல்லது உபகுழுவோ கட்டட ஒப்பந்தக்காரருடன் செய்து கொண்ட உடன்படிக்கையை நடைமுறைப் படுத்துவதற்கு இடைக்காலத் தடை உத்தரவு வழங்கவேண்டும்.

இப்படி மனுவில் கூறப்பட்டுள்ளது. (உ-ஐ)

## ஈ.பி.டி.பி.யுடனும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியுடனும் பேசும் என்று அக்கட்சி தெரிவித்துள்ளது. இன்றைய சந்திப்பில் அரசியல் தீர்வு பற்றியே பேசுவதாக கூட்டமைப்பு - அரசு இடையே இணக்கம் காணப்பட்டிருந்தது. அதேபோன்று ஈ.பி.டி.பியுட னும் அரசியல் தீர்வு குறித்தே அரசு பேசப் போகிறதாம் என்று அக்கட்சியின் செய்திக் குறிப்புத் தெரிவித்தது.

அரசின் ஓர் அங்கமாக ஈ.பி.டி.பி. இருந்தாலும் அரசு தம்முடனும் தீர்வு குறித்தும் பேசுமாம் என்று அந்த அறிக்கை முக்கியமாகச் சுட்டிக்காட்டி உள்ளது. இதற்கிடையே, நேற்று செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல, தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை ஏற்க முடியாது என்றார்.

## செலான் கிளை திறப்பு

சாவகச்சேரி நகரில் செலான் வங்கிக் கிளை இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. முற்பகல் 11.15 மணிக்கு வங்கியின் தலைவர் ஈஸ்ட்மன் நாரங்கொடவினால் இது திறந்து வைக்கப்படவுள்ளது.

''அவர்கள் அப்படிக் கூறித் திரிகிறார்கள். ஆனால் அந்த நிலையை நாங்கள் மாற்றிவிட்டோம்'' என்றார் அவர்.

அத்துடன் ''தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்துள்ளனர். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அவர்கள்தான் புலிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள். புலிகளின் மாயையில் இருந்து அவர்கள் இன்னும் மீளவில்லை.'' என்றும் அவர் தெரிவித்தார். (உ)

## நிபுணர்குழு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டுத் தூதர்களை நேற்றுக் காலையில் இரண்டாவது தடவையாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சந்தித்து நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பான இலங்கையின் நிலைப்பாட்டை விளக்கினார்.

பக்கச்சார்பானது; வன்மம் பாராட்டுவது; பரபரப்பான புனைகதை நோக்கி வழிப்படுத்துவது என்று அப்போது நிபுணர் குழுவின் அறிக்கை பற்றிப் பொரிந்து தள்ளினார் அமைச்சர் பீரிஸ்.

அதேசமயம், இத்தகைய ஒரு அறிக்கையை விடுத்ததற்காக ஐ.நாவுக்கு எதிராகச் செயற்படும் எண்ணம் எதுவும் அரசுக்குக் கிடையாது என்றும் அமைச்சர் கூறினார்.

''வெளிநாடுகளையும் ஐ.நா. சமூகத்தையும் இழிவுபடுத்துவதன் மூலமோ வன்செயல்கள் மூலமோ சிறுமைப்படுத்தும் எண்ணம் எதுவும் எமக்குக் கிடையாது. இப்போதுள்ள பதற்றமான சூழலில் அரசியல் லாபம் தேடும் நோக்கோடு செயற்படுபவர்களே அத்தகைய தகவல்களைப் பரப்பி வருகிறார்கள்'' என்றார் பீரிஸ். (உ)

## புலிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் பதில் அளிக்கையில் கூறியவை வருமாறு:-

நிபுணர் குழுவின் அறிக்கையின் 8ஆம் பக்கத்தில் புலிகள் சுதந்திரப் போராளிகள், உலகிலேயே மிக ஒழுக்கமானவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்தவர்கள், பிக்குகளை, பள்ளிவாசலில் பிரார்த்தனை செய்தவர்களைப் படுகொலை செய்தவர்கள் ஒழுக்கமானவர்களா?

இந்த அறிக்கை உண்மைக்குப் புறம்பானது. இப்போது நாட்டில் ஏற்பட்டு வரும் இன ஒற்றுமை, நல்லிணக்கம், அபிவிருத்தி ஆகியவற்றைத் தலைகீழாக மாற்றும் நோக்கிலேயே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

உலகிலேயே மிகக் கொடூரமான பயங்கரவாதிகள் புலிகள் என்றும், அவர்கள் அல்-குவைதாவை விட மோசமானவர்கள் என்றும் தெரிவித்து அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை தமது நாடுகளில் புலிகள் இயக்கத்தைத் தடை செய்தன.

தற்போது இதே நாடுகள் தமது பிரதிநிதிகள் மூலம் இப்படியான ஓர் அறிக்கையை வெளியிடச் செய்துள்ளன. அத்துடன் அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளை அமுல்படுத்தும்படியும் கோருகின்றன.

ஐ.நா. அறிக்கை தொடர்பாக அரசு தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் விளக்கமளிக்கும். இதேவேளை, இன, கட்சி, நிற பேதமின்றி உள்நாட்டிலுள்ள சகல கட்சிகளையும் அமைப்புகளையும் இணைத்துக்கொண்டு இந்தப் பிரச்சினைக்கு அரசு முகம் கொடுக்கும்.

- இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

## நிலையான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீறல்கள், போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாகச் சுயாதீனமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளை செயற்படுத்தும்படி இலங்கையை பிரிட்டன் ஊக்குவிக்கவுள்ளது எனவும் அப்போதுதான் இலங்கையில் நிலையான சமாதானத்தையும், பாதுகாப்பையும் நிலைநிறுத்த முடியும் என்றும் பிரிட்டன் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (உ-சி)

**யா/மகாஜனக்கல்லூரி, தெல்லிப்பழை**

**பழைய மாணவர் சங்கம்**

**வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2011**

தலைவர் : திருமதி சிவமலர் அனந்தசயனன் (அதிபர்)
காலம் : 15.05.2011 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி
இடம் : பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம்

அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகம்தரவும்

குறிப்பு :
1) பிரேரணைகள் இருப்பின் தலைவர்/செயலாளருக்கு முகவரியிட்டு 10.05.2011 இக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
2) நடப்பு ஆண்டுக்கான சந்தாவைச் சங்கப் பொருளாளரிடம் செலுத்தி அங்கத்துவத்தை புதுப்பித்துக்கொள்ளவும்.

திருமதி சிவமலர் அனந்தசயனன்
தலைவர். (அதிபர்)
(3637) (34)
திரு. சி.கபிலைமகான், திரு. சி.தேவகுமாரன்.
(இணைச் செயலாளர்கள்.)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யாழ். வலயக்கல்வி அலுவலகத்தில் அழகியற்பாட உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய

**திரு. A.S.சற்குணராஜா**

அவர்கள் பிரதிக்கல்விப் பணிப்பாளராக (முகாமைத்துவம்) பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டுவதுடன் அவர் இன்னும் பல உயர்வுகள் பெற வேண்டுமெனவும் வாழ்த்துவதில் பெரும் மகிழ்வடைகின்றோம்.

சித்திரபாட ஆசிரிய ஆலோசகரும்,
ஆசிரியர்களும்.
(யாழ். கல்வி வலயம்)

(3620)

## விந்தனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியாழக்கிழமை மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்றது. முதல்வர் தனது தலைமையுரையில்:

நேற்றைய பத்திரிகைகளில் யாழ். மாநகர சபையில் ஊழல் மோசடிகள், மேயர் பகிரங்க விவாதத்துக்குத் தயாரா? எனச் சவால் விடுத்துச் செய்தி வெளியாகி இருந்தது.

நாங்கள் மாநகரசபைக் சட்டதிட்டங்களுக்கு அமைவாகவே செயற்பட்டு வருகின்றோம். நாங்கள் சிறுபராயத்தில் இருந்த காலம் தொட்டு கடந்த 60 வருடங்களுக்குமேலாக தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதாகக் கூறிச் சீரழிந்தவர்கள் விடுதலை புலிகள் காலத்தில் இந்தியாவில் தந்திரோபாயமாகத் தங்கி இருந்துவிட்டு இன்று புலிகள் ஒழிக்கப்பட்ட பின்னர் அபிவிருத்திகளைத் தடைசெய்வதற்காக வாக்கு வேட்டைக்கு வருகிறார்கள்.

நாங்கள் இலங்கையர்களாகவும் தமிழர்களாகவும் இழந்து போனவற்றை மீட்டு யதார்த்தமாக வாழ அரசுடன் இணைந்து செயற்படுகிறோம். நாங்கள் சட்ட விதிகளுக்கு அமைய செயற்படும்போது விவாதத்துக்குத் தயாரா? என்கிறார்கள்.

அரச கட்சியுடன் தன்னை இணைத்துக் கொண்டு ஈ.பி.டி.பி. யுடன் கூட்டாக இருந்தவர் இன்று விவாதிக்கக் கேட்கிறார். நீங்கள் உரிய முறையில் விவாத மேடையை அமையுங்கள் நாங்கள் அதில் கலந்து கொள்ளுவோம். இவ்வாறு முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா குறிப்பிட்டார்.(த-7)

**குத்தகை / வாடகைக்கு**

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் மருதனார்மடம் சந்திக்கு அருகில் (ஆஞ்சநேயர் கோயிலுக்கு முன்பாக) 4100 சதுரஅடி விஸ்தீரணம் கொண்டதாகவும் அரச/அரச சார்பற்ற, தனியார் வர்த்தகத் துறையினருக்கு ஏற்றவகையிலும் அமைக்கப்பட்ட புதிய மாடிக்கட்டடத் தொகுதி வாடகைக்கு/ குத்தகைக்கு உண்டு.

தொடர்பு :
*KMAS Engineering Contractors.*
T.P. No. : 021 300 7200, 0776141096, 0776012986
e-mail : *suhi123@gmail.com*
(3633) (34)

**மரண அறிவித்தல்**

*முத்துவேலு செல்வரத்தினம்*

1 ஆம் வட்டாரம் அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்துவேலு செல்வரத்தினம் நேற்று(28.04.2011) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துவேலு - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கவிதா, மற்றும் கவிதாசன், சபிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் ரூபினி (ஆசிரியை அல்லைப் பிட்டி பராசக்தி வித்தியாலயம்) காலஞ்சென்ற ரட்ணகுமார் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் இராசரத்தினம், வீரசிங்கம், கோபாலகிஸ்ணன் (நவரத்தினம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நிதுஜன், நிலவன், கிருத்திகன், பிரணவன், பிரசாந்தன், பிரசன்னா, பிரவீணா, பிருத்தினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.04.2011) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்லைப்பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*1 ஆம் வட்டாரம்,*
*அல்லைப்பிட்டி.*
(3622)
தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

**கண்ணீர் அஞ்சலி**



எமது குருநாதரும் நாடறிந்த வயலின் வாத்தியக் கலைஞருமான வித்துவான்

*ஆர்.எஸ். கேசவமூர்த்தி*

அவர்களின் திடீர் மறைவு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமல்ல இசை உலகுக்கே ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு என்றும் அவர் அமைதியுடன் நல்லூரான் திருவடிகளில் நிலைத்திருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பணிகின்றோம்.

திரு.திருமதி அரவிந்தன்,
திரு.திருமதி அகிலன்.

(3642)

உதயன் தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்வதற்கான சாத்தியம் உள்ளது.

# சங்கிலி இழுவை வலைப் பாவனைக்கு குடாக் கடலில் ஜூன் மாதம் முதல் தடை

## சின்னக் கண் வலையும் பயன்படுத்த முடியாது

யாழ்ப்பாணம், ஏப்.29

யாழ்.குடா கடல் நீரேரிப் பகுதியில் சங்கிலி இழுவை வலை மீன்பிடித் தொழிலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி மேலும் சில சட்ட ஒழுங்கு முறைகளும் மறு சீரமைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தடை மற்றும் சட்ட மறுசீரமைப்பு என்பன எதிர் வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்தப்படவுள்ளன.

யாழ்.குடா கடலில் மீன் பிடியில் ஈடுபடும் மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கான சட்ட மறுசீரமைப்பு மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான கூட்டமொன்று யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்திலேயே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக யாழ்.கடற்தொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தெரிவித்தவை வருமாறு:-

சங்கிலி பயன்படுத்தி மீன் பிடிக்கப்படும் இழுவை வலைப் பாவனையால் கடற்படுக்கையில் உள்ள வளங்கள் அழிக்கப்படுகின்றன. இதனால் மீன் இனப்பெருக்கம் செய்வதும் தடுக்கப்படுகின்றது. இதனால் இந்த முறை மீன்பிடி தடை செய்யப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மீன் பிடிப்பதற்குச் சின்னக்கண் வலையைப் பயன்படுத்தி வந்தனர். இதுவும் பாதிப்பைத் தருவதனால் சின்னக் கண் வலையைப் பயன்படுத்துவதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

8 முதல் 13 முழம் நீளமான சிறகுவலைகளே பயன்படுத்தப்படல் வேண்டும். அது மட்டுமன்றி ஒரு குடும்பத்தினர் இரண்டு கட்டம் நான்கு 'பீஸ்' வலைகளையே பயன்படுத்த வேண்டும். இதற்கு அதிகமான எண்ணிக்கையில் பயன்படுத்தலாகாது.

முன்னர் சில குடும்பத்தினர் 80 வரையான இறால் கூடுகளைப் பயன்படுத்தி வந்தனர். இது குறைக்கப்பட்டு ஒரு குடும்பத்தினர் 4 இறால் கூடுகளையே பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடா கடல் நீரேரிப் பகுதியில் சில இடங்களில் ஆறுகள் பாய்கின்றன. அதனை மறித்து வலை பாய்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தடை மற்றும் நடைமுறைகள் தொடர்பாக நேற்றைய கூட்டத்தில் மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடிய பின்னர் முடிவுகள் எடுக்கப்பட்டன.

இவற்றை எழுத்து வடிவில் கொண்டுவந்த பின்னர் எதிர் வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் அமுல்படுத்த தீர்மானித்துள்ளோம் - என்றார்

இந்தக் கூட்டத்தில் கடற்றொழிலாளர் சங்க சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் மற்றும் 'ஜெய்க்கா' நிறுவன உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(த-4)

# உதயனை தடைசெய்யும் கடிதம் வாபஸ்

யாழ்ப்பாணம்,ஏப்.29

உதயன் பத்திரிகையை யாழ். மாநகர சபை வளாகத்துக்குள் கொண்டுவருவதைத் தடைசெய்வதாக யாழ்.மாநகர சபையின் கடந்த மாதக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவித்து மாநகரசபையின் திணைக்களப் பகுதிகளுக்கு அறிவித்தல் கொடுத்தது தற்செயலானது என மாநகர முதல்வர் யோகேஸ்வரி நேற்றுத் தெரிவித்தார்.

அந்த அறிவித்தலை தான் வாபஸ் பெறுவதாகவும் நேற்றைய கூட்டத்தில் முதல்வர் தெரிவித்தார்.

கடந்த மாதக்கூட்டத்தில் உதயன் பத்திரிகையைத் தடைசெய்வது குறித்து எந்த வித தீர்மானமும் நிறைவேற்றப்படவில்லை என எதிரணியினர் நேற்றுச் சுட்டிக்காட்டியதை அடுத்தே முதல்வர் இந்த அறிவித்தலை தான் வாபஸ் பெற்றுக்கொள்வதாக நேற்றுச் சபையில் அறிவித்தார்.

(த-7)

# நாளை மின் தடை

யாழ்ப்பாணம்,ஏப்.29

உயரழுத்த மின்மார்க்கங்களில் கட்டமைப்பு வேலைகள் மேற்கொள்ளவுள்ளதால் நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மின்தடை ஏற்படவுள்ளது.

சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என இலங்கை மின்சாரசபை மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(த)

# மாநகர சபையின் கீழ்வரும் விடயம் மட்டுமே பேசப்படும்

## நேற்றைய கூட்டத்தில் தீர்மானம்

எதிர்காலத்தில் நடைபெறும் மாநகர சபைக் கூட்டங்களின் போது சபை தனது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள விடயங்கள் பற்றியே பேச வேண்டும் எனவும், அரசியல் பேசுவதை முழுமையாகத் தவிர்ப்பது எனவும் யாழ்.மாநகர சபையின் உறுப்பினர்கள் நேற்று ஏகோபித்த முடிவெடுத்தனர்.

நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானத்தை உறுப்பினர்கள் எடுத்தனர். இதன் பின்னர் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பிற்பகல் நடந்த அமர்வில் நகரின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் அநேகமான திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை என்பது குறித்துமே உறுப்பினர்களின் பேச்சு இடம்பெற்றிருந்தது.

## ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை

# விசாரணை தேவை - கூட்டமைப்பு அது அவசியமற்றது - ஈ.பி.டி.பி

யாழ்ப்பாணம், ஏப்.29

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பான விசாரணை தேவையானது. யுத்தத்தின் இறுதியில் நடைபெற்ற சம்பவங்கள் யாரால் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அது மனித உரிமை தொடர்பான விடயம் என யாழ்.மாநகர சபை உறுப்பினர் மு.றெமிடியஸ் நேற்றைய யாழ்.மாநகர சபைக் கூட்டத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

முன்னதாக ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பான விசாரணைகள் அவசியமற்றது எனவும், அது மக்களைப் பாதிக்கும் எனவும், அபிவிருத்திகளைத் தடைப்படுத்தி மீண்டும் 60 வருடங்கள் நாம் பின் செல்ல வேண்டியேற்படும் எனவும் ஆளும்தரப்பு உறுப்பினர் மங்களநேசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்துக் கூறிய உறுப்பினர் றெமிடியஸ்,

அமெரிக்கப் பாணியில் ஜனநாயக முறையில் நடக்கும் ஒரேயொரு இடம் இலங்கையில் யாழ்ப்பாணம் மாநகர சபை மட்டுமே. பத்திரிகைகள் மக்களைத் தவறான வகையில் திசை திருப்பக் கூடியதாகச் செய்திகளை வெளியிடக் கூடாது. கடந்த பொதுக் கூட்ட முடிவில் நான் கூட்டத்துக்கு வந்திருந்ததாகவும் நேற்று யாழ்.பாடியில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டில் நான் கலந்துகொள்ளவில்லை எனவும் உதயன் செய்தி வெளியிட்டிருந்தது.

நான் அரசியல் கைதிகள் வழக்குத் தொடர்பாக எனது கடமையைச் செய்ய வேண்டியிருந்ததால் கடந்த கூட்டத்தில் முழுமையாகக் கலந்துகொள்ளமுடியவில்லை. நேற்றுமுன்தினம் நடைபெற்ற (புதன்கிழமை) செய்தியாளர் மாநாடு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. பத்திரிகையாளர்கள் என்னுடன் நேரில் தொடர்புகொண்டு இது தொடர்பாகக் கேட்டிருக்கலாம். கட்சிகள் பல இருந்தாலும் ஒரு நல்ல மனப்பான்மையுடன் எல்லோரும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும் - எனவும் கேட்டுக்கொண்டார்.

ஐ.நா. அறிக்கை தொடர்பாக மங்களநேசனின் கூற்றுக்கு எதிரணியினர் ஆட்சேபம் தெரிவித்தனர்.

(த-7)

# ஈ.பி.டி.பி.உறுப்பினர் மன்னிப்புக் கோரினார்

யாழ் மநகரசபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினத்தை விமர்சிக்கும் வகையில் நேற்று வியாழக்கிழமை சபைக் கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னதாக துண்டுப்பிரசுரம் ஒன்று சகல உறுப்பினர்களின் பார்வைக்கும் வைக்கப்பட்டிருந்தது.

யார் இந்த விந்தன்? என்ற தலைப்பில் மயிலணியைச்சேர்ந்த அருணகிரி என்பவரின் பெயரில் வெளியிடப்பட்டிருந்த இந்தப் பிரசுரம் குறித்து சபையில் காரசாரமான விவாதம் இடம் பெற்றது. துண்டுப்பிரசுரம் யாரால் வெளியிடப்பட்டது? எவ்வாறு கூட்ட மண்டபத்துக்குள் கொண்டு வந்து வைக்கப்பட்டது? என்ற விபரத்தை எடுத்துக்கூறவேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விடாப்பிடியாக நின்றனர்.

இந்தப் பிரசுரம் ஒரு பெண் மணியினால் வழங்கப்பட்டது என்பது தனக்கு தெரியும் என விந்தன் சபையில் குறிப்பிட்ட போது அந்தப் பெண் நாணா? அல்லது மேரியம்மாவா? என முதல்வர் விந்தனைப் பார்த்துக் கேட்டார்.

கூட்டம் தொடங்கி முடியும் வரை ஆராய்ச்சிக்குரிய பொறுப்பு இது எனவும், நாளைக்கு ஒரு துப்பாக்கி அல்லது குண்டும் உள்ளே வரலாம் தானே, எனக் குறிப்பிட்ட உறுப்பினர் பரஞ்சோதி இதற்குப் பதில் சொல்ல வேண்டிய பொறுப்பு ஆராய்சிக்கானது எனக் கூறினார்.

இந்த விடயம் குறித்துத் தான் கவனத்தில் எடுத்துப் பதில் தருவதாக முதல்வர் குறிப்பிட்டார். இத்துண்டுப் பிரசுரம் குறித்து மாநகர சபையின் ஆளும்கட்சி உறுப்பினர் மங்களநேசன் வருத்தம்தெரிவித்தார்.

(த-7)

# நிகழ்வுகள்

### கலை விழாவும்

காரைநகர், ஏப்.29

காரைநகரில் அமைந்துள்ள காரை கிட்ஸ் பார்க் பாலர் பாடசாலையின் ஆண்டு விழாவும் கலை விழாவும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு காரை நகர் யாழ்ற்றன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளத்து.

ஆசிரியர் க.நேத்திரானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக தொழிலதிபர் ஈ. எஸ்.பி. நாகரத்தினம், யாழ்ரன் கல்லூரி அதிபர் தி.சோம சேகரம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(ற-250)

### மேதின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப்.29

யாழ். தொழிலாளர் ஒத்துழைப்புக் குழுவின் ஏற்பாட்டில் மேதினச் சிறப்பு நிகழ்வுகள் நாளைமறுதினம் மு.ப 10 மணிக்கு இல.33, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் உப தலைவர் சா.தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்களின் விசேட உரைகள் இடம்பெறவுள்ளன.

(ற)

### கலந்துரையடல்

யாழ்ப்பாணம், ஏப்.29

ஓம் பதஞ்சலி யோககேந்திர நிலையத்தினால் நடத்தப்படும் யோகாசனமும் தளர்வு பயிற்சி வகுப்பில் "யோகமும் வாழ்வும்" என்னும் தலைப்பில் கலந்துரையாடல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

யாழ்.பரிபாலன சபை மண்டபத்தில் மேதினத்தன்று காலை 8 மணி முதல் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் ஆர்வமுடைய அனைவரும் கலந்து கொள்ள முடியும்.

அத்துடன் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 6.15 மணி முதல் யோகாசனப் பயிற்சிகள் இடம்பெறுகின்றன என பயிற்சி ஆசிரியர் ந. கோணேஸ்வரன் அறிவித்துள்ளார்.

(ற-313)

## கோத்தபாயவை விசாரிக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை விசாரிக்க அமெரிக்க சட்டத்துறை தீர்மானித்துள்ளது.

தனிப்பட்ட விஜயமொன்றின் பிரகாரம் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தற்போது அமெரிக்காவில் தங்கியிருக்கின்றார். அமெரிக்க குடியுரிமை பெற்றுள்ள அவர் அந்நாட்டுக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தியே அமெரிக்காவுக்கு சென்றுள்ளார். நிபுணர் குழு அறிக்கையில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீதும் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விசாரணை தொடர்பான அழுத்தம் மேலும் பிரச்சினையை உருவாக்கும்

இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு, வெளிநாட்டுத் தரப்பினர் அழுத்தம் கொடுத்து வருவது, இலங்கையில் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தும் என, த வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் இலங்கை தொடர்பிலான அறிக்கை குறித்து, "தவோல் ஸ்ட்ரீட் ஜேர்னல்" வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை வெளியாகி உள்ள நிலையில், இலங்கைக்கு எதிராக யுத்தக் குற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகிறது. எனினும் இந்த அறிக்கை, யுத்தக் குற்றம் சார்ந்த விடயங்களிலேயே அவதானம் செலுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக இலங்கையின் ஜனாதிபதி தவணைமுறை மாற்றப்பட்டமை உள்ளிட்ட அரசியல் சார்ந்த விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை.

ஏற்கனவே இலங்கையில் இடம்பெற்ற வன்னி யுத்தம் குறித்து விமர்சித்து வந்த ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க இனந்தெரியாதவர்களால் கொல்லப்பட்டார்.


அரசுக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்ட உயிரோவியர் பிரகீத் எக்னலிகொடவும் கடத்தப்பட்டு, ஒரு வருடத்துக்கு மேலாகியும் இன்னும் கிடைக்கவில்லை.

இதேவேளை வன்னி யுத்தத்தில் முக்கிய பங்கு வகித்த சரத் பொன்சேகா, அரசாங்கத்துக்கு எதிரான போக்கினை கடைப்பிடித்ததைத் தொடர்ந்து, தற்போது திட்டமிட்டு சிறைவைக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறான நிலையில், வன்னி யுத்தத்தைத் தொடர்ந்து இலங்கை அரசு பிழையான, ஜனநாயகத்தைமீறிய வழி ஒன்றை பற்றிச்செல்வதாக "தவோல்ஸ்ட்ரீட் ஜேர்னல்" தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் வன்னி யுத்தத்தில் இடம்பெற்ற குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில், சர்வதேச அழுத்தங்கள் அதிகரிக்கும்போது, அது மேலும் பிழையான செயற்பாடுகள் இடம்பெறுவதற்கு வழிவகுக்கலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-10)(தமிழ்வின்)

# தளபதி ரமேஸ் சித்திரவதையின் பின் சீருடை அணிவித்துச் சுட்டுக்கொலை



இறுதிக்கட்டப் போரில் சரணடைந்த தளபதி ரமேஷ் சித்திரவதைகளின் பின்னர் சீருடையணிந்து சுட்டுக் கொல்லப்பட்ட படம் தற்போது வெளியான போர்க்குற்ற ஆதாரப் படங்களில் இடம்பெற்றுள்ளது.

தளபதி ரமேஷ் இராணுவத்திடம் சரணடைந்த பிறகு அவர் நெருக்கடியான விசாரணைக்கு உட்படுத்தப்படும் வீடியோவும், அவர் இராணுவக் கனரக வாகனமொன்றில் வைத்து விசாரிக்கப்படும் வீடியோவும் என இரண்டு வீடியோக்கள் கடந்த காலங்களில் வெளிவந்திருந்தன.

எனினும் தளபதி ரமேஷ் எங்கே என்ற அவரது குடும்பத்தினரின் விசாரிப்புக்கு அவரைத் தாங்கள் காணவில்லை என்ற பதிலே தெரிவிக்கப்பட்டது. இருந்தும் இவர் நடேசன், புலித்தேவன் ஆகியோருடன் இணைந்து சரணடைந்தார் என்ற கருத்தும் கூறப்பட்டது.

இந்த நிலையில் நேற்று வெளியாகியுள்ள மற்றொரு தொகுதி யுத்தக் குற்றப் படங்களில் ஒருவர் ரமேஷ் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இது ரமேஷ் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் மிகவும் கொடூரமான முறையில் சுட்டுக் கொல்லப்பட்டதை எடுத்துக் காட்டுகிறது. (த-10) (தமிழ்வின்)

## "விசாரணை அவசியம்" என்ற குறிப்புடன் பான் கீ மூன் அறிக்கையில் கையெழுத்திட்டார்

நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று அவசியமானது என்பதாக அவ்வறிக்கையில் பான் கீ மூன் சுருக்கக் குறிப்பெழுதிக் கையெழுத்திட்டுள்ளார்.'' சர்வதேச விசாரணையொன்று அவசியமானது'' என்ற குறிப்புடனேயே அவர் நிபுணர் குழுவின் அறிக்கையை ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி பாலித கொஹனவிடமும் கையளித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவ்வாறான குறிப்பொன்று இடப்பட்டதன் மூலமாக ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளர் நாயகம் பான் கீ-மூன் இராஜதந்திரிகள் மட்டத்தில் பலவந்தமான அழுத்தமொன்றைப் பிரயோகிக்க முற்பட்டுள்ளதாகவும் அரசாங்கத் தரப்பு குற்றம் சாட்டியுள்ளது. இத்தகவல்களை திவயின பத்திரிகை செய்தியாக வெளியிட்டுள்ளது. (த-10) (தமிழ்வின்)

## நிபுணர்குழு அறிக்கைக்கு எதிராக நடைபயணம்

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக இலங்கையின் சினிமாக் கலைஞரொருவர் தனியாக நடைபயணப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளார். தென்னிலங்கையின் மாத்தறையில் அமைந்துள்ள வரலாற்றுப் புகழ்மிகு அரச மரத்தடியில் நேற்று காலை ஆரம்பமாகிய நிபுணர் குழுவுக்கு எதிரான அவரது நடைபயணம் கொழும்பில் முடிவடைந்தது.

''இலங்கை எங்கள் நாடு, பான் கீ மூனுடையதல்ல'' என்ற பதாகையுடன் அவர் தனது நடைபயணத்தை ஆரம்பித்திருந்தார்.

### 2002ஆம் ஆண்டு மிருசுவில் எண்மர் படுகொலை

# கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதிகள் நேற்றுச் சம்பவ இடத்தில் விசாரணை

யாழ்ப்பாணம், ஏப்.29

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதிகள் மூவர் அடங்கிய குழுவினர் நேற்றுக் காலை மிருசுவில் பகுதியில் 2002 ஆம் ஆண்டு எண்மர் படுகொலை செய்யப்பட்டுச் சடலங்கள் புதைக்கப்பட்ட இடத்துக்கு நேரில் விஜயம் செய்து விரிவான விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட ஐந்து இராணுவத்தினரும் சம்பவ இடத்துக்கு அழைத்துவரப்பட்டிருந்தனர்.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதிகளான தீபாலி விஜயசுந்தர, சுனில் ராஜபக்ஷ, டபிள்யூ.டி.எம். பி.பி.வராவெல, நீதிமன்றப் பிரதான பதிவாளர் ஏ.எச்.அதிகாரிய, சட்டத்தரணிகள், சட்டமா அதிபர் திணைக்கள உயர் அதிகாரிகள், எதிராளிகள் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணிகள், யாழ்ப்பாண மாவட்ட நீதிவான் அ.பிறேம்சங்கர், சாவகச்சேரி மாவட்ட நீதிவான் மா.கணேசராசா, நீதிமன்றங்களின் பதிவாளர்கள் உள்ளிட்டவர்கள் இந்தக் குழுவில் அடங்கியிருந்தனர்.

கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய இந்தக் குழுவினர் மிருசுவில் பகுதியில் 8 பேர் படுகொலை செய்யப்பட்டுச் சடலங்கள் புதைக்கப்பட்டிருந்த பழுதடைந்த மலசலக் குழியை மற்றும் முதலில் குழுவினர் பார்வையிட்டு விசாரணைகளை ஆரம்பித்தனர்.

மக்கள் குடியிருப்புகள் மிகக் குறைவாக உள்ள அந்தப் பகுதி பற்றைகள், புதர்களால் மூடிக் காணப்பட்டது. அந்தப் பகுதியில் சுமார் இரண்டு மணிநேரம் விசாரணைகளை நீதிபதிகள் மேற்கொண்டனர்.

அத்துடன் அந்தக் காலப்பகுதியில் பெண் ஒருவர் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்ட மேலும் ஒரு இடத்தையும் இந்தக் குழுவினர் பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்டனர். எண்மர் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில் படுகொலை செய்யப்பட்ட பெண்ணும் புதைக்கப்பட்டிருந்தார். புதர்களால் மூடிக் காணப்பட்ட அந்தப் பகுதிக்குக் குனிந்தபடி சென்றே நீதிபதிகள் விசாரணைகளை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாண மாவட்ட நீதிவான் அ.பிறேம்சங்கர், பதில்நீதிவான் எஸ்.கந்தசாமி, கொடிகாமம் பொலிஸ் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றித் தற்போது வெள்ளவத்தைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக உள்ள சமரக்கோன் பண்டார ஆகியோர் சம்பவ இடத்தை அடையாளம் காட்டினர்.

சம்பவ இடங்கள் மீற்றர் நாடா கொண்டு அளக்கப்பட்டுப் பதியப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

மிருசுவில் பகுதிக்குச் செல்ல முன்னர் 2002 ஆம் ஆண்டு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை தம்பசிட்டியில் இயங்கிய அலுவலகக் கட்டடத்துக்கு இந்தக்குழுவினர் விஜயம் செய்தனர். அந்தக் காலப்பகுதியில் படுகொலை தொடர்பான வழக்கு இடம்பெற்ற பகுதி உள்ளிட்ட அந்த நீதிமன்றக் கட்டடம் அமைந்துள்ள விதம் தொடர்பாக அந்தக் குழுவினர் பதிவுகளை மேற்கொண்டனர்.



இந்த நீதிபதிகள் குழுவுக்குக் கடற்படையினர் மற்றும் பொலிஸார் விசேட அதிரடிப் படையினர் பலத்த பாதுகாப்பு வழங்கினார்கள்.

மிருசுவில் விசாரணைகளை முடித்துக் கொண்ட இந்தக் குழுவினர் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றுக்கும் நேற்று மதியம் விஜயம் செய்து மாவட்ட நீதிவான் மா.கணேசராசாவுடன் கலந்துரையாடினார்கள். இன்று காலை இந்தக் குழுவினர் கொழும்புக்குத் திரும்புகின்றனர்.

அடுத்த மாதம் 9 ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றில் இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (த-14-207)

A/L 2013 மாணவர்களுக்கு இறுதிச் சந்தர்ப்பம்

A/L 2013 ஆரம்பம்:- 30.04.2011 சனி 8.00மணி
புதிய பிரிவு
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும். இறுதிப் பிரிவு
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

# சுரேஸ் எம். பியின் செயலாளர் மீது தாக்குதல்: ஸ்ரீ ரெலோ கண்டனம்

யாழப்பாணம்,ஏப்.29

தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனின் செயலாளர் தாக்கப்பட்டமையைச் சிறி தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (சிறிரெலோ) வன்மையாகக் கண்டித்துள்ளது.

செயலாளர் அன்னலிங்கம் உதய குமார் நேற்றுமுன்தினம் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

ஜனநாயகம் நிலவுவதாக கூறப்படும் இந் நாட்டில் ஜனநாயக ரீதியாகச் செயற் படும் நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் மீது தாக்குதல் மேற் கொள்ளப்பட்டிருப்பதானது நாட்டில் ஜனநாயகம் இன்று வரை உறுதிப் படுத்தப்படவில்லை என்பதனையே காட்டுகின்றது என சிறி தமிழ் விடுதலை இயக் கம் வெளியிட் டுள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

(த)

தமிழைப்போல ஆங்கிலம் பேச விரும்புகிறீர்களா?
ஆசிரியர்கள், அலுவலர்கள், வங்கியாளர், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், இளைஞர், யுவதிகளுக்கான
MyWay இன் சனி, ஞாயிறு 3 மாத ஆங்கில பயிற்சிநெறி
தமிழைப்போன்று சரளமாக ஆங்கிலம் பேசுவதற்கான டிப்ளோமா பாடநெறி
புதிய பிரிவு ஆரம்பம் : 30.04.2011 சனிக்கிழமை
பயிற்சிக்கான மொத்த சலுகைக்கட்டணம் : 3000/-
பிரிவுகள் : காலை 8-9, 9-10, 10-11, 11-12 மாலை 2-3, 3-4, 4-5, 5-6
ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்
MyWay 182, Stanley Road, Jaffna
Opposite to Ceylinco Insurance
077 33 63 456, 021 2229505

ஐடியல் அக்கடமி
சண்டிலிப்பாய்
அன்றும், இன்றும், என்றும் மாணவர்களை உயர்கல்விக்கு தயார்படுத்தும் ஒரே நிறுவனம்.
A/L 2013
கலை, வர்த்தகப்பிரிவு
*தமிழ் - த.அஜந்தகுமார். (வடமாராட்சியின் முன்னணி ஆசிரியர்)
*இந்துநாகரிகம் - இ.ஸ்ரீஸ்
*வரலாறு - R.S.சந்திரன்
*அரசியல் - K.கோகுலன்
*புவியியல் - K.ஆனந்தன்
*நாடகம் - K.சுதா
*அளவையியல் - E.S.பவன்
*கிறிஸ்தவம் - S.ஜோன்சன்
ஆரம்பம் 30.04.2011(சனி) நேரம். 4.00 PM
வர்த்தகப் பிரிவு
பொருளியல் - S.ஜெயக்குமார்(ஜெயா)
கணக்கீடு - S.சீலன்
வணிகக்கல்வி - S.பிரதீபன்
*தனிப்பாட அனுமதிகளும் உண்டு.
* மானிப்பாய் ஐடியல் அக்கடமியிலும் கலைப்பிரிவு வகுப்புகள் நடைபெறுகின்றன.
நிர்வாகி.

BITSMANS கல்வி நிறுவனம், மானிப்பாய்.
புதிய பிரிவு
A/L 2013
கலை ★ வர்த்தகம் ★ கணிதம் ★ உயிரியல் வகுப்புகள்
ஆரம்பம்:- 30.04.2011 சனி 1.00pm

வீடு வாடகைக்கு
சகல வசதிகளுடன் கூடிய வீடு வாகன தரிப்பிட வசதிகளுடன் வாடகைக்கு உண்டு. இல.65, அம்மன் வீதி, கொக்கு வில் கிழக்கு.(சம்பியன் லேன், இராம கிருஷ்ணன் பாடசாலை அருகாமை), கொக்குவில். T.P:- 0776131833, 0727467703.

A/L வரலாறு-2013
★ புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
★ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.
வரலாறு யாழ். பிரபல ஆசிரியர் M.பத்மன் M.A.
கற்பிக்கும் இடங்கள்
D.M.I யாழ்ப்பாணம் | BITSMANS மானிப்பாய் | உயர்கல்விக்கல்லூரி குப்பிளான் சந்தி.
ஆரம்பம்:- 30.04.2011 (சனிக்கிழமை)
New A.A.C. சுன்னாகம்.

வீடு விற்பனைக்கு
K.K.S வீதி, கொக்குவில் 3ஆம் கட்டை, மெயின் வீதி யில் குமார் தையல் கடைக்குத் தெற்குப் பக்கமாக அமைந்த 5 அறைகள், குளியலறை, குசினி, ஹோல், தனியான கிணற்றுடன் 2¼ பரப்பில் அமைந்த கல்வீடு உடன் விற்பனைக் குண்டு.. தொடர்பு:- T.P. NO:- 0778449687.

சபரிமலை சிறி ஐயப்பன் ரேடர்ஸ்
இல.63, ஸ்ரேசன் வீதி, கிளிநொச்சி.
பணியாளர் தேவை
01) சிட்டை எழுதுனர் 01 ஆண்
02) விற்பனையாளர் 02 ஆண்
தகைமை
1. க.பொ.த சாதாரண தரம் O/L
அனுபவம் வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
2. கல்வி கற்றவர் 08
அனுபவம் வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
*தங்குமிட வசதியும் உண்டு.
T.P 0213208013 - 0717354308.

PHYSICS
N. Edision
A/L 2011
Radiation
Sat, Sun-5.30-6.30pm
ஆரம்பம்:- 30.04.2011(sat)
காந்தப்புலம்
Sun-5.30- mon-5.00pm
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

ஆசிரியர்கள் தேவை
உயர்தரப் பிரிவுக்கு (A/L) கிறிஸ்தவம், விவசாயம், Media கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை.
தொடர்பு:- 0774696695.

யாழ். மாவட்ட வீடியோ, CD விற்பனையாளர் அனைவருக்கும்
யாழ். மாவட்ட வீடியோ பட CD விற் பனை உரிமையாளர் அனைவரையும் இன்று (29.04.2011) கீழ்வரும் நிறுவனத் தில் உங்கள் பதிவுகளைச் செய்யுமாறு அன் புடன் கேட்டுக்கொள்கின்றோம்.
சூபன் மல்ரி சென்ரர் இல.1, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
சதீஸ் ஒலிப்பதிவு, படப்பிடிப்பு கலையகம். இல. 25, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

ஆர்க் என்ரபிறைசஸ்

தானியங்களை உடைத்து, தீட்டி, அரைத்து, நொறுக்கி, பிழியும் இயந்திரங்கள் நம்பமுடியாத விலையில்.
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
2 வருட உத்தரவாதம்.

வேலை ஆள் தேவை
கிளிநொச்சியில் அமைந்துள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ஆங்கில அறிவுடைய பெண் எழுதுவினைஞர் (Clerk) தேவை. கிளிநொச்சியில் வசிப்பவர்கள் விரும்பத் தக்கது. தொடர்பு:- P.N.P. TVS கரடிப்போக்கு, கிளிநொச்சி. 0772220108.

முகவர் தேவை
Elephant House ஐஸ்கிறீம் நடமாடும் சேவையை நடத்துகின்ற முகவர் ஒருவர் அதனை புதிய முகவர் ஒருவருக்கு விற்பனை செய்ய விரும்புகின்றார்.
இல. 56, மணிக்கூட்டு வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.
முகவராக விரும்புவோர் தொடர்புகொள்ளவும்-
T.P:- 0773502276

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்
UK Student Visa
மூலம் செல்பவர்களுக்கான ஆங்கிலப் பரீட்சை (B1)
BATCH MAY 2ND 9.00 AM
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கில பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British high Commission னால் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது நிறுவனத்தினாலேயே பரீட்சைக்குத் தோற்றவும் முடியும்.
Settelment Visa Spouse Visa (கணவன் - மனைவி)
மூலம் UK செல்வதற்கான ஆங்கிலப் பரீட்சை (A1) மிகவும் இலகுவானமுறையில் எமது நிறுவனத்தினால் நடாத்தப்படுகிறது. எமது நிறுவனத்திலேயே பரீட்சைக்குத் தோற்றவும் முடியும்.
BATCH MAY 2ND
Quick Learning Course திங்கள் - வெள்ளி வரை
Spoken English With Grammar
புதிய தொழில் நுட்பத்திறகமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.
Duration: 1 Month
Rs. 3000.00
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
(ஆரியகுளச் சந்திக்கு அருகாமையில்) (ஜெசி Hotel மேலே)
Tel:021 2224550 HotLines: 0777222422/ 0714299935
Date: 23rd May
Morning 9:00 a.m Evening 3:00 p.m

மூன்றாவது பிறந்த நாள் வாழ்த்து

அச்சுவேலி. (சி/577988)
HAPPY BIRTHDAY
அச்சுவேலியில் வசிக்கும் செந்தில்குமார் அனுராதா தம்பதியினரின் செல்வப் புதல்வி
செல்வி கபிஸ்னா
தனது மூன்றாவது பிறந்த தினத்தை இன்று (29.04.2011) வெள்ளிக்கிழமை மிகவும் விமரிசையாக தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை இறை அரு ளுடன் எல்லாச் சிறப்பும் சௌபாக்கியங்களும் பெற்றுப் பல் லாண்டு காலம் பல்கலையும் பெற்று சிறப்புடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.
வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, மாமாமார்கள், மாமிமார்கள், உறவினர்கள்.

50ஆவது பிறந்த தின வாழ்த்துக்கள்

(சி/577991)
HAPPY BIRTHDAY
தனது 50ஆவது அகவையைப் பூர்த்தி செய்யும் சாரங்கா நகைமாட உரிமையாளர்
திரு. ப. சிவபாஸ்கரன்
அவர்களை இறை அருளுடன் என்றும் இனிதே பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
மனைவி, பிள்ளைகள்,
சி. சாரங்கன், சி.வைஷ்ணவி,
சி.வைதேகி.
483, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.